பக்கங்கள்: இருபத்துநான்கு

# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 25 வள்ளுவர் ஆண்டு 2041 ஐப்பசி 13 சனிக்கிழமை (30.10.2010) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 338

# தமிழ் அரசியல் கைதிகள் தொடர்பில் ஆராய்வதற்கு 10 பேர் கொண்ட குழு

## அதன் அறிக்கை கிடைத்ததும் நடவடிக்கை என்கிறார் அமைச்சர் டியு குணசேகர

கொழும்பு, ஒக்ரோபர் 29

**விடுதலைப்புலிகள் மற்றும் புலிகளுடன் தொடர்பு வைத்தவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பாகப் பரிசீலனை செய்து சிபாரிசுகளைச் சமர்ப்பிக்கவென குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இந்தக் குழுவில் மூத்த அரச சட்டத்தரணிகள் உள்ளடக்கப்பட்டுள்ளனர்.**

வழக்கு விசாரணைகளோ, குற்றச்சாட்டுக்களோ இன்றி நீண்ட நாள்களாகச் சிறையில் அடைக்கப்பட்டிருக்கும் தமிழ் அரசியல் கைதிகள் விடயத்தில் இதன் மூலம் விரைவில் தீர்வு கிடைக்கும் என புனர்வாழ்வளிப்பு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் டியு குணசேகர 'உதயனு'க்குத் தெரிவித்தார்.

நேற்று 'உதயன்' செய்தியாளர் அமைச்சரைச் சந்தித்து உரையாடியபோதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

''அரச படைகளுடன் நேரடியாகச் சண்டையிட்டு சரணடைந்த முன்னாள் போராளிகளை புனர்வாழ்வு மற்றும் பயிற்சிகளை வழங்கி விடுதலை செய்கின்றீர்கள். அதே வேளை, புலிகளுக்குப் புகலிடம் அளித்தனர். உணவு கொடுத்தனர். ஆதரவளித்தனர் எனச் சந்தேகத்தின் பேரில் நீண்ட காலமாகச் சிறையில் அடைத்து வைக்கப்பட்டிருக்கும்

அமைச்சருடனான முழுமையான செவ்வி நாளைய உதயனில்

தமிழ் அரசியல் கைதிகள் தொடர்பாக எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லையே; இது ஏன்?'' என்று 'உதயன்' செய்தியாளர் கேள்வி எழுப்பினார்.

''இவ்விடயத்தில் உள்ள உண்மைத் தன்மையையும், சட்டச்சிக்கல்களையும் முதலில் புரிந்துகொள்ளவேண்டும்.

சரண் அடைந்தவர்கள் சந்தேகப் போர்வழிகள் அல்லர். நேரடியாக குற்றத்தை ஒப்புக்கொண்டு சரண் அடைந்தனர். இதனால் எம்மால் மன்னிப்பு வழங்கப்பட்டது. சிறைச்சாலைகளில் அடைத்து வைக் கப்பட்டிருப்பவர்கள் மீது வழக்கு தாக்கல் செய்யப்படவில்லை. குற்றப்பத்திரிகை வழங் கப்படவில்லை. விசாரணைகளும் நடத்தப்படவில்லை. இதில் பல சட்டச் சிக்கல்கள் இருக்கின்றன. எனவே சட்டமா அதிபருடன் பல சுற்றுப் பேச்சுகளை நடத்தியுள்ளேன். இதன் காரணமாக சிரேஷ்ட அரசசட்டத்தரணிகள் பத்துப்பேரைக்

(04ஆம் பக்கம் பார்க்க)

## மதுபானம், சிகரெட் விலைகள் உயர்வு

கொழும்பு, ஒக்.30

மதுபானம் மற்றும் சிகரெட் விலைகள் நேற்று அதிகாலை முதல் அதிகரிக்கப்பட்டுள்ளன என கலால் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதன்படி ஒரு லீற்றர் உள்நாட்டு, வெளிநாட்டு மதுபானத்தின் விலை 50 ரூபாவாலும், ஒரு லீற்றர் பியரின் விலை எட்டு ரூபாவாலும், சிகரெட் ஒன்றின் விலை ஒரு ரூபாவாலும் அதிகரிக்கப்பட்டுள்ளன. (உ-சி)

## துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் பலி

கொழும்பு,ஒக்.30

வெல்லம்பிட்டிய, நவகமுவ வெலிஹேன பிரதேசத்தில் இடம்பெற்ற துப்பாக்கிப் பிரயோகத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்றிரவு இடம்பெற்றது என நவகமுவ பொலிஸார் தெரிவித்தனர்.

(04ஆம் பக்கம் பார்க்க)

## உள்ளே

**தனித் தமிழ் மாவட்டம் இருக்கக் கூடாது என்பதில் அரசு கூடிய கவனம்**
இலங்கையில் எங்குமே தனித் தமிழ் மாவட்டம் இருக்கக் கூடாது என்பதில் அரசாங்கம் உறுதியாக இருக்கின்றது. கோப்பாய் கூட்டதில் சுரேஷ் எம்.பி. பக்கம் 2

**நூலகத்தில் நடந்தது சிறு குழப்பமே... என்கிறார் அமைச்சர்**
நூலகத்தில் இடம்பெற்றது ஒரு சிறிய குழப்பமே. ஊடகங்கள் அதை ஊதிப் பெரிதாக்கிவிட்டன. பக்கம் 3

**முல்லைத்தீவில் உயர் பாதுகாப்பு வலயம் எதுவும் இல்லை.**
அரச அதிபர் கூறுகிறார் பக்கம் 9

## 2009 ஜனாதிபதித் தேர்தல் முடிவுகளை ரத்துச் செய்யக் கோரிய மனு தள்ளுபடி

கொழும்பு,ஒக்.30

ஜனாதிபதித் தேர்தல் முடிவுகளை ரத்துச் செய்யுமாறு கோரி ஜனநாயக தேசியக் கூட்டமைப்பின் தலைவரும், முன்னாள் இராணுவத் தளபதியுமான சரத் பொன்சேகா சார்பில் தாக்கல் செய்யப்பட்ட மனுவை உயர் நீதிமன்றம் நேற்றுத் தள்ளுபடி செய்து தீர்ப்பளித்தது.

பிரதம நீதியரசர் அசோக டி சில்வா தலைமையிலான ஐந்து நீதியரசர்கள் கொண்ட குழு முன்னிலையில் இந்த மனு நேற்று பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இந்த மனுவைத் தள்ளுபடி செய்வதாக நீதியரசர்கள் அறிவித்தனர்.

ஜனாதிபதி சார்பில் சட்டத்தரணி டி.எவ்.விஜேசிங்க நீதிமன்றில் பிரசன்னமாகியிருந்தார். அத்துடன் மனுதாரர் சார்பில் சட்டத்தரணி உபுல் ஜயசூரிய பிரசன்னமாகியிருந்தார்.

சரத் பொன்சேகாவினால் தாக்கல் செய்யப்பட்ட மனுவில் முன்வைக்கப்பட்ட நான்கு விடயங்கள் முழுமையாகப் பூரணப்படுத்தப்படவில்லை எனத் தெரிவித்தே அதனைத் தள்ளுபடி செய்வதாக நீதியரசர்கள் அறிவித்தனர்.

மனு தொடர்பில் தமது தரப்பு

(04ஆம் பக்கம் பார்க்க)

## ரணில் அழைப்பு

கொழும்பு, ஒக். 30

ராஜபக்ஷவை ஆதரிப்பவர்களுக்கு அமைச்சுப் பதவிகளை வழங்கிக் கௌரவிக்கும் அரசு, அவருக்கு எதிராகச் செயல்படுபவர்களுக்கு சிறைத்தண்டனை - அச்சுறுத்துதல் போன்ற ஜனநாயக விரோதச் செயல்களில் ஈடுபடுகின்றது.

அரசின் இவ்வாறான ஏகாதிபத்திய செயற்பாடுகள் மற்றும் ஜனநாயக விரோத நடவடிக்கைகளுக்கு எதிராக ஒன்றிணைந்து செயலாற்ற அனைவரும் முன் வரவேண்டும்.

(04ஆம் பக்கம் பார்க்க)

## சமையல் எரிவாயு, பால்மா விலைகள் மீண்டும் உயரும்

கொழும்பு,ஒக்.30

சமையல் எரிவாயு மற்றும் பால்மா ஆகியவற்றின் விலைகளில் அடுத்த வாரம் மாற்றம் செய்யப்பட உள்ளதாக நுகர்வோர் விவகார அதிகாரசபை தெரிவித்துள்ளது.

நுகர்வோர் விவகார அதிகார சபையின் ஊடகச் செயலாளர் நிப்புன் ஏக்கநாயக்க இதனைத் தெரிவித்தார்.

''சமையல் எரிவாயு மற்றும் பால்மா இறக்குமதி உற்பத்தியாளர்கள் அதன் விலைகளை அதிகரிக்குமாறு கோரி விண்ணப்பித்துள்ளனர். அது குறித்து தற்போது நாம் பரிசீலனை செய்து வருகிறோம். சர்வதேச மட்டத்தில் எரிபொருளின் விலைகளில் ஏற்படும் மாற்றங்களை அடிப்படையாகக் கொண்டு சமையல் எரிவாயுவின் விலைகளில் மாற்றங்கள் கொண்டுவரப்படுகின்றமை (04ஆம் பக்கம் பார்க்க)

### திடீர் சுற்றிவளைப்புத் தேடுதலில்

## தாய்லாந்தில் நூற்றுக்கும் அதிகமான இலங்கைத் தமிழர்கள் கைதாகினர்

கொழும்பு,ஒக்.30

தாய்லாந்தில் மேற்கொள்ளப்பட்ட திடீர் சுற்றி வளைப்புத் தேடுதல் நடவடிக்கையின்போது நூற்றுக்கும் அதிகமான இலங்கைத் தமிழர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் நேற்று முன்தினம் மாலை அந்நாட்டுப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர் என சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

மலேஷியா-தாய்லாந்து எல்லைப் (04ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். நூலகத்திற்கு இராணுவப் பாதுகாப்பு

யாழ்ப்பாணம், ஒக். 30

யாழ். பொது நூலகத்திற்கு நேற்றுப் பகல் முதல் இராணுவப் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது. அத்துடன் சுற்றுலாப் பயணிகள் எவரும் நூலகத்திற்குள் செல்ல அனுமதிக்கப்படவில்லை.

இது தொடர்பாக யாழ்.பொது நூலகத்தின் நூலகர் க.தன பாலசிங்கம் தெரிவித்ததாவது:- நேற்று முற்பகல் 11 மணியில் இருந்து பொது நூலகத்தின் முன்பக்கத்திலும் பின்பக்கத்திலும் இராணுவப் பாதுகாப்புப் போடப்பட்டிருந்தது.

(04ஆம் பக்கம் பார்க்க)




## வடக்கு நில அளவை உதவியாளர் பதவிகளுக்கு ஐவர் மட்டுமே தமிழர்கள்; 95 பேர் சிங்களவர்

### பெரும் அநீதி என்கிறார் செல்வம் எம்.பி.

கொழும்பு,ஒக்.30

வடக்கில் கல்வி கற்ற இளைஞர்கள் தொழில் இன்றித் தவிக்கும்போது வட மாகாண நில அளவை உதவியாளர்களாக 95 சிங்கள இளைஞர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். இது அநீதியானது. - இப்படிக் குற்றம்சாட்டி உள்ளார் வன்னி மாவட்டக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன். காணி அபிவிருத்தி அமைச்சர் ஜனக பண்டார தென்னகோனுக்கு இது தொடர்பில் அவசரக் கடிதமொன்றையும் அனுப்பி வைத்துள்ளார்.

''வடக்கு மாகாண நில அளவை உதவியாளர்களாக நூறு பேர் நியமிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் ஐவர் மாத்திரமே தமிழர்கள். ஏனைய 95 பேரும் தென் பகுதியைச் சேர்ந்த சிங்கள இளைஞர்கள். வடக்கில் தமிழர்களே பெரும்பான்மையாக வசிக்கின்றனர் என்பது உங்களுக்குத் தெரியும். யுத்தம் முடிவுற்ற நிலையில் நூற்றுக்கணக்கான கல்வி கற்ற இளைஞர்கள் தொழிலை எதிர்பார்த்துக் காத்திருக்கின்றனர்.

(04ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல்கலை மாணவர் ஒன்றிய இணைப்பாளர் சிறிகொத்தாவில் வைத்து நேற்றுக் கைது

## ஐ.தே.க. தலைவர்களுடனான சந்திப்பை அடுத்துச் சம்பவம்

கொழும்பு, ஒக்.30

அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் இணைப்பாளர் உதுல் பிரேம ரட்ன நேற்றுக் கைதுசெய்யப்பட்டார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தாவில் வைத்து அவர் கைது செய்யப்பட்டார்.

உதுல் பிரேமரட்ன உட்பட இரண்டு மாணவர்களைக் கைது செய்து நீதிமன்றில் முன்னிலைப்படுத்துமாறு கொழும்பு மேல் நீதிமன் றம் ஏற்கனவே கறுவாத்தோட்டம் பொலிஸாருக்கு உத்தரவு பிறப்பித்திருந்தது.

உயர்கல்வி அமைச்சின் அலுவலகத்தி னுள் அத்துமீறி நுழைந்த குற்றச்சாட்டின் பேரில் கொழும்பு மேல் நீதிமன்ற நீதிவான் ரரிஸ்மி சிங்கப்புலி இந்த உத்தரவைப் பிறப்பித்திருந்தார்.

சிறிகொத்தாவில் ஐ.தே.கவின் பிரதித் தலைவர் கரு ஜயசூரிய, பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க ஆகியோருடனான சந்திப்பை அடுத்தே இவர் கைதுசெய்யப்பட்டார். கொழும்பு கோட்டை நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட இவரை எதிர்வரும் 12 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளது. (சி)



ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தாவில் கட்சியின் பிரதித் தலைவர் கரு ஜயசூரிய மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களான திஸ்ஸ அத்தநாயக்க, ருவான் விஜயவர்தன ஆகியோரை அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினர் நேற்றுச் சந்தித்தனர். இச்சந்திப்பின் பின்பே அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் தலைவர் உதுல் பிரேமரட்ன கைது செய்யப்பட்டார்.

# முல்லைத்தீவில் வழங்கிய லான்ட் மாஸ்ரர்கள் கமக்கார அமைப்புகளுக்கே விநியோகம்

## அரச அதிபர் வேதநாயகன் கூறுகிறார்

முல்லைத்தீவு,ஒக்.30

முல்லைத்தீவு மாவட்டத்தில் இயங்கும் கமக்காரர் அமைப்புக்களுக்கு 20 இரண்டு சில்லு உழவு இயந்திரங்கள் (லான்ட் மாஸ்ரர்கள்) வழங்கப்பட்டன. இவை கமக்கார அமைப்புக்கள் தவிர்ந்த வேறு எவருக்கும் வழங்கப்படவில்லை.

முல்லைத்தீவு அரச அதிபர் நா.வேதநாயகன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

கடந்த 23ஆம் திகதி முல்லைத்தீவு செயலக வளாகத்தில் வைத்து தெரிவுசெய்யப்பட்ட கமக்காரர் அமைப்புக்களுக்கே இந்த 20 இரண்டு சில்லு உழவு இயந்திரங்களும் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர்களான நாமல் ராஜபக்ஷ, ஸ்ரீரங்கா, வடக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ. சந்திரசிறி ஆகியோர் கலந்து கொண்டனர்.

முல்லைத்தீவு செயலகத்திற்கும் சிங்கள விவசாயிகளுக்கும் லான்ட் மாஸ்ரர்கள் வழங்கப்பட்டுள்ளன என்று இணையத்தளம் ஒன்று வெளியிட்ட தகவலில் எந்தவித உண்மையும் இல்லை என்றார் அரச அதிபர்.

இதே வேளை கடந்த 25 ஆம் திகதிய உதயன் 3ஆம் பக்கத்தில் வன்னியில் தமிழருக்கு என ஒதுக்கப்பட்ட 102 லான்ட் மாஸ்ரர்களில் 50 சிங்களவருக்கு என்ற தகவல் வெளியான செய்தி வவுனியா தெற்கில் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.(ஒ-ஐ)

# குடாநாட்டில் முதியோர் நலவாழ்வுச் சங்கம் ஆரம்பித்து வைக்க ஆலோசனைக் கூட்டம்

## மானிப்பாய் பிரதேச சபை மண்டபத்தில் நாளை

சண்டிலிப்பாய்,ஒக்.30

யாழ்.மாவட்டத்தில் உள்ள முதியோர்களின் இறுதிக்கால நலன் கருதி முதியோர் சுகவாழ்வுச் சங்கம் ஒன்று உருவாக்கப்படவிருக்கின்றது. இதுபற்றிய ஆலோசனைக் கூட்டம் மானிப்பாய் பிரதேச சபை மண்டபத்தில் நாளை ஞயிற்றுக்கிழமை மாலை 4.00 மணியிலிருந்து 7 மணி வரை நடைபெறவுள்ளது.

இலங்கை வங்கியின் யாழ். மாவட்ட முன்னாள் முகாமையாளர் க. கணேசமூர்த்தி தலைமையில் நடைபெறவிருக்கும் விசேட செயலமர்வில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை முன்னாள் பொறுப்பதிகாரி வைத்திய கலாநிதி எஸ்.கதிரவேற்பிள்ளை பிரதம விருந்தினராக கலந்து கொள்வார்.

கொழும்பில் இயங்கி வரும் முதியோர் சுகவாழ்வுச் சங்கம், யாழ்.மாவட்டத்தில் உள்ள முதியோர்களின் நலன் கருதி தனது சேவையை விஸ்தரிக்கும் நோக்குடன் யாழ்பாணத்திலும் தனது கிளையை ஆரம்பிக்கவுள்ளது.

இறுதிக் காலத்தில் முதியோர் மகிழ்ச்சிகரமாகவும் சுகதேகியாகவும் வாழ்வதற்கு வைத்தியசாலைகளில் பிரத்தியேக விடுதிகளை ஏற்படுத்துவது சர்வதேச வைத்திய நிபுணர்களின் ஆலோசனைகளைப் பெற்றுக் கொடுப்பது போன்ற வசதிகள் ஆராயப்பட்டு தீர்மானிக்கப்படவிருக்கிறது

எனவே இச்செயலமர்வில் சகல முதியோர்களையும் கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் கோரியுள்ளனர். (ஒ-115)

# நகை வாங்குவதாக கடையில் நடித்தவர் சங்கிலியை எடுத்துக் கொண்டு ஓட்டம்

## கூட வந்தவர் மடக்கப்பட்டுப் பொலிஸாரிடம்

வலி.வடக்கு,ஒக்.30

நகைக் கடையில் நகை வாங்குவது போல் நடித்தவர் நகையை திருடிக் கொண்டு ஓடிய சம்பவம் நேற்று வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணியளவில் யாழ்ப்பாணம் கன்னாதிட்டியில் அமைந் துள்ள நகைக் கடையொன்றில் இடம்பெற்றுள்ளது.

இரண்டு ஆண்கள் நகைக் கடையொன்றில் புகுந்து நகைகள் பார்வையிடுவதைப் போன்று நகைகளைப் பார்த்துக் கொண்டு இருந்த வேளையில் அவர்களில் ஒருவர் அங்கிருந்த சங்கிலியை எடுத்துக் கொண்டு ஓடியுள்ளார்.

சனநெரிசல் மிக்க கஸ்தூரியார் வீதி வழியாக திருடன் ஓடிய போதிலும் யாரும் அதனையிட்டு கவனம் எடுக்காது சென்றுள்ளனர்.

இதேவேளை திருடன் உடன் கூட வந்த மற்றவர் கடை உரிமையாளரினால் பிடிக்கப்பட்டு யாழ்ப்பாணம் பொலிஸில் ஒப்படைக்கப்பட்டுள்ளார். (204-86)

# ரஜரட்ட பல்கலைக்கழகத்தில் ஆர்ப்பாட்டம்

பொலிஸ் அதிகாரி ஒருவர் பல்கலைக்கழக மாணவி ஒருவருடன் முறைகேடாக நடந்து கொண்டார் என்று கூறி ரஜரட்ட பல்கலைக்கழக மாணவர்கள் நேற்றுப் பகல் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

ரஜரட்ட பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற பதற்றத்தை அடுத்து பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களின் பாதுகாப்புக்கென பொலிஸார் தற்போது கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

கடமையிலிருந்த பொலிஸ் அதிகாரியொருவர் பரீட்சை எழுத வந்த மாணவியிடம் முறைகேடாக நடந்துள்ளார் என்று கூறியே மாணவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

# சிறுவர், முதியோர் தின விழா

யாழ்ப்பாணம்,ஒக்.30

யாழ்.மாவட்ட சமூக அபிவிருத்தி மன்றம் சிறுவர், முதியோர் தின விழாவை நாளை ஞாயிற்றுக்கிழமை நடத்தவுள்ளது.

மன்றத் தலைவர் திருமதி நவனீதம் ஜெகதீசன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த விழாவில் சமூக சேவையாளர் கௌரவிக்கப்படவுள்ளனர்.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக யாழ்.மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் கலந்துகொள்வார். (ஒ-302)

# நகரப் பகுதியிலும் இன்று மின்வெட்டு

யாழ்ப்பாணம்,ஒக்.30

யாழ்.பட்டினப் பகுதி உட்பட குறிப்பிட்ட சில இடங்களில் இன்று சனிக்கிழமை காலை 8 மணி முதல் மாலை 5 மணிவரை மின்தடை அமுலில் இருக்கும் என்று யாழ்.பிரதேச மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

உயரழுத்த மின்மார்க்க பராமரிப்பு வேலைகள் காரணமாக மின்தடை அமுல் செய்யப்படவுள்ளது.

புன்னாலைக்கட்டுவன், அச்செழு, புத்தூர், ஆவரங்கால், அச்சுவேலி இடைக்காடு, வடமராட்சிப் பிரதேசம் -

இணுவில், உடுவில், மருதனார்மடம், தாவடி, கொக்குவில், நாச்சிமர் கோயிலடி, ஆனைக்கோட்டை, நவாலி, மானிப்பாய், சங்குவேலி, கோண்டாவில், கொட்டடி, கோம்பையன்மணல் பிரதேசம் மற்றும் யாழ்.பட்டணப் பகுதி உள்ளிட்ட இடங்களிலேயே இன்று காலை முதல் மாலை வரை மின் தடை அமுல் செய்யப்படவுள்ளது. (ஒ-16)

# தனித் தமிழ் மாவட்டம் இருக்கக் கூடாது என்பதில் இலங்கை அரசு கூடிய கவனம்

## கோப்பாய் தொகுதிக்கான செயற்குழு ஆரம்ப நிகழ்வில் சுரேஷ்



யாழ்ப்பாணம்,ஒக்.30

இலங்கையில் எங்குமே தனித் தமிழ் மாவட்டம் இருக்கக் கூடாது என்பதில் அரசாங்கம் உறுதியாக இருக்கின்றது. அதற்கேற்றவாறு திட்டமிட்ட வகையில் இராணுவக் குடியிருப்புகளை நிறுவி வருகின்றது. யாழ்ப்பாணத்திலும் ரயில் நிலையத்தில் 150 சிங்கள மக்கள் கொண்டு வந்துவிடப்பட்டுள்ளனர்.

இவ்வாறு கூட்டமைப்பின் இணைச் செயலாளரும் பேச்சாளருமான சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

கோப்பாயில் கூட்டமைப்பின் அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற கோப்பாய் தொகுதிக்கான செயற்குழு அங்குரார்ப்பண நிகழ்ச்சியில் உரையாற்றுகையிலேயே பிறேமச்சந்திரன் மேற்கண்டவாறு கூறினார்.

இந்த நிகழ்வில் செயற்குழு தெரிவு இடம்பெற்றது. ஆவரங்கால் மேற்கைச் சேர்ந்த இ.சந்திரன் தலைவராகவும், உபதலைவர்களாக நீர்வேலியைச் சேர்ந்த க.தர்மலிங்கம், உரும்பிராயைச் சேர்ந்த க.தியாகராஜா, வாதரவத்தையைச் சேர்ந்த மா.இரட்ணசிங்கம் ஆகியோரும் கல்வியங்காட்டைச் சேர்ந்த ஞா.த. ஞானசேகரவேல் செயலாளராகவும், அச்செழுவைச் சேர்ந்த திருமதி ச.சரோஜினிதேவி உப செயலாளராகவும் நீர்வேலியைச் சேர்ந்த க.துரைசிங்கம் பொருளாளராகவும் தெரிவு செய்யப்பட்டனர்.

நிர்வாக உறுப்பினர்களாக த.நித்தியானந்தம் (அச்சுவேலி), ப.சித்திரா (ஆவரங்கால்), கா. சிவசோதி (ஆவரங்கால்), சி.ரமேஸ் (சிறுப்பிட்டி), செ.செந்தூரன் (குட்டியபுலம்), கி.தங்கவடிவேல் (இருபாலை), சி.இலட்சுமிகாந்தன் (கட்டைப்பிராய்), சு.சுப்பரமணியம் (நீர்வேலி வடக்கு), [illegible] னந்தன் (நீர்வேலி), ம.அன்ரன் குமார் (உரும்பிராய்), சோ.இராசலிங்கம் (ஆவரங்கால்), வை.சுப்பிரமணியம் (கோப்பாய்), அ.கணபதிப்பிள்ளை (தம்பாலை) ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

இந்த நிகழ்ச்சிக்கு தலைமை வகித்த அவர் அங்கு உரையாற்றுகையில் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கை அரசாங்கம் எந்தவொரு மாவட்டமும் தனித் தமிழ் மாவட்டமாக இருக்கக்கூடாது என்பதில் உறுதியாக இருக்கின்றது. இதற்கேற்ப திட்டமிடப்பட்ட வகையில் இராணுவக் குடியிருப்புக்களை நிறுவி வருகின்றது. யாழ்.ரயில் நிலையத்தில் நூற்றைம்பது சிங்கள மக்கள் கொண்டு வந்து விடப்பட்டுள்ளனர்.

இவர்கள் வரமுன்னரே ரயில் நிலையத்தில் அவர்களுக்கான மலசல கூட வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுவிட்டன. அரசாங்கம் உலகத்தில் யார் என்ன சொன்னாலும் பரவாய் இல்லை, தான் நினைத்ததை செய்து முடிக்க வேண்டும் என்பதில் தீவிரமாக உள்ளது. இந்நிலையில் தமிழ் மண்ணையும் மக்களையும் காக்க வேண்டிய பொறுப்பு தமிழ் தேசியக் கூட்டமைப்பிடமே சுமத்தப்பட்டுள்ளது.

அதேபோன்று போரால் பாதிக்கப்பட்டுள்ள எமது மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்திக் கொடுக்கவேண்டிய கடப்பாடும் எங்கள் ஒவ்வொருவர் மீதும் சுமத்தப்பட்டுள்ளது.

சர்வதேச சூழலைப் பொறுத்தவரையில் முழுமையாக இல்லாவிட்டாலும் கூட ஓரளவுக்காவது தமிழ் மக்களுக்குச் சாதகமாகவே உள்ளது. இந்தச் சூழ்நிலையை எமக்குச் சாதமாகப் பயன்படுத்தி எமக்கான தீர்வினைப் பெற்றுக் கொள்வதற்கு பதின்மூன்று நாடாளுமன்ற உறுப்பினர்கள் மட்டும் போதாது.

எனவே இவை அனைத்தையும் கருத்தில் கொண்டு தமிழ் தேசியக் கூட்டமைப்பை பலப்படுத்துவதற்கான முதற்கட்ட நடவடிக்கையாக இன்று கோப்பாய் தொகுதி செயற்குழு அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்படுகின்றது என்று தெரிவித்தார்.

இந் நிகழ்ச்சியில் கோப்பாய் தொகுதியைச் சேர்ந்த பல்வேறு கிராமங்களில் இருந்தும் தெரிவு செய்யப்பட்ட முக்கிய பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

இவர்கள் கூட்டமைப்பு பலப்படுத்தப்பட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தியதுடன் அதற்கான வழிமுறைகள் குறித்தும் கலந்தாலோசித்தனர். (ஒ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பொது நூலகத்தில் நடந்தது ஒரு சிறிய குழப்பம் ஊடகங்கள் தான் அதனை ஊதிப் பெரிதாக்கின

## இப்படிச் சொல்கிறார் அமைச்சர் டக்ளஸ்

யாழ்ப்பாணம், ஒக்.30

யாழ்.பொது நூலகத்தில் கடந்த 23ஆம் திகதி இடம்பெற்ற ஒரு சிறிய குழப்பம். ஊடகங்கள் தான் அதனை ஊதிப் பெருப்பித்துப் பெரிய பிரச்சினையாகக் காட்டுகின்றன.

அங்கு நடந்தது உண்மையாக உணரப்படுமானால் அரசில் அங்கம் வகிக்கும் அமைச்சர் என்ற வகையில் அதற்காக நான் மன்னிப்புக் கோருகின்றேன்.

இவ்வாறு தெரிவித்துள்ளார் பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுதொழில் அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா.

கடந்த 23ஆம் திகதி யாழ்.பொது நூலகத்துக்குச் சென்ற தென்னிலங்கை உல்லாசப் பயணிகள் நூலக வாயிலில் காவல் கடமையில் ஈடுபட்ட காவலாளியுடன் தகராறில் ஈடுபட்டதுடன் பின்னர் உள்ளே நுழைந்து நூலகத்திலும் பெரும் அடாவடித்தனம் புரிந்தனர். இந்த அசம்பாவிதம் தொடர்பாக அங்கு கடமையில் இருந்த பாதுகாப்புத் தரப்பினர் எவரும் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை எனவும், பொது நூலகம் ஒன்றில் இவ்வாறு நடந்துகொண்டமை அநாகரிகமான செயல் என்றும் பல்வேறு தரப்புகளாலும் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது. இது தொடர்பாக யாழ். மாநகர சபையின் முன்னாள் ஆணையாளர் சி.வி.கே.சிவஞானம் ஜனாதிபதிக்குக் கடிதம் ஒன்றையும் அனுப்பிவைத்திருந்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பான கலந்துரையாடல் ஒன்று அமைச்சர் டக்ளஸ் தலைமையில் நேற்று நூலகக் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. இதில் யாழ்.நகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா, ஆணையாளர் மு.செ.சரவணபவ, மாநகர சபையின் உறுப்பினர்கள் மற்றும் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், ஊடகவியலாளர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மேலும் தெரிவித்தவை வருமாறு:-

நூலகத்தின் உள்ளே பெரும் எண்ணிக்கையான மக்களை அனுமதிக்காது வரையறுக்கப்பட்ட அளவில் அனுமதிக்க வேண்டும். பொதுமக்கள் நூலகத்தைப் பார்வையிட வரும்போது அவர்களைத் தடுக்கக் கூடாது. நூலகத்துக்கு வரும் மக்கள் தம்முடன்எதையும் கொண்டு செல்வது தவிர்க்கப்பட வேண்டும். நாட்டின் அனைத்து நூலகங்களிலும் இது நடைமுறையில் உள்ளது. பொலிஸார் பாதுகாப்பை உறுதிப்படுத்துவார்கள். இராணுவத்தினர் அதற்கு உதவியாக இருப்பார்கள். எதிர்காலத்தில் அசம்பாவிதங்கள் நிகழாதவறு நடவடிக்கை எடுக்கப்படும். அதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படும். - என்றார்.

இங்கு பொலிஸ் அதிகாரி ஒருவர் கருத்துத் தெரிவிக்கையில்:-

குறிப்பிட்ட சம்பவம் தொடர்பாக மாநகர முதல்வர் எம்முடன் தொடர்புகொண்டார். நூலகத்திற்கு நாங்கள் வந்தபோது அங்கிருந்த பொதுமக்கள் நூலகத்திற்குள் செல்வதற்கான அனுமதி கிடைக்கும்வரை காத்திருப்பதாகக் கூறினார்கள். நூலக வாயிலில் வைக்கப்பட்டிருந்த அறிவித்தல் பிரசுரம் கீழே விழுந்து கிடந்தது. வாயிலுக்கு வெளியில் எந்த விதமான அசம்பாவிதங்களும் இடம்பெறவில்லை. நடந்த சம்பவம் குறித்து நூலகத்தில் நின்ற அதிகாரிகளிடம் வினவியபோது அவர்கள் அசம்பாவிதம் நடக்கவில்லை. அனுமதி கிடைக்கும்வரை மக்கள் காத்திருக்கிறார்கள் என்றார். முதல்வரிடம் அசம்பாவிதம் நடந்ததாக யார் தகவல் தந்தார்கள் எனக் கேட்ட



போது நூலகத்தில் இருந்த ஊழியர்களில் ஒருவர்தான் தகவல் தந்ததாகத் தெரிவித்தார். முதல் நாளும், இரண்டாம் நாளும் அனுமதி கிடைக்காததால் கோபப்பட்ட மக்களிடம், இங்குள்ள பண்பாடுகள் கலாசார விடயங்களை அடிப்படையாகக் கொண்டு தீர்மானங்கள் எடுக்கப்படுவதால் அசம்பாவிதங்கள் எதுவும் நடக்கக்கூடாது என்றும் அப்படி நடந்தால் கைது செய்யப்படுவார்கள் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வந்திருந்த மக்களில் ஒருவர் தான் ஜனாதிபதி அலுவலகத்தில் பணியாற்றுவதாகக் கூறினார். ஜனாதிபதியின் ஆள் என்று கூறவில்லை. - என்றார்.

இராணுவ அதிகாரி கருத்துத் தெரிவிக்கையில் -

இராணுவத்தினர் தென்னிலங்கையில் இருந்து வருபவர்களுக்கு மட்டும்தான் உதவுகிறார்கள் என்ற தப்பான கருத்து இங்குள்ள மக்களிடம் நிலவுகிறது. இராணுவம் இங்கு மாணவர்களின் கல்விக்கும், பொது மக்களுக்கும் தேவையான உதவிகளைவழங்கி வருகின்றார்கள். இங்குள்ள பத்திரிகைகளில் நாம் செய்யும் சிறந்த பணிகள் பற்றிக் குறிப்பிடுவதில்லை. இங்குள்ள பத்திரிகைகள் எதிர்ப்புணர்வுகளைத் தூண்டக் கூடிய விடயங்களைத் தவிர்த்துவிட்டு இனங்களுக்குள் ஒற்றுமையை வளர்த்து யாழ். நகரைக் கட்டியெழுப்ப முன்வர வேண்டும் - என்றார்.

இதில் கலந்துகொண்ட சட்டத்தரணி ரங்கனும் பத்திரிகைகள் தவறான செய்திகளுக்கே முக்கியத்துவம் கொடுப்பதாகத் தெரிவித்தார். (த-7-15)

# உண்மையையே ஊடகங்கள் வெளியிட்டன அவற்றின் மீது பழிபோடுவது ஏற்புடையதல்ல

## கலந்துரையாடலில் மாநகர சபை உறுப்பினர் விந்தன்

யாழ்ப்பாணம், ஒக்.30

பத்திரிகைகள் மீது குற்றம் சுமத்துவது பிழையானது. இங்கே நடந்ததாகக் கூறப்படும் சம்பவங்கள் குறித்து தரப்பட்டுள்ள தகவலில் குறிப்பிட்ட விடயங்களை விட மிகவும் குறைந்த தகவல்களையே பத்திரிகைகள் வெளிப்படுத்தியுள்ளமை உண்மையான செய்திகளே வெளியிட்டுள்ள பத்திரிகைகள் மீது பழிபோடுவதைத் தவிர்க்கவேண்டும்

இவ்வாறு மாநகரசபை உறுப்பினர் விந்தன் கனகரத்தினம் யாழ். பொது நூலகத்தில் இடம்பெற்ற நேற்றைய கலந்துரையாடலின் போது குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:-

பிரதம நூலகரின் அறிக்கையின்படி சுற்றுலாப் பயணிகள்மீதான தவறு தெளிவாகிறது. ஆசியாவின் பிரபலம்மிக்க நூலகம். இது புனிதமான இடம். தமிழர்களின் பண்பாடு, கலாசாரத்தை உள்ளடக்கிய கட்டடம். அப்படியான ஓர் இடத்தில் அத்துமீறி நுழைந்தமைக்கு சட்டபூர்வமான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றார்.

மாநகர சபையின் எதிர்க்கட்சித் தலைவர் மு.றெமிடியஸ் கருத்துத் தெரிவிக்கையில்:-

இது வருந்தத்தக்க சம்பவம், ஒரு பொதுப்படையான அறிவித்தலின் படி ஒரு குறிப்பிட்ட நேரத்தில் நூலகத்தைப் பார்வையிடலாம். நூறுபேருக்கும் அதிகமானவர்கள் அனுமதித்து விட்டுவேறு நிகழ்வுகளை நடத்தியிருக்கக் கூடாது. அது தவறு. பாதுகாப்புப் படையினரின் செயற்பாடுகள் மக்கள் மனதில் சந்தேகம் ஏற்படாத வகையில் நடைபெற்றிருக்க வேண்டும். எந்த மேலிடமென்றாலும் சட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டும். அதை மீறி பாதுகாப்புப்படை ஒத்துழைப்பை வழங்கக் கூடாது. இது பாதுகாப்புப் படையினர், பொலிஸார் மீது தவறான எண்ணத்தை ஏற்படுத்தும். பொலிஸ் அலுவலகத்தில் இருந்து 100 மீற்றர் தூரமுள்ள ஒரு இடத்தில் நடைபெற்ற சம்பவம் இது. சட்டத்தை நடைமுறைப்படுத்த முடியாமல் இருப்பது நாகரீகமானதல்ல. ஜனாதிபதி எல்லோருக்கும் உரியவர். வந்தவர்கள் எங்களுக்கு ஜனாதிபதி என்று பேசக் கூடாது. எனவே பொலிஸார் எல்லோரையும் சமமாக மதித்து இதுபோன்ற நட வடிக்கைகளில் ஈடுபடுபவர்களைக் கைதுசெய்து நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றார்.

யாழ்.மாநகர சபை உறுப்பினர்கள் சங்கையா, பரஞ்சோதி, மங்கள நேசன் உட்பட பலர் இதில் கருத்துத் தெரிவித்தனர். (த-7-15)

# கோட்டைப் புனரமைப்புப் பணியில் ஒல்லாந்தர் கால நாணயக்குற்றி மீட்பு

யாழ்ப்பாணம்,ஒக்.30

யாழ்.கோட்டை புனரமைப்புப் பணியின் போது ஒல்லாந்தர் காலத்தில் பாவிக்கப்பட்ட நாணயக் குற்றிகள் மீட்கப்பட்டுள்ளன.

கோட்டையில் உள்ள பக்க சுற்றாடல் துப்புரவாக்கும்போதே நாணயக்குற்றிகளை தொல்லியல் திணைக்கள ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

முன்னர் ஆரம்பிக்கப்பட்ட துப்புரவு பணியின் போது ஒல்லாந்தரினால் பாவிக்கப்பட்ட பீரங்கிக் குண்டுகள் கண்டெடுக்கப்பட்டு பாதுகாப்பான முறையில் வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கோட்டையில் பல்வேறுபட்ட வரலாற்றுச் சின்னங்களை மீட்பதற்கு ஆராய்ச்சியாளர்கள் தொடர்ந்தும் தமது பணியை மேற்கொள்கின்றனர். (204-26)

# குடாநாட்டுத் தபாலகங்களில் நாளை 'ஸ்மைல்' என்ற புதிய சேமிப்புத் திட்டம்

## *உலக சிக்கன தினத்தை முன்னிட்டு ஆரம்பம்*

யாழ்ப்பாணம், ஒக்.30

உலக சிக்கன தினத்தை முன்னிட்டு தேசிய சேமிப்பு வங்கி 'ஸ்மைல்' (Smile) என்ற புதிய சேமிப்புக் கணக்கு ஒன்றை நாளை ஞாயிற்றுக்கிழமை அஞ்சல் அலுவலகங்கள் மற்றும் உப அஞ்சல் அலுவலகங்கள் ஊடாக அறிமுகப்படுத்தவுள்ளது.

இந்தப் புதிய கணக்கை அறிமுகப்படுத்தும் முகமாக யாழ். குடாநாட்டில் உள்ள சகல அஞ்சல் மற்றும் உப அஞ்சல் அலுவலகங்கள் விடுமுறைதினமான நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் பிற்பகல் 3.30 மணிவரை திறந்திருக்கும் என்று பிரதேச அஞ்சல் அத்தியட்சகர் எஸ்.ஜெயரெட்ணம் அறிவித்துள்ளார்.

ஸ்மைல் கணக்கை ஆரம்பிப்பதன் மூலம் மக்கள் வங்கிக் கடன்களையும் பெற்றுக் கொள்ள முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-26)

# பேராதனை கலை, விவசாய பீடங்கள் நேற்று மூடப்பட்டன

பேராதனைப் பல்கலைக்கழக கலைப் பீடமும், விவசாய பீடமும் நேற்று வெள்ளிக்கிழமை முதல் காலவரையறையின்றி மூடப்பட்டன.

பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் சரத் அபயகோன் வெளியிட்டுள்ள சுற்று நிருபத்தில் இப் பீடங்களைச் சேர்ந்த சகல மாணவர்களும் வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு முன் விடுதிகளை விட்டு வெளியேற வேண்டுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

# யாழ்.பொது நூலகத்தில் சனியன்று நடைபெற்ற அடாவடித்தனத்தை கண்டிக்கிறது இணையம்

யாழ்ப்பாணம்,ஒக்.30

யாழ்.பொது நூலகத்தில் கடந்த 23ஆம் திகதி சனிக்கிழமை இடம்பெற்ற அடாவடித்தனத்தை வன்மையாகக் கண்டிக்கிறோம்.

எதிர்வரும் காலங்களில் இவ்வாறான அத்துமீறல்களும் அடாவடித்தனமும் இடம்பெறாத வகையில் உரிய நடவடிக்கைகளை மாநகர சபை நிர்வாகம் எடுக்க வேண்டும்.

யாழ்.மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம் யாழ். மாநகரசபை நிர்வாகத்தை மேற்கண்டவாறு கோரியுள்ளது.

இணையத்தின் மாதாந்தக் கூட்டம் கடந்த வியாழக்கிழமை நடைபெற்றபோது மேற்கண்ட தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

அத் தீர்மானத்தில் தெரிவிக்கப்பட்டவை வருமாறு:-

கடந்த 23 ஆம் திகதி மாலை யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் சகல கட்டுப்பாடுகளையும் ஒழுங்கு விதிகளையும், வழிகாட்டல்களையும் மீறி நுழைவாயில் கதவுகளை உடைத்துக்கொண்டு யாழ். நூலகத்தில் அத்து மீறிப் பிரவேசித்த நூற்றுக்கணக்கான தென் பகுதியைச் சேர்ந்தவர்களின் அடாவடித்தனமான நடவடிக்கைகளை முற்றுமுழுதாகக் கண்டிக்கிறோம்.

நூலகத்தைப் பார்வையிட வந்த இவர்கள் நூல்களின் பெருமையையும் நூலகத்தின் புனிதத்தையும் புரிந்து கொள்ளாதவர்களாக இருந்தமை இவர்களினுடைய அத்துமீறிய கண்டிக்கத்தக்க நடவடிக்கைகளின் மூலம் வெளிப்படுகிறது. மேலும் அத்துமீறி உட்பிரவேசித்த இவர்கள் றாக்கைகளில் இருந்த புத்தகங்களை வெறுப்புணர்ச்சியோடும், வெறித்தனத்தோடும் எடுத்து வீசி எறிந்த நடவடிக்கை நாகரிகமற்ற செயலாகும். இத்தனைக்கும் இவர்கள் ஜனாதிபதியின் செயலகத்தின் பெயரைப் பாவித்து இந்த நடவடிக்கைகளில் ஈடுபட்டமை ஆச்சரியம் அளிப்பதும், அதிர்ச்சி அளிப்பதும் ஆகும்.

இத்துடன் எமது நூலகத்தின் தோற்றத்தையும் மீள் வளர்ச்சியையும் குரோத மனப்பாங்கோடு இவர்கள் நோக்குகின்றார்கள் என்பது வருத்தத்துடன் கவனிக்கத் தக்கதாக உள்ளது.

இனிமேலும் இவ்வாறான அத்துமீறல்களும் இவ்வாறான அடாவடிதனமும் இடம்பெறாத வகையில் உரிய நடவடிக்கைகளை மாநகர சபை நிர்வாகம் எடுக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கின்றோம் என்றுள்ளது. (ஒ-ஐ)

# அச்சுவேலி நிகழ்வுக்கு அமைச்சர்கள் விஜயம்

யாழ்ப்பாணம், ஒக்.30

மீள்குடியேற்ற அமைச்சர் மில்றோய் பெர்னாண்டோ, சிறுவர் பராமரிப்பு மற்றும் அபிவிருத்தி அமைச்சர் திஸ்ஸ கரலியத்த ஆகியோர் நாளை மறுதினம் திங்கட்கிழமை யாழ்ப்பாணம் வருகின்றனர்.

அச்சுவேலியில் அன்றைய தினம் இடம்பெறும் சிறுவர் காப்பகத் திறப்பு விழாவில் இந்த அமைச்சர்கள் பங்கேற்கவிருக்கின்றனர். அத்துடன் பல்வேறு நிகழ்வுகளிலும் அமைச்சர்கள் பங்கேற்கவிருக்கின்றனர். (ஒ-ஐ)

# காணி உறுதிகள் இன்றியே கடன் வடக்கு, கிழக்கு மக்களுக்கு வாய்ப்பு

## *இலங்கை மத்திய வங்கி அறிவிப்பு*

வடக்கு, கிழக்கு மக்கள் காணி உறுதிகளின்றி கடன் பெற்றுக் கொள்வதற்கு வழிவகைகள் ஏற்படுத்தப்படும் என்று அரசாங்கம் அறிவித்துள்ளது.

இந்தத் தகவலை இலங்கை அரசாங்கத்தின் சார்பில் இலங்கை மத்திய வங்கி அறிவித்துள்ளது.

நிதி நிறுவனங்களில் கடன்களைப் பெற்றுக்கொள்ளும் போது கிராம சேவகரின் அத்தாட்சிக் கடிதமும், சமாதான நீதவானின் சத்தியக் கடதாசி ஒன்றையும் சமர்ப்பிப்பதன் மூலம் கடன் பெற்றுக் கொள்ள முடியும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

காணி உறுதியின்றி கடன் பெற்றுக் கொள்வதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்வது தொடர்பில் விசேட சுற்று நிருபமொன்று விரைவில் வெளியிடப்படவுள்ளது.

கடந்த கால போர்ச் சூழலினால் வடக்கு, கிழக்கு மக்கள் உரிய ஆவணங்களின்றி அவதியுறுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடாநாட்டில் பரவலாக மழை

யாழ்ப்பாணம், ஒக்.30

யாழ்.குடாநாட்டில் பல பகுதிகளிலும் நேற்றுப்பரவலாக மழை பெய்துள்ளது. நேற்றுக்காலை முதல் இரவு வரை மழை தொடர்ந்தது.

கடந்த ஒரு மாத காலமாக மழை இல்லாமையால் பெரும்போக நெற்பயிர்ச்செய்கை பாதிக்கப்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது. நேற்றுப் பெய்த மழையை அடுத்து நெல் விதைப்பை மேற்கொண்ட விவசாயிகள் நிம்மதிப் பெருமூச்சு விட்டனர்.

கடந்த மாதம் பெய்த மழையை நம்பி குடாநாட்டின் பல்வேறு பகுதிகளிலும் நெல் விதைப்பு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

எனினும் பயிர்கள் முளைத்து வந்த நிலையில் கடும் வரட்சி ஏற்பட்டு அவை அழிவடையும் நிலை ஏற்பட்டது.

உப்புத் தரவைகளை அண்டிய பயிர்கள் முற்றாகக் கருதி அழிந்து காணப்பட்டன. எஞ்சிய பயிர்கள் கடந்த இருநாள்களாகப் பெய்த மழையினால் அழிவடையும் நிலையிலிருந்து காப்பாற்றப்பட்டுள்ளன.

இந்த மழையி னால் நெற்பயிர்கள் ஓரளவு தப்பிப் பிழைத்துள்ளதாக விவசா யிகள் மகிழ்ச்சி தெரிவித்துள்ளனர். (த-16-302)

## சமையல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வழமையாகும். கடந்த ஓகஸ்ட் மாதம் சர்வதேச சந்தையில் சமையல் எரிவாயு மெட்ரிக் தொன் ஒன்றின் விலை 589 அமெரிக்க டொலர்களாகவும், செப்ரெம்பர் மாதம் அதன் விலை 644 அமெரிக்க டொலர்களாகவும் அதிகரிக்கரித்தது'' - என்றார் அவர்.

இதேவேளை, பால்மா விலை மாற்றம் தொடர்பில் தற்போது அதிக கவனம் செலுத்தப்பட்டு வருவதாகவும் அவர் கூறினார். இது தொடர்பாகப் பரிசீலனை செய்து இறுதி அறிக்கையை நுகர்வோர் விவகார அதிகார சபையின் தலைவரிடம் சமர்ப்பிக்கப்படவுள்ளது. ''பெரும்பாலும் சமையல் எரிபொருள், பால்மா போன்றவற்றின் விலைகளில் அடுத்தவாரம் மாற்றம் ஏற்படும்'' - என்று நிப்புன் கூறினார். (உ-சி)

## தாய்லாந்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி

பகுதியில் அமைந்துள்ள சோங்காலா, ஹேட்டி ஆகிய கிராமங்களில் வீடுகளை வாடகைக்கு எடுத்துத் தங்கியிருந்தவர்களே கைது செய்யப்பட்டிருக்கின்றனர்.

தாய்லாந்தில் தங்கியிருப்பதற்கான உரிய ஆவணங்களைச் சமர்ப்பிக்கத் தவறியமையினாலேயே இவர்கள் கைது செய்யப்பட்டனர் என அந்நாட்டு அரசு தெரிவித்துள்ளது.

இவ்வாறு கைது செய்யப்பட்ட இலங்கைத் தமிழர்களில் பெண்களும், சிறுவர்களும் அடங்குகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, தாய்லாந்தில் இம் மாதம் 12ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட தேடுதல் நடவடிக்கையின்போது 130 இற்கு மேற்பட்ட இலங்கைத் தமிழர்கள் அந்நாட்டுப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (சி)

## யாழ்.நூலகத்திற்கு..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சுற்றுலா நோக்கத்துடன் நூலகத்திற்கு வருகை தந்தவர்களை அவர்கள் திருப்பி அனுப்பினர். நூலகப் பயன்பாட்டுக்கு வருவோர் மட்டுமே உள்ளே செல்ல அனுமதிக்கப்பட்டனர் - என்றார்.

இதேவேளை, பொது நூலகத்தில் கடந்த 23ஆம் திகதி இடம்பெற்ற அசம்பாவிதம் தொடர்பாக நேற்றுக் காலை நூலகத்தில் கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது. பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறு கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் தலைமையில் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில், இனிமேல் நூலகத்தில் அசம்பாவிதங்கள் எதுவும் நடக்காமல் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என உறுதியளிக்கப்பட்டிருந்தது.

எனினும், கட்டுப்பாடான விதத்தில் உல்லாசப் பயணிகள் நூலகத்தைப் பார்வையிட அனுமதிக்கப்படுவர் எனவும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அந்தக் கலந்துரையாடலில் தெரிவித்திருந்தார்.

கலந்துரையாடல் நடைபெற்று முடிந்த சில மணி நேரங்களில் நூலகத்திற்கு இராணுவப் பாதுகாப்புப் போடப்பட்டது. சுற்றுலாப் பயணிகள் உள்ளே செல்வதும் தடுக்கப்பட்டது. கொழும்பில் இருந்து வந்த உத்தரவுகளுக்கு அமையவே இந்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன என தகவல்கள் தெரிவித்தன.

*(நேற்றைய கலந்துரையாடல் குறித்த விரிவான செய்திகள் 3ஆம் பக்கத்தில்)* (உ-9)


## தேவை

யாழ்.நகரில் அமைந்துள்ள எமது ஸ்தாபனத்துக்கு பெண் **Accounts Assistant** தேவை கணனி அறிவு அவசியம். திறமைக்கு ஏற்ற சம்பளம் வழங்கப்படும். அனுப்ப வேண்டிய முகவரி.

**C/0 4087, உதயன் பணிமனை**
**361, கஸ்தூரியார் றோட், யாழ்ப்பாணம்.**
மின்னஞ்சல் முகவரி: suren@metrohomes.lk


## காணவில்லை



அரசடி வீதி, வடலிய டைப்பைச் சேர்ந்த **ஆறுமுகம் மணியசேகரம்** என்பவரை நேற்று(29.10.2010) வெள்ளிக் கிழமை காலை 9 மணியில் இருந்து காணவில்லை இவரைப்பற்றிய தகவல் அறிந்தவர்கள் தயவு செய்து கீழே உள்ள தொலைபேசி இலக்கத்திற்கு அறியத்தருமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

*அரசடி வீதி*
*வடலியடைப்பு*

*தொடர்புகளுக்கு*
0213008974, 0213214682,
0213211098, 0777243129

*தகவல் :*
*மகள்-* **திலகமலர்**
(சின்னக்கா)

## வடக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த நிலையில் நில அளவை உதவியாளர் நியமனம் நியாயமற்றது. எனவே இது குறித்து மறுபரீசீலனை செய்ய வேண்டுமெனக் கேட்டுக் கொள்கின் றேன்.''

- இவ்வாறு அந்தக் கடிதத்தில் அவர் தெரிவித்துள்ளார். (உ-சி)

## ரணில்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

- இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவரான ரணில் விக்கிரமசிங்க அழைப்பு விடுத்துள்ளார்.

ஜனநாயக விரோத செயற்பாடுகள் மற்றும் ஏகாதிபத்திய நடவடிக்கைகளுக்கு எதிரானதுமான மக்கள் இயக்கம் ஏற்பாடு செய்த மக்கள் ஒன்றுகூடல் நிகழவொன்று நேற்று மாலை கண்டி புஷ்பதான மண்டபத்தில் நடைபெற்றது. அதன்போது உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

''பயங்கரவாத நடவடிக்கைகளில் ஈடுபட்டவர்களுக்கு அமைச்சுப் பொறுப்புக்களை வழங்கி அவர்களைக் கௌரவித்துள்ள அரசு, பயங்கரவாதத்தை ஒழித்து - நாட்டையும் நாட்டு மக்களையும் காப்பாற்றிய சரத் பொன்சேகாவுக்கு 30 மாதச் சிறைத் தண்டனையை வழங்கியுள்ளது. இது ஜனநாயக விரோத செயலாகும்.

1999ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலுக்காக, முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க நடத்திய தேர்தல் கூட்டத்தின்போது இடம்பெற்ற குண்டுத்தாக்குதலில் அவர் கடும் காயங்களுக்குள்ளாகி ஒரு கண்ணையும் இழந்தார்.

அதேவேளை, அந்தச் சம்பவத்தில் பலர் கொல்லப்பட்டனர். இந்தச் சம்பவத்திற்குக் காரணமானவர் என குற்றஞ்சாட்டப் பட்ட நபருக்கு நீதிமன்றம் 30 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதித்துள்ளது.

ஆனால், இவ்வாறான பயங்கரவாதிகளிடமிருந்து நாட்டை மீட்டுக்கொடுத்த சரத் பொன்சேகாவை அன்று பாராட்டிய ஜனாதிபதி, இன்று அவருக்கு 30 மாத சிறைத் தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

அதேவேளை, தலதா மாளிகைக் குண்டு வெடிப்பிற்கும் அரந்தலாவ கொலைகளுக்கும் காரணமாக இருந்த கருணாவுக்கு அமைச்சுப் பதவி வழங்கப் பட்டுள்ளது.

சரத்பொன்சேகா செய்த ஒரே தவறு ராஜபக்ஷவை எதிர்த்து ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டதே. ராஜபக்ஷவை ஆதரிப்பவர்களுக்கு அமைச்சுப் பதவிகள். அவருக்கு எதிராகச் செயல்படுபவர்களுக்கு சிறைத்தண்டனை - அச்சுறுத்தல் போன்ற ஜனநாயக விரோதச் செயல்களே இடம்பெறுகின்றன.

ஊடகங்கள் சுதந்திரமாகச் செயற்பட முடியாத வகையில் அச்சுறுத்தப்படுகின்றன. ஊடகவியலாளர்கள் தாக்கப்படுகின்றனர் - கைது செய்யப்படுகின்றனர்.

இவ்வாறான அச்சுறுத்தல்கள் காரணமாக சில அமைச்சர்கள் கூட பயந்து போயுள்ளனர்.

பால்மா, அரிசி போன்ற அத்தியாவசியப் பொருள்களின் விலை உயர்வு, மக்களால் வாழ்க்கையைக் கொண்டு நடத்த முடியாதளவுக்குச் சென்றுள்ளது.

எனவே அரசின் இவ்வாறான ஏகாதிபத்திய செயற்பாடுகளுக்கும் ஜனநாயக விரோதச் செயல்களுக்கும் நாம் ஒன்றுபட்டு எதிர்ப்பு நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும்.

- இப்படித் தெரிவித்தார்.

பின்னர், இந்த நிகழ்வில் கலந்து கொண்ட அனைவரும் கறுப்புப் பட்டியணிந்து சரத் பொன்சேகாவின் விடுதலை வேண்டி ஊர்வலமாகச் சென்று நாத தேவாலய பூமியில் விஷேட பூஜைகளை நடத்தினர்.


**A/L Biology,**
**O/L Science**

Personal class
& Group classes
TP-077 401 2800


## துப்பாக்கி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மோட்டார் சைக்கிளில் வந்த இரண்டு ஆயுததாரிகளினாலேயே இந்தத் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப் பட்டது எனவும்,

சம்பவத்தில் காயமடைந்த நபர், வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை நவகமுவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (சி)

## 2009 ஜனாதிபதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வாதங்களை முன்வைத்த ஜனாதிபதி சட்டத்தரணி, கடந்த ஜனாதிபதித் தேர்தல் நீதியாகவும், சுயாதீனமாகவும் நடைபெற்றுள்ளதால் அதன் முடிவுகளை ரத்துச்செய்ய வேண்டிய அவசியமில்லை என தெரிவித்தார். அத்தோடு ஜனாதிபதித் தேர்தல் முடிவுகளுக்கு எதிராக சரத் பொன்சேகாவினால் தாக்கல் செய்யப்பட்ட மனுவை பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளாது நிராகரிக்குமாறும் ஜனாதிபதியின் சட்டத்தரணி ஏற்கனவே கேட்டுக்கொண்டிருந்தார்.

இதன்படி கடந்த ஜனாதிபதித் தேர்தலில் வாக்குகளை எண்ணும் பணிகள் சட்டவிரோதமாக மேற்கொள்ளப்படவில்லை எனவும், மனுதாரர் தேர்தல் முறைமைக்கு அமையத் தமது மனுவை சமர்ப்பிக்கவில்லை என்றும் தெரிவித்த நீதியரசர்கள் சரத் பொன்சேகாவினால் தாக்கல் செய்யப்பட்ட மனுவை நிராகரித்தனர். (உ-சி)

## தமிழ் அரசியல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொண்ட குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.இக்குழுவினர் சம்பந்தப்பட்டவர்களின் விவகாரம் தொடர்பாக தனித்தனியாகப் பரிசீலனை செய்து வருகின்றனர். குழுவின் அறிக்கை கிடைத்தவுடன் சந்தேகத்தின் பேரில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ்க் கைதிகளின் பிரச்சினைக்கு முடிவு காணப்படும்.

குற்றச்சாட்டுகள் தொடர்பாக ஆதாரங்கள் இருப்பின் அவர்கள் மீது வழக்குத் தாக்கல் செய்யப்படும். ஏனையோர் விடுதலை செய்யப்படுவர். வழக்கு விசாரணைகளும் துரிதப்படுத்தப் படும்''- என அமைச்சர் டியு குணசேகர கூறினார்.

தற்போது புதிய மகசின் சிறைச்சாலையில் 115பேர், வெலிக்கடையில் 18 ஆண்கள், 55பெண்கள், 5 குழந்தைகள் உட்பட கொழும்பு விளக்கமறியலில் 340பேர், நீர்கொழும்பில் - 26, அநுராதபுரத்தில் -45, வவுனியாவில் - 27, யாழ்ப்பாணத்தில் -30, திருகோணமலையில் - 40, மட்டக்களப்பில் - 35, கண்டியில் - 16, பதுளையில் என மொத்தம் 763, தமிழ்க் கைதிகள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். (உ-02)

## மரண அறிவித்தல்கள்

### *திருமதி கனகநாயகிஅம்மா இரத்தினம்*

தெல்லிப்பழை கிழக்கைச் சேர்ந்த திருமதி கனகநாயகி அம்மா இரத்தினம் நேற்று(29.10.2010)வெள்ளிக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிரவேலு - வள்ளிப் பிள்ளை தம்பதியரின் கனிஷ்ட புத்திரியும் தெல்லிப்பழையைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான வெற்றிவேலு - தங்கப்பிள்ளை தம்பதியரின் மருமகளும் காலஞ்சென்ற வெற்றிவேலு இரத்தினம் ( ஓய்வுபெற்ற OIC, சிறைச்சாலைத் திணைக்களம்) அவர்களின் அன்பு மனைவியும் இந்திரஜிற் (கிராம உத்தியோத்தர், தெல்லிப் பழை கிழக்கு), இந்திரமாலா (ஆசிரியை, மல்லாகம் மகாவித்தியாலயம்) ஆகியோரின் அன்புத் தாயும் சிவகௌரி (பொது முகாமைத்துவ உதவியாளர், பிரதேச செயலகம், யாழ்ப்பாணம்) இன் அன்பு மாமியும் ஆரணி, கார்த்திகன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் காலஞ்சென்ற திருமதி நாகம்மா சரவணமுத்துவின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(30.10.2010) சனிக் கிழமை பிற்பகல் 2 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக தெல்லிப்பழை கட்டுப்பட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நெசவுசாலை ஒழுங்கை,
தெல்லிப்பழை கிழக்கு, தெல்லிப்பழை.

தகவல்:
இந்திரஜிற் (மகன்).

### *சிவகுரு பொன்னம்பலம்*

(ஓய்வுபெற்ற ஆசிரியர்)



திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் செம்பாட்டு லேன், பொற்பதி வீதி, கொக்குவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட சிவகுரு பொன்னம்பலம் நேற்று முன்தினம் (28.10.2010) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் மனோன்மணி (ஓய்வுபெற்ற ஆசிரியை) யின் அன்புக் கணவரும் தயாளன், மஞ்சுளா, வனஜா, சசிகரன், குமுதினி ஆகியோரின் அன்புத் தந்தையும் சந்திரகுமாரி, கரன், கலைச்செழியன், சோபனா, சுதர்ஷன் ஆகியோரின் அன்பு மாமனாரும் ஈழநிலா, தேனுஷா, யுலக்ஷன், எழில்நிலா, தமிழிசை, சுடர்ச்செழியன், வேணிலா, வேணகை ஆகியோரின் அன்புப் பேரனும் இராமநாதன், காலஞ்சென்ற மணிமேகலாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரரும் சத்தியேஸ்வரி, காலஞ்சென்ற மாசிலாமணி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (29.10.2010) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் மாலை 6 மணியளவில் கொக்குவில் இந்து மயானத்தில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**செம்பாட்டு லேன்,**
**பொற்பதி வீதி,**
**கொக்குவில் கிழக்கு,**
**021 7915329**

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# மக்கள் மீதான சுமைகள் புடைக்காது தடுக்க வழி தேடாதா அரசு?

அரசாங்கத்தின் அடுத்த ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் அனேகமாக அடுத்த மாதத்தில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என எதிர்பார்க்கலாம். ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, நவம்பர் 19 ஆம் திகதி தமது இரண்டாவது (6 வருட) காலத்துக்கான பதவியை உத்தியோக பூர்வமாக ஏற்றுக்கொள்வார். அதன் பின்னரே நிதி அமைச்சர் என்ற வகையில் 2011 ஆம் ஆண்டுக்குரிய வரவு - செலவுத் திட்டத்தை அவர் சமர்ப்பிப்பார்.

அதற்கு முன்னோடியாக, அமைச்சுக்களுக்கான உத்தேசநிதி ஒதுக்கீடுகளின் விவரம் இம்மாதம் 19 ஆம் திகதி வெளியிடப்பட்டது. அந்த உத்தேச நிதி அறிக்கையின் பிரகாரம் அடுத்த வருடத்துக்கான மொத்தச் செலவினம் ஒரு இலட்சத்து 8096 கோடியே 77 இலட்சத்து 66 ஆயிரம் ரூபாவாகும்.

இந்தப் பென்னம்பெரிய தொகையில் 9,000 கோடி ரூபா மட்டுமே அரசாங்கத்துக்குக் கிடைக்கக் கூடிய வருமானம் என்று உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. ஆக, உள்நாட்டிலும் வெளிநாட்டிலுமாக சுமார் ஒரு லட்சம் கோடி ரூபாவைக் கடனாகப் பெற வேண்டிய நிர்ப்பந்தம் அரசுக்கு ஏற்படவுள்ளது.

உள்நாட்டில் பலவிதமான நுகர்வுப் பொருள்கள் மற்றும் பாவனைப் பொருள்களுக்கு அதிஉச்ச வரிகள் விதிக்கப்படும் என்பது நிச்சயத்திலும் நிச்சயமே. அவ்வாறு மக்கள் தலையில் அடித்தாலும் கூட வெளிநாட்டுக் கடன் தொகைகளைத் 'தாராளமாக'ப் பெற்றுக்கொள்ள வேண்டிய கட்டாயம், இடர்ப்பாடு அரசுக்கு உண்டாகும்.

இந்த இலட்சணத்தில் அரசாங்கப் பணியாளர்களின் சம்பளங்களை உயர்த்த வேண்டிய கடமைப்பாடு அரசுக்கு உண்டு. ஜனாதிபதித் தேர்தலில் அரச தரப்பில் தெரிவிக்கப்பட்ட வாக்குறுதி இன்னமும் ஒப்பேறவில்லை. அமைச்சர்களின் சம்பளம் சட்டப்படி உயர வேண்டும். அதற்கு வழிவிடும் பொருட்டு நீதிபதிகளின் சம்பளங்கள் உயர்த்தப்பட்டு விட்டன.

இதற்கும் மேலாக, அரசு இதுவரை வெளிநாடுகளிடம் பெற்ற கோடிக்கணக்கான ரூபாய்களுக்கு வட்டியைச் செலுத்த வேண்டிய பளுவும் அதன் முதுகில் ஏறும். அவற்றுக்குரிய அதிக வட்டித் தொகைகளையும் செலுத்த வேண்டிய நிர்ப்பந்தம் அரசுக்கு உண்டு.

அது ஒருபுறமிருக்க -

இலங்கை அரசு, இந்தியாவின் பக்கத்துக்கு அதிக பாரத்தைப் போடுவதைத் தவிர்க்கச் செய்யும் உள் நோக்கத்துடன், சீனா இலங்கை அரசுக்கு மிகப் பெரும் தொகையான கடன்களை கண்களை மூடிக் கொண்டு வழங்குகிறது. அனால் அவற்றுக்கான வட்டியோ மிகப் பல மடங்கு. அந்த வட்டித்தொகையும் மக்கள் தலைகளிலேயே ஏற்றப்படும் நிலை.

இத்தகைய ஒரு யதார்த்த நிலையில், நாட்டின் பொருளாதார வளர்ச்சி 5.6 சதவீதமாக உயர்ந்திருப்பதாக மத்திய வங்கி அறிவித்திருக்கிறது. தனிநபர் வருமானம் சராசரி 2000 டொலராக உள்ளதாக அரச தரப்பில் எடுத்துக் கூறப்பட்டு வருகிறது.

இந்தப் புள்ளிவிவரங்களுக்கும், சாதாரண மக்களின் அன்றாட வாழ்க்கை நிலைக்கும், மலைக்கும் மடுவுக்கும் உள்ள இடைவெளிகள் இருப்பதைக் காணக்கூடியதாக உள்ளது.

இவை எல்லாவற்றையும் நோக்கும் போது, அடுத்த வருடம் இலங்கை மக்களின் தலைகள் மீது விலை உயர்வுகள், வரிகள் என்ற வகைகளால் அவர்கள் தாங்கிக்கொள்ள முடியாத அளவுக்குச் சுமைகள் ஏற்றப்படும் என்பது நெருப்பின் அனலாக இப்போதே கொதிக்கிறது.

போர் முடிவுற்று, பயங்கரவாதம் தோற்கடிக்கப்பட்டு விட்டதால் நாட்டை அபிவிருத்திப் பாதையில் இட்டுச் செல்வதே அரசின் முக்கியமான முதலாவது இலக்கு என்று பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. அது வரவேற்கத்தக்க ஒன்றாகும்.

ஆனால், அபிவிருத்திப் பணிகள் திட்டமிடப்பட்டது போன்றே, அவற்றுக்கு ஒதுக்கப்பட்ட நிதிகளுடன் செய்து முடிக்கப்படவேண்டும். உள்ளூர நடைபெறும் குளறுபடிகள் கையாடல்களை நிவிர்த்தி செய்வதற்கு மேலும் மேலும் இடையூட்டல்கள் செய்யப்படுவது தவிர்க்கப்பட வேண்டும். அவ்வாறு நிதானமாக கருமங்கள் ஒப்பேறுகின்றனவா என்று கண்டிப்புடன் நிச்சயித்துக்கொள்வது அரசின் தட்டிக்கழிக்க முடியாத கடமையாகவேண்டும்.

இந்த வகையிலும், வேறு வழிகளிலும் கரைந்து போகும் அரச நிதியை அவ்வாறு அவம் போகாமல் தடுப்பதற்கான பொறிமுறைகள் தேவை. அந்தப் பொறிமுறைகள் கவனத்துடனும் கண்டிப்புடனும் செயலாகவேண்டும். அவை பகிரங்கப்படுத்தப்பட வேண்டும்.

இத்தகைய வழி முறைகளால் அரசாங்க நிதி நாட்டின் அபிவிருத்திக்கும் மக்களின் வாழ்க்கை நிலையை உயர்த்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டால் மட்டுமே அபிவிருத்திப் பணிகள் அர்த்தமுள்ளவையாக அமையும்.

மக்கள் மீது சுமைகளை ஏற்றுவதை, தவிர்க்க முடியாதது என்ற பததத்தால் நியாயப்படுத்தி அதிகார வர்க்கம் கொளுத்துப்போவதற்கு வழிசெய்யக் கூடாது.

இத்தகைய இன்னும் பல ஆக்கபூர்வமான நெறிமுறைகளை ஒழுங்கு படுத்தி நடைமுறைப்படுத்த அரசாங்கம் பொறுப்புணர்சியுடனும் அர்ப்பணிப்புடனும் முன்வர வேண்டும்.

இல்லையேல் வரவு - செலவுத் திட்டங்கள், அவை சுமத்தப்போகும் பளுக்கள் குறித்து மக்கள் எப்போதும் சுமை விழும் நேரம் குறித்த ஏக்கத்துடனேயே வாழ்க்கையைத் தேய்த்து மாள நேரிடும்.

மக்களின் வரிப்பணமே, பொருள்களுக்கு அவர்கள் செலுத்தும் கட்டணங்களே அரச நிதியாக மாறுகிறது. இதனை மனதிற்கொண்டு மக்கள் சேவைக்கும் அவர்களின் தேவைக்கும் உரியவாறு, திட்டமிட்ட முறையில் அதனைச் செலவிடுவது அவசியம். பிறநாடுகளில் இருந்து நினைத்த நினைத்தவாறு கடன்பெறுவதையும் நிறுத்துவதும் மிக அவசியம். இவற்றை மனதில்கொண்டு அரசு செயற்படப்போவது எப்போது?

# தேர்தல் இடாப்பில் பதிவு செய்யாதோருக்கு ஜனவரியில் விசேட சந்தர்ப்பம் வழங்க முடிவு

## திணைக்கள அதிகாரி தகவல்

யாழ்ப்பாணம், ஒக். 30

வாக்காளர் இடாப்பு மீளாய்வின் போது யாழ். தேர்தல் மாவட்டத்தில் இதுவரை பதிவு செய்யாதவர்கள் அடுத்த வருடம் ஜனவரி 3ஆம் திகதி முதல் 31ஆம் திகதி வரை பதிவு செய்து கொள்ளலாம்.

யாழ். தேர்தல் திணைக்களத்தின் உயர் அதிகாரி ஒருவர் இந்தத் தகவலைத் தெரிவித்தார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

யாழ். தேர்தல் மாவட்டத்தின் வாக்காளர் இடாப்பு மீளாய்வுப் பணிகள் கடந்த ஜூன் மாதம் முதல் நடைபெற்று வருகின்றன.

யாழ். மாவட்டத்தில் 435 கிராம உத்தியோகத்தர் பிரிவிலும், கிளிநொச்சி மாவட்டத்தில் 95 கிராம உத்தியோகத்தர் பிரிவிலும் வாக்காளர் இடாப்பு மீளாய்வுப் பணிகள் இடம் பெற்று வருகின்றன.

இதுவரைக்கும் 90 வீதமான பணிகள் நிறைவு பெற்றுள்ளன. முழுமையான பணிகள் எதிர்வரும் டிசெம்பர் மாதத்துக்குள் பூர்த்தியாகும்.

இந்தப் மீளாய்வின் போது தவற விடவது பிற மாவட்டங்களில் இருந்து இங்கு வந்து மீளக் குடியேறியிருக்கும் குடியிருப்பாளர்கள், தமது பதிவுகளை மேற்கொள்ளலாம்.

அத்துடன் மீளாய்வு தொடர்பான ஆட்சேபனைகளை தத்தமது கிராம உத்தியோகத்தர்கள் ஊடாக முறைப்பாட்டுக் கடிதங்கள் மூலம் தெரிவித்துக் கொள்ளலாம்.

எதிர்வரும் ஜனவரி மாதம் நடைபெறவுள்ள வாக்காளர் இடாப்பு மீளாய்வுப் பணிகளுக்காக வேறொரு வகையான விண்ணப்படிவங்கள் எதிர் வரும் நவம்பர் மாதம் இங்கு எடுத்து வரப்படவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ஐ - 9)

# மகாவலி வலயத்தில் சட்டவிரோதக் கட்டடங்கள் அகற்றுமாறு அமைச்சர் அதிகாரசபைக்கு உத்தரவு

கொழும்பு,ஒக்.30

மகாவலி வலயத்தில் சட்ட விரோதமாக நிர்மாணிக்கப்பட்டிருக்கும் சகல கட்டடங்களும் அடுத்து வரும் சில தினங்களில் அப்புறப்படுத்தப்பட வேண்டும். அவ்வாறு அகற்றப்படாத கட்டடங்களை நிர்மூலமாக்க சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

நீர்ப்பாசன, நீர் முகாமைத்துவ அமைச்சர் நிமல் சிறிபால டீ சில்வா மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் மகாவலி அதிகார சபைக்கு உத்தரவு பிறப்பித்துள்ளார்.

அனுமதியற்ற இத்தகைய கட்டடங்களை அப்புறப்படுத்த முயற்சிக்கும் போது அரசியல் செல்வாக்கு மூலம் அதைத் தடைசெய்ய சிலர் முயல்வதாகவும் ஜனாதிபதியின் உத்தரவுக்கமைய எதிர்காலப்பணிகள் முன்னெடுக்கப்படுமெனவும் அமைச்சர் தெரிவித்தார்.

மகாவலி வலயத்தில் உள்ள ஹிராந்துருகோட்டே, தெஹியத்த கண்டிய, மாதுரு ஓயா, மன்னம்பிட்டிய பிரதேசங்களில் சுமார் 500 அனுமதியற்ற கட்டடங்கள் நிர்மாணிக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் மேலும் தெரிவித் தார். (ஐ - 15)

# பச்சிலைப்பள்ளியில் குடியேறியோர் பிரச்சினை; தீர்வுகாண நவ. 7 இல் கலந்துரையாடல்

பளை,ஒக்.30

பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட மீளக்குடியேறியுள்ள பொதுமக்களின் அடிப்படைப் பிரச்சினைகள் தொடர்பாக ஆராய்வதற்கான கலந்துரையாடல் ஒன்று அடுத்த மாதம் ஏழாந் திகதி பளை கிறிஸ்தவ தேவாலயத்தில் நடைபெறவுள்ளதாக பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் ரி.முகுந்தன் தெரிவித்துள்ளார்.

இந்தக் கலந்துரையாடலில் பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுகைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, நாடாளுமன்ற உறுப்பினர் பச்சிலைப்பள்ளி பிரதேசசபைச் செயலாளர் சி. சிவப்பிரகாசம், பச்சிலைப்பள்ளி மேற்கு ஒன்றியத் தலைவர் எஸ். மார்க்கண்டு, வடமாகாணதெங்குச் செய்கை உரிமையாளர் சங்கத் தலைவர் எஸ். மோகனதாஸ் ஆகியோர் கலந்து கொள்வார்கள். (ஐ - 311 - 313)

# வங்கிச் செயற்பாடுகளை மேற்பார்வை செய்வோம்; ஆனால் மக்களின் வைப்புகளுக்கு பொறுப்பு ஏற்க முடியாது

## மத்தியவங்கி ஆளுநர் தெரிவிப்பு

கொழும்பு,ஒக்.30

பொதுமக்களின் வைப்பீடுகளை ஏற்றுக் கொள்வதற்காக அங்கீகரிக்கப்பட்ட வங்கிகளின் நடவடிக்கைகளை மேற்பார்வை செய்யமுடியுமே தவிர அந்த வைப்புகளுக்கான பொறுப்பை ஏற்கமுடியாதென மத்திய வங்கி ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் தெரிவித்தார்.

இலங்கை மத்திய வங்கி கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் வைத்து மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:

அங்கீகரிக்கப்பட்ட வங்கிகளின் நடவடிக்கைகளை மேற்பார்வை செய்யவும் அந்த நடவடிக்கைகள் மூலம் சிக்கல்கள், பிரச்சினைகள் தோன்றும் போது மட்டும் தலையிட எமக்கு அதிகாரம் உண்டு.

பதிவு செய்யப்படாத எந்தவொரு நிதி நிறுவனத்திலும் பொதுமக்கள் தமது விருப்பத்திற்கேற்ப முதலீடுகளை செய்ய உரிமை உண்டு.எனினும் அவர்களது வைப்பீடுகளுக்கு மத்திய வங்கி பொறுப்பேற்காது. அவ்வாறு செய்யப்பட்ட வைப்பீடுகளை இழக்கும் பட்சத்தில் மத்திய வங்கி எந்தவிதமான முறைப்பாட்டையும் ஏற்றுக் கொள்ளாது.

வாடிக்கையாளர் தங்களது முதலீடுகளை செய்யும் போது மிகவும் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும். உயர்ந்த வட்டி கிடைக்கும் என்பதால் கண் மூடித்தனமாக பணத்தை வைப்பிலிடக் கூடாது. வைப்புக்கள் செய்ய முன்னர் அந்த நிதி நிறுவனங்கள் தொடர்பில் தீர ஆராய்ந்த பின்னரே முதலிட வேண்டும் - என்றார். (ஐ - 15 - 5)

# கூட்டுறவுத் துறையினருக்கு ஓய்வூதியத்திட்டம் வருகிறது

## ஆராய்வதற்கு குழு நியமனம்

கொழும்பு, ஒக். 30

கூட்டுறவுத் துறையிலுள்ள 40 ஆயிரம் ஊழியர்கள் பயனுறும் வகையில் பென்ஷன்(ஓய்வூதிய) திட்டம் ஒன்று கொண்டு வரப்படவிருக்கிறது.

இதுசம்பந்தமாக ஆராய்ந்து அறிவிப்பதற்காக கூட்டுறவு மற்றும் வர்த்தக அமைச்சின் செயலாளர் தலைமையில் குழுவொன்றை அமைச்சரவை நியமித்துள்ளது. திறைசேரிக்குப் பாரமாக இருக்காத வகையில் இந்தத் திட்டத்தை அமுல்படுத்துவது பற்றி இக்குழுவினர் ஆராய்வார்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் குழுவில் உள்ளக வர்த்தகம் மற்றும் கூட்டுறவுத்துறை செயலாளர் தலைமையில் சம்பந்தப்பட்ட திறைசேரி, திணைக்களப் பிரதிநிதிகள், மத்தியவங்கி மற்றும் சமூக பாதுகாப்புச் சபையின் பிரதிநிதிகளும் அங்கம் வகிப்பார்கள். (ப)

# தேசிய மருந்துகள் கொள்கை ஜனவரியிலிருந்து அமுலாகும்

கொழும்பு, ஒக். 30

தேசிய மருந்துகள் தொடர்பான கொள்கை எதிர்வரும் ஜனவரி மாதம் முதலாம் திகதி தொடக்கம் கட்டம், கட்டமாக அமுல்படுத்தப்படவிருக்கின்றது. சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன இந்தத் தகவலை வெளியிட்டிருக்கின்றார்.

அமரர் பேராசிரியர் சேனக்க பிபிலே தயாரித்து வழங்கியுள்ள வழிகாட்டல்கள் மற்றும் கொள்கைகளின் அடிப்படையில் தேசிய மருந்துகள் கொள்கை உருவாக்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தின்படி தரம் குறைந்த மருந்துகள் விற்பனை, மருந்துகள் அதிகப்படியாக குறிக்கப்படுதல், இலங்கைக்குத் தேவையற்ற 9,000 வகையான மருந்துகள் இறக்குமதி செய்யப்பட்டமை போன்ற விடயங்கள் கவனத்தில் கொள்ளப்படும் என்று அமைச்சர் தெரிவித்துள்ளார்.

அடுத்த ஆண்டு ஜனவரி முதல் அமுலுக்கு வரவிருக்கும் தேசிய மருந்துகள் கொள்கையானது சுகாதாரத் துறையில் கடந்த பல வருடங்களாக இருந்து வரும் குறைபாடுகளுக்கு முடிவு காண்பதாய் இருக்கும். குறிப்பாக மருந்துகளை அவைகளின் விற் [illegible] பெயரைக் குறிப்பிட்டு எழுதப்படும் பிரச்சினைக்கு முடிவு ஏற்படும் - என்றார் அமைச்சர்.

தாதிகள் சாசனம் தொடர்பாக நடைபெற்றுவரும் சர்ச்சை பற்றி குறிப்பிட்ட அமைச்சர் இந்த சாசனம் காரணமாக சுகாதார அமைச்சில் உள்ள எந்த ஒரு பிரிவினருக்கோ அல்லது தொழிற்சங்கத்துக்கோ பாதகம் ஏற்பட தாம் அனுமதிக்கமாட்டார் என்று தெரிவித்தார். சம்பந்தப்பட்ட எல்லா தரப்பினருடனும் கலந்தாலோசிக்கப்பட்டதன் பின்னரே இந்த சாசனம் தயாரிக்கப்படுகின்றது என்றார்.

1984 ஆம் ஆண்டிலிருந்து இது அமுலில் இருந்து வருகின்றது. ஆனால், அதில் சில அம்சங்கள் திருத்தப்பட வேண்டும். எல்லாவித ஆலோசனைகளும், சிபாரிசுகளும் உள்ளடக்கப்பட்டுள்ளன. அப்படியிருக்க புதிய சாசனம் குறித்து ஏன் சிலர் குறைகூறுகிறார்கள் என்று புரியவில்லை - என்றார் அமைச்சர். (சி)

## நாளை

| | | |
|---|---|---|
| ஐப்பசி 14 | : | 31.10.2010 ஞாயிற்றுக்கிழமை |
| திதி: | : | நவமி பி.இ. 12.19 வரை |
| நட்சத்திரம் | : | ஆயிலியம் மு.இ. 09.03 வரை |
| சுபநேரம் | : | 09.03-10.33 வரை |
| ராகுகாலம் | : | 04.33-06.03 வரை |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருமண நல் வாழ்த்துக்கள்



27.10.2010 அன்று இனிய திருமண பந்தத்தில் இணைந்த மானிப்பாயைச் சேர்ந்த என் ஆருயிர் நண்பன்

**ஜெகந்தன் B.Sc.**

(ஆசிரியர், மதீனா மத்திய கல்லூரி கண்டி)

அவர்களும்,

மானிப்பாயைச் சேர்ந்த

**லோஜினி**

அவர்களும் பலபேறும் பெற்று வளமோடும், நலமோடும் பல்லாண்டு வாழ மகிழ்வோடு வாழ்த்துகின்றேன்.

வாழ்த்துபவர்:
என்.தனுசுஜன்.
சீரணி,
சண்டிலிப்பாய்.
(105332)

---

**FAIR PHARMA (PVT) LTD**

அயுர்வேத மருந்து உற்பத்தியாளர்கள்

## நெஞ்சுவலியா..?

எங்கள் ஆயுர்வேத மருந்து வகைகள் மூலம் இதய அடைப்புகள் குணமாக்கப்படுகின்றன. பக்கவிளைவுகள் இல்லை. சத்திரசிகிச்சை அவசியமில்லை. மருந்து பாவனையின் 25-50 தினங்களுக்கு இடைப்பட்ட காலப்பகுதியில் சிறந்த மாற்றம் தென்படும்.

கொலஸ்ட்ரோல், புற்றுநோய், தைராயிட் பிரச்சினைகள், மூட்டுவலிகள், நீரிழிவுப்புண்கள், இருமல் சளி, ஒற்றைத் தலைவலி, பீனிசம், நோய் எதிர்ப்புச் சக்தியை அதிகரித்தல் என்பனவற்றுக்கும் எமது மூலிகை மருத்துவம் பெரும் குணமளிக்கின்றது.

**HOTLINE : 0779046757- 011 5558442**

இலவச ஆலோசனைகளுக்கு சந்திக்கவும்

வவுனியா: 07.11.2010
ஆதி மெடிக்கல்ஸ் சென்ரர்,
கொறவப்பொத்தானை வீதி.

பருத்தித்துறை: 01.11.2010
றோயல் ஸ்டார் மெடிக்கல் சென்ரர்,
செட்டி வீதி.

யாழ்ப்பாணம்: 02.11.2010
கமலா டிஷ்பென்சரி
1207, K.K.S. றோட்,
யாழ்ப்பாணம்.

L5 / East Tower / 1C,
World Trade Centre, Colombo 01
A BOI approved & ISO 9001 - 2008
QMS Certified Company

---

## வருடாந்த பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம், ஒக். 30

திக்கம் மத்திய சனசமூக நிலையத்தின் வருடாந்தப் பரிசளிப்பு விழாவும் கலை நிகழ்வும் இன்று சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு சனசமூக நிலையத் தலைவர் பு.தினேஸ் தலைமையில் திக்கம் கலாசார மண்டபத்தில் நடைபெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் நாடாளு மன்ற உறுப்பினர் சி. சிறிதரன் கலந்து கொள்வார்.

இந்நிகழ்வில் அகில இலங்கை கலை இலக்கிய சங்கத்தலைவர் பொன் சுகந்தன் தலைமையிலான பட்டிமன்றம் மற்றும் வில்லிசை நிகழ்வும் , நாடகம், நடனம் போன்ற கலைநிகழ்வும் இடம்பெறவுள் ளன. (எ-319)

### இறைச்சிக் கோழி விற்பனை

புறோயிலர் இறைச்சிக் கோழிகள் மொத்தமாகவும் சில்ல றையாகவும் மிகக் குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம். சுத்தம் செய்யப்பட்டது 1kg 450/= மட்டும்.
விஜயகுமார்,
தளப்பிட்டி வீதி, ஆனைக்கோட்டை. தொ.பே.: 750410205

### விற்பனைக்குண்டு

**ISUZU-TX-model-26-XXXX**

முற்றிலும் மறுசீரமைக்கப்பட்ட நிலையில் லொறி விற்பனைக் குண்டு. பார்வையிடும் இடம் லங்கா எரிபொருள் நிரப்பு நிலையம், பள்ளி முனை மன்னார்.

தொலைபேசி இலக்கம்:-
0232250656,
0771906707,
0773429225.

### வேலையாள்கள் தேவை

192, இராமநாதன் றோட், திருநெல்வேலியில் அமைந்துள்ள முகேஷ் சைவ உணவகத்திற்கு சமையல் ஆள்கள், உணவு பரிமாறுபவர்கள் தேவைப்படுகின்றனர். (இருபாலாரும்)

தொடர்பு : 0776062350

---

உ
சிவமயம்

வலி-கிழக்கு

## சைவ சமய அருள்நெறி மன்றம்

## முதலாவது ஆண்டு நிறைவு விழாவும் மலர் வெளியீடும்

இடம்:- கோப்பாய் வீரபத்திர கோயிலடி
காலம்:-நாளை (31.10.2010) ஞாயிறு மாலை 5 மணி
தலைவர்:-சிவஸ்ரீ சோ.இ.பிரணதார்த்திஹரக் குருக்கள் (மன்றத் தலைவர்)
பிரதம விருந்தினர்:- பேராசிரியர் திரு.நா.சண்முகலிங்கன் அவர்கள் (துணைவேந்தர், யாழ்.பல்கலைக்கழகம்)
சிறப்பு விருந்தினர்:- திருமதி மிலாசினி அப்புத்துரை அவர்கள் (கலாசார உத்தியோகத்தர், பிரதேச செயலகம், கோப்பாய்)
வரவேற்புரை:- சைவப் புலவர் செ.கந்தசத்தியதாசன் அவர்கள்
ஆசியுரை:- ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரஞானசம்பந்ததேசிக பரமாசார்யசுவாமிகள் (நல்லை ஆதீன முதல்வர்)
வாழ்த்துரைகள்:- திரு.சிவ.சரவணபவன்(சிற்பி) அவர்கள் (கௌரவ ஆசிரியர், இந்து சாதனம்)
பிரம்மஸ்ரீ ப.சிவானந்தசர்மா (கோப்பாய் சிவம்)
திரு.எஸ்.கே.யோகநாதன் (பீடாதிபதி, கல்வியியற் கல்லூரி, கோப்பாய்)

★சகலகலாவல்லி மாலை மனனப் போட்டியில் வெற்றி பெற்றோருக்கான பரிசில்கள் வழங்கல்:-
திருமதி.கௌரி சண்முகலிங்கன் அவர்கள்

★'அருள் அமுதம்' மலர் வெளியீட்டு விழா
வெளியீட்டுரை-கலாநிதி திரு.மா.வேதநாதன் M.A.அவர்கள் (தலைவர், இந்து நாகரிகத்துறை, யாழ்.பல்கலைக்கழகம்)
மதிப்புரை:-திருமதி சுகந்தி ஸ்ரீ முரளீதரன் அவர்கள் (சிரேஷ்ட விரிவுரையாளர், இந்து நாகரிகத் துறை, யாழ்.பல்கலைக்கழகம்)
முதற் பிரதி பெறுபவர்:- ஸ்ரீ தொண்டுநாதன் சுவாமிகள் (ஹவாய் ஆதீனம்) (சுப்பிரமுனிய கோட்டம், கோப்பாய்)

கௌரவிப்பு:-
★சிவஸ்ரீ.வை.விருத்தகிரீஸ்வரக் குருக்கள் (அச்சுவேலி)
★பிரம்மஸ்ரீ ப.சிவானந்த சர்மா (கோப்பாய் சிவம்)
★திரு.கே.வி.குணசேகரம் (ஆசிரியர், கோப்பாய்)
★சமூகஜோதி திரு.சிவசுப்பிரமணியம் செட்டியார் (நீர்வேலி)
★சிவத்திரு சபாபதிஐயா சோமசுந்தரம் (அச்சுவேலி)
★வில்லிசைக் கலைஞர் திரு.க.சத்தியதாஸ் (சிறுப்பிட்டி)
★விஸ்வப் பிரம்மஸ்ரீ, சிற்பக் கலாநிதி விஸ்வலிங்கம்(நீர்வேலி)

கலை நிகழ்வுகளும் இடம்பெறும்.
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

சைவசமய அருள்நெறி மன்றம், வலி-கிழக்கு

விளம்பர அனுசரணை
பவானி களஞ்சியம் — மொத்த சில்லறை விற்பனையாளர் (இராசன்கடை) இராசவீதி, நீர்வேலி மேற்கு.
எச்.என்.வி. ஹாட்வெயர் — பருத்தித்துறை வீதி, நீர்வேலி.

---

## வன்னி யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட பாடசாலை மாணவர்களுக்கு உதவும் முகமாக...

**LIONS CLUB OF COLOMBO CAPITAL CITY - DIS.306 B2**
**LIONS CLUB OF MANIPAY CIRCLE - DIS. 306 B1**

வீரகேசரி — THE PREMIER TAMIL DAILY IN SRI LANKA
வெற்றி FM
இணைந்து வழங்கும்

உலகப்புகழ் பெற்ற மாயாஜால சக்கரவர்த்தி

## PROF. P.M. மித்ராவின் மாயாஜால்



வியக்கவைக்கும் மாய உலகம்

அக்டோபர் 29/30/31 திகதிகளில்

29/30 இரு காட்சிகள் 2.08/6.04 மணிக்கு
31 மூன்று காட்சிகள் 11.08/2.35/6.31 மணிக்கு

**யாழ்ப்பாணம், வீரசிங்கம் மண்டபம்**

டிக்கட்டுகள் V.I.P 500/- 300/-

மாயாஜால் பம்பர் குலுக்கல்

டிக்கட்டுகளை வாங்குங்கள்! பரிசுகளை வெல்லுங்கள்!!

நவம்பர் மாதம் 3ம் திகதி புதன்கிழமை காலை 10.30 மணிக்கு வீரகேசரி காரியாலயத்தில் நடைபெறும் குலுக்கலில் தெரிவு செய்யப்படும் வெற்றியாளர்களுக்கு வியக்க வைக்கும் பரிசுகள் காத்திருக்கின்றன!

கொழும்பு, வவுனியா, யாழ்ப்பாணம் நிகழ்ச்சிகளுக்கான டிக்கட்டுகள் மட்டுமே குலுக்கலில் சேர்த்துக்கொள்ளப்படும்.

1. SPICE TRAVELS வழங்கும் - BANGKOK சென்றுவர விமான டிக்கட்
2. SPICE TRAVELS வழங்கும் - SINGAPORE சென்றுவர விமான டிக்கட்
3. SPICE TRAVELS வழங்கும் - CHENNAI சென்றுவர விமான டிக்கட்
4. ஜனதா ஸ்டீல்ஸ் வழங்கும் - DIGITAL CAMERA
5. நவீன் செரமிக்ஸ் வழங்கும் - MOBILE PHONE
6. MELWARE ROLLING வழங்கும் - MOBILE PHONE
7. கணேஷ் டெக்டைல்ஸ் வழங்கும் - பெறுமதியான சாரி, சல்வார்
8. சிட்டி பொய்ண்ட் வழங்கும் - 20 பம்பரம் மார்க் சாரங்கள்
9. EDNA CHOCOLATES வழங்கும் - EDNA சொக்கலட் பொதி

### டிக்கட்டுகள் கிடைக்குமிடங்கள்

| | | |
|---|---|---|
| கோசி ரெஸ்ரோரன்ட் | - 15, ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம். | - ☎: 021 2225 899, 021 222 7100 |
| ஈஸ்வரன் டிரான்ஸ்போர்ட் | - 69, 115, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். | - ☎: 021 2222 813 |
| வீரகேசரி காரியாலயம் | - 117, ஸ்டேசன் ரோட், யாழ்ப்பாணம். | - ☎: 021 5670 100 |
| வாணி டெக்ஸ் | - 81, கிராண்ட் பஜார், யாழ்ப்பாணம். | - ☎: 021 2225 578 |
| ஸ்பைஸ் டிரவல்ஸ் | - 412, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். | - ☎: 021 2228 591 |
| பாக்கியரத்னம் ஹாட்வெயார் ஸ்டோர் | - 163, 165, பிரதான வீதி, சங்கானை | - ☎: 021 3212 713, 021 225 015 |
| சீமாட்டி புடவைக்கடல் | - 122, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். | - ☎: 021 2228 564 |
| கரண்ட் இலக்ரிகல் | - 100, ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம். | - ☎: 021 2223 916 |
| நீலாம்பரி உணவகம் | - 744, KKS வீதி, தட்டார் தெரு | - ☎: 021 5100 245 |
| சங்கீதா மொபைல் லிங்க் (பிரை) லிமிடட் | - 412, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். | - ☎: 021 2222 525, 021 2228 559 |

GANESH TEXTILES — 81, 83, Main Street, Colombo-11. Tel: 2325128, 2343078
NAVEEN CERAMIC — KOTAHENA · NAWALA
SPICE TRAVELS & TOURS (PVT) LTD
Melwire Rolling (Pvt) Ltd. — MANUFACTURERS OF STEEL
CITY POINT — 20TH ANNIVERSARY 1990-2010
JANATHA STEEL — Importers & General Hardware Merchants — 26, QUARRY ROAD, COLOMBO 12. TEL: 0112 544 289
Edna CHOCOLATES
LANKA BROADBAND NETWORKS — LBN

Cosy RESTAURANT (Pvt) Ltd. — MANIYAMS BUILDING, 15, OFF STANLEY ROAD, JAFFNA. TEL: 021-222 5899, 021-2227100
NEW KOSALAI TRADERS — 265, OLD MOOR STREET, COLOMBO 12. TEL: 011 2458823, 011 4994238
MANOJ Express Services — 67/A, WOLFENDHAL STREET, COLOMBO 13. TEL: 2390128
ESWARRAN TRANSPORT SERVICES — 69, 115, KASTHURIYAR ROAD, JAFFNA. TEL: +94 021 2222813
வாணி டெக்ஸ் — 81, கிராண்ட் பஜார், யாழ்ப்பாணம். தொ.இல: 021 2225578.
SPICE TRAVELS & TOURS (PVT) LTD — 412, HOSPITAL ROAD, JAFFNA. TEL: 021 2228591
PAKIYARATNAM HARDWARE STORES — 163, 165, MAIN STREET, CHANKANAI. TEL: 021-3212713, 021 225015.
சீமாட்டி புடவைக்கடல் — 122, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 021 2228564

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 4 ஆதார வைத்தியசாலைகளுக்கு சத்திர சிகிச்சை கட்டில்கள் அன்பளிப்பு

## யாழ்.மாவட்டப் படைகளின் தளபதி கையளித்தார்

யாழ்ப்பாணம்,ஒக்.30

யாழ்.மாவட்டத்திலுள்ள நான்கு சுகாதார வைத்தியசாலைகளுக்கு 36 கட்டில்கள் அன்பளிப்பாக கையளிக்கும் நிகழ்வு நேற்று வெள்ளிக்கிழமை யாழ்.ஆஸ்பத்திரி வீதியிலுள்ள இராணுவத்தினரின் சிவில் விவகாரம் மற்றும் பொது மக்கள் தொடர்புகள் அலுவலகத்தில் இடம்பெற்றது.

யாழ்ப்பாணம் பாதுகாப்புப் படைகளின் தலைமையகத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் யாழ்.மாவட்ட படைகளின் தளபதி மேஜர் ஜெனரல் எம்.ஹத்துருசிங்க கலந்து கொண்டு கட்டில்களை அன்பளிப்புச் செய்தார். தெல்லிப்பழை, சாவகச்சேரி, பருத்தித்துறை, ஊர்காவற்றுறை ஆகிய நான்கு ஆதார வைதியசாலைகளுக்கே இந்தக்கட்டில்கள் கையளிக்கப்பட்டன.

- நான்கு ஆதார வைத்தியசாலைகளினதும் வைத்திய அதிகாரிகளிடம் கட்டில்கள் கையளிக்கப்பட்டன.

தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலைக்கு இரண்டு சத்திர சிகிச்சை கட்டில்களும் பதினைந்து விடுதிக் கட்டில்களும், சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்கு இரண்டு சத்திரசிகிச்சைக் கட்டில் களும் பதின்நான்கு விடுதிக்கட்டில் களும், பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கு இரண்டு சத்திரசிகிச்சைக் கட்டில்களும், ஊர்காவற்றுறை ஆதார வைத்தியசாலைக்கு ஒரு சத்திரசிகிச்சை கட்டிலும் கையளிக்கப்பட்டன.

அவுஸ்ரேலியாவிலுள்ள 'லக்சவிய பவுண்டேசன்' என்ற அமைப்பினாலேயே இந்த 36 கட்டில்களும் அன்பளிப்பாக வழங்கப்பட்டன. அவற்றைப் பெற்று இராணுவத் தளபதி வைத்தியசாலை நிர்வாகத்திடம் ஒப்படைத்தார். இந்த நிகழ்வில் யாழ்.அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார், யாழ்.மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆர்.கேதீஸ்வரன், யாழ்.போதனா வைத்தியசாலைப் பிரதிப் பணிப்பாளர் எஸ்.ஸ்ரீபவானந்தராஜா, யாழ்.நகர கட்டளைத் தளபதி மேஜர் ஜனகமல்கம, பாதுகாப்புப் படைப்பிரிவின் உயர் அதிகாரிகள், யாழ்.மாவட்ட செயலக அதிகாரிகள் எனப் பலரும் விருந்தினர்களாகக் கலந்து கொண்டனர்.

யாழ்.போதனா வைத்தியசாலை தாதியர் பயிற்சிக் கல்லூரி அதிபர், விரிவுரையாளர்கள், தாதிய மாணவர்கள், பாடசாலை மாணவர்கள் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் உரையாற்றிய யாழ். படைகளின் தளபதி மேஜர் ஜெனரல் ஹத்துருசிங்க "பாதுகாப்புப் படையினர் யாழ். மாவட்டத்திலுள்ள மக்களுக்குப் பல்வேறு விதமான உதவிகளை வழங்கி வருகின்றனர். வறுமைக்கோட்டின் கீழ் வாழும் மக்களுக்கு வீடுகள் வழங்கல், வைத்தியத்துறைக்கு உதவுதல், குருதிக் கொடை வழங்கல் எனப் பல்வேறு உதவிகளை வழங்கி வருகின்றோம்"- என்றார்.

யாழ்.அரசாங்கஅதிபர்இமெல்டா சுகுமார் தனதுரையில், ''அபிவிருத்தித் திட்டங்களை நடைமுறைப்படுத்தும் போதும் பாதுகாப்புப் படையினர் அதிக ஒத்துழைப்புகளை வழங்கி வருகின்றனர். உயர் பாதுகாப்பு வலயங்களாக இருந்த இடங்களில் மிதிவெடிகள் அகற்றப்பட்டதும் மீளக் குடியமர்வு இடம்பெறும். மேலும் செய்திகளைப் பிரசுரிக்கும் போது திரிபுபடுத்தி அர்த்தமாற்றம் செய்து பத்திரிகைகள் சில பிரசுரிப்பது மன வேதனை அளிக்கிறது" என்று குறிப்பிட்டார். (204-14-86)



யாழ்.மாவட்டத்திலுள்ள ஆதார வைத்தியசாலைகளுக்கு கட்டில்கள் கையளிக்கும் நிகழ்வு சிவில் விவகாரம் மற்றும் பொதுமக்கள் தொடர்புக் காரியாலயத்தில் நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.நிகழ்வில் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை வைத்திய அதிகாரி ஜெயக்குமார், சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை வைத்திய அதிகாரி தயாளன், ஊர்காவற்றுறை ஆதார வைத்தியசாலை வைத்திய அதிகாரி அருணா புண்ணியமூர்த்தி, பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை வைத்திய அதிகாரி நந்தகுமார் ஆகியோரிடம் யாழ்.மாவட்ட இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் எம்.ஹத்துருசிங்க கட்டில்களுக்கான ஆவணத்தை கையளிப்பதனைப் படங்களில் காணலாம்.

யாழ்.மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார், யாழ்.மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஆர்.கேதீஸ்வரன் ஆகியோர் உரை நிகழ்த்துவதனை இறுதி இரு படங்களிலும் காணலாம். (படங்கள்:-ரட்ணம்,நவம்)

## குடாநாட்டின் பிரதேசச் செய்திகள்

## யாழ்-பருத்தித்துறை வீதி அகலிப்புப் பணிகளுக்காக மந்திகை ஆஸ்பத்திரிச் சந்தி தற்காலிகமாக மூடப்பட்டது

யாழ்ப்பாணம் ஒக். 30

யாழ்.பருத்தித்துறை வீதி அகலிப்புப் பணிகளுக்காக மந்திகை ஆஸ்பத்திரிச் சந்தியில் இருந்து மந்திகைச் சந்திவரை நாளை மறுதினம் திங்கட்கிழமை தொடக்கம் மேற்படி வீதியை (ஏபி20) மறு அறிவித்தல் வரும் வரை மூடுவதற்கு தீர்மானித்துள்ளதாக வீதி அபிவிருத்தி அதிகார சபையின் யாழ்.அலுவலக பிரதம பொறியியலாளர் எந்திரி வி.சுதாகர் அறிவித்துள்ளார்.



எனவே நாளை மறுதினம் திங்கட்கிழமை தொடக்கம் அனைத்து விதமான வாகனங்களும் பொது மக்களும் மறு அறிவித்தல் வரை மாற்றுப்பாதையாக துன்னாலைச் சந்தி வரை பயணம் செய்து பின்னர் மந்திகைச் சந்தியை சென்றடையுமாறு அவர் மேலும் கேட்டுள்ளார். (201)

## கோயிற் குடியிருப்பில் வங்கி அமைத்த வீடுகள் பயனாளிகளுக்கு நாளை கையளிப்பு

தென்மராட்சி,ஒக். 30

கொமர்ஷல் வங்கியினால் சாவகச்சேரி, கோயிற்குடியிருப்பு பிரிவில் வறுமைக்கோட்டின் கீழ் உள்ள நான்கு குடும்பங்களுக்கென அமைக்கப்பட்ட வீடுகள் நாளை ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணிக்கு உத்தியோக பூர்வமாகப் பயனாளிகளிடம் கையளிக்கப்படவுள்ளன.

வங்கியின் சாவகச்சேரிக் கிளை முகாமையாளர் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வுக்கு வங்கியின் பிரதம செயற்பாட்டு அலுவலர் ரவி டயஸ், சிரேஷ்ட முகாமைத்துவ உத்தியோகத்தர்கள், யாழ். மாவட்ட கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துருசிங்க உட்படப் பலர் கலந்து கொள்வர். (ஐ-207)

## மீளக்குடியமர்ந்த முஸ்லிம் மக்கள் அடிப்படை வசதிகளைக் கோருகின்றனர்

### அரச அதிபரிடம் மகஜர் கையளிக்க ஏற்பாடு

யாழ்ப்பாணம், ஒக். 30

யாழ்.மாவட்டத்தில் மீளக்குடியமர்ந்து வாழ்ந்து வரும் முஸ்லிம் மக்களுக்கு அடிப்படை வசதிகளை ஏற்படுத்தித்தர வேண்டும் எனக் கோரும் மகஜர் ஒன்று யாழ். அரச அதிபர் இமெல்டா சுகுமாரிடம் கையளிக்கப்படவுள்ளது.

மீளக்குடியேறிய யாழ்.முஸ்லிம் மகளிர் அபிவிருத்திக் குழுவினாலேயே அந்த மகஜர் கையளிக்கப்படவுள்ளது.

இந்த விடயம் தொடர்பாக அந்த அமைப்புப் பிரதிநிதிகள் உதயனுக்கு தெரிவித்தவை வருமாறு;

யாழ்.மாவட்டத்தில் மீளக்குடியமர்ந்துள்ள முஸ்லிம் மக்களுக்கு அடிப்படை வசதிகள் இதுவரை ஏற்படுத்தித்தரப்படவில்லை. இதன் காரணமாக அந்த மக்கள் அகதியாக வாழ வேண்டிய அவல நிலைமை தொடர்கிறது.

வீட்டுத்திட்டம், வீடுகள் புனரமைப்பு, குடிதண்ணீர் வசதி, மலசல கூட வசதி, வாழ்வாதார தொழில் முயற்சி, மின்சாரவசதி, பாடசாலை மற்றும் வணக்கஸ்தல புனரமைப்பு உள்ளிட்ட அடிப்படை வசதிகள் ஏதுமின்றி எமது பகுதி மக்கள் வாழ்ந்து வருகின்றனர்.

அமைச்சர்கள், அரச அதிகாரிகள் எமது பகுதிக்கு விஜயம் செய்து நிலைமைகளைக் கேட்டறிந்து செல்கின்றனரே தவிர எமக்கு உதவுவதற்கு அவர்கள் முன்வரத் தயங்குகின்றனர்.

இந்த வருடம் இதுவரையும் 240 முஸ்லிம் குடும்பங்கள் யாழ்ப்பாணத்துக்கு வந்து தங்கியுள்ளன. அவற்றில் 175 குடும்பங்கள் நிரந்தரமாக வாழ்ந்து வருகின்றன.

மேலும் முஸ்லிம் சமூகத்துக்கு முன்னோடியாக பெண்களாகிய நாம் ஒரு குழுவாக செயற்பட்டு அந்த மக்களுக்கான அடிப்படை வசதிகளைப் பெற்றுக் கொடுக்க திட்டமிட்டுள்ளோம் - எனவும் தெரிவித்தனர். (ஐ-14)

## பாரம்பரிய முறையில் தயாரித்த பழரசங்களை சந்தைப்படுத்துகிறது பனை அபிவிருத்திச்சபை

யாழ்ப்பாணம், ஒக். 30

பாரம்பரிய முறையில் தயாரிக்கப்பட்ட பழரசச் சாறுகளை பனை அபிவிருத்திச்சபை மக்களுக்கு சந்தைப்படுத்தியுள்ளது.

பனை அபிவிருத்திச்சபையின் தலைவர் பசுபதி சீவரத்தினம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

பனம்பழம்,மாம்பழம் மற்றும் பல்வேறு பழ வகைகளைக் கொண்ட பழரசச் சாறுகளைப் பனை அபிவிருத்திச்சபை தயாரித்து வருகிறது.அவை பாரம்பரிய முறையில் தயாரிக்கப்பட்டு விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

இதேவேளை போத்தல் களில் அடைக்கப்பட்டு விற்பனை செய்யப்படும் 750 மில்லி லீற்றர் பழச்சாற்றின் விற்பனை விலை 245 ரூபா ஆகும்.

இந்தப் பழச்சாறு சிறந்த மருத்துவக் குணம் உடையது எனக் கண்டறியப்பட்டுள்ளது. மேற்படி பழச்சாறு விற்பனை செய்வதன் மூலம் மூன்று மாத காலத்தில் ஐந்து லட்சம் ரூபா இலாபம் அடையலாம் என உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை பனங்களி பிழியும் ஆறு இயந்திரங்கள் மூலம் இந்த வருடம் 18 ஆயிரம் லீற்றர் பனங்களி சேகரிக்கப்பட்டுள்ளது. மேலும் இந்தப் பனங்களி உற்பத்தித் துறையில் 40 பெண் கள் ஈடுபட்டு தொழில் வாய்ப்பைப் பெற்றுள்ளனர் - என்றார். (201-14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாடகைக்கு விடப்படும்

கிணறு வெட்டுவதற்கு, கட்டட இடிபாடுகள் அகற்றுவதற்கு, காணியை துப்பரவு செய்வதற்கு, மண்ணணைகளை அகற்றுவதற்கு, மண் ஏற்றுவதற்கு, துரவு வெட்டுவதற்கு, குளவேலைகள், ரோட்டு வேலைகள், அனைத்து வேலைகளையும் செய்வதற்கான வாகனங்கள் எம்மிடம் உண்டு

வைக்கோ, டோசர், J.C.B, டிப்பர் தட்டுலொறி, உழவூர்தி



SM அனைத்து உதிரிப்பாக விற்பனையாளர்

SM ஸ்ருடியோ. கொடிகாமம். SM Computer center. கண்டி ரோட் பளை

தொடர்பிற்கு: 0773707475- 0217538600



## கிறீன் பீல்ட் சனசமூக நிலையத்தின் 52ஆவது ஆண்டு விழா

### அழைப்பிதழ்

நாள்: 31.10.2010 ஞாயிற்றுக்கிழமை
நேரம்: பி.ப.6.30 மணி

**தலைமை**
A.றொபின்சன் (தலைவர்)

**பிரதம விருந்தினர்**
திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா
*(முதல்வர், யாழ்.மாநகரசபை)*

**சிறப்பு விருந்தினர்**
அருட்பணி R.H. சகாயநாயகம்
*(பங்குத் தந்தை, யாழ்.மரியன்னை பேராலயம்)*

*கௌரவ விருந்தினர்கள்: திரு.துரைராஜா இளங்கோ*
*(துணை முதல்வர், யாழ்.மாநகர சபை)*
Mr.Rajakulasekara,
*(Chief Inspectorof Police,*
*பொலிஸ் தலைமையகம், யாழ்ப்பாணம்)*
செல்வி பிரசிலா
*(கிராமசேவை அலுவலர், J/75)*

**நிகழ்ச்சிகள்**

* தலைமை உரை
* பிரதம விருந்தினர் உரை
* சிறப்பு விருந்தினர் உரை
* கௌரவ விருந்தினர் உரை
* பரிசளிப்பு
* நன்றியுரை
* பட்டிமன்றம்
* கலை நிகழ்ச்சிகள்
* இன்னிசை நிகழ்ச்சிகள்

குருசோ வீதி,
யாழ்ப்பாணம்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.


## கூட்டுறவுத் தின விழாவும் புலமைப்பரிசில் வழங்கலும்

யாழ்ப்பாணம்,ஒக்.30

வலிகாமம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணியும், அங்கத்துவ சங்கங்களும் இணைந்து நடத்தும் கூட்டுறவுத்தின விழாவும், புலமைப்பரிசில் வழங்குதல் நிகழ்வும் நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு மானிப்பாய் கொத்தணி கலையரங்க மண்டபத்தில் நடைபெறும்.

மானிப்பாய் கொத்தணித் தலைவர் க.மெய்யழகன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த விழாவுக்குப் பனை அபிவிருத்திச் சபைத் தலைவர் பசுபதி சீவரத்தினம் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்.

கௌரவ விருந்தினர்களாக யாழ்.மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வீ.கே.அருந்தவநாதன், யாழ்.மாவட்டக் கூட்டுறவுச் சபைத் தலைவர் இ.இராஜாராம், பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்க சமாசத் தலைவர் த.சிவலிங்கம் ஆகியோர் கலந்துகொள்வர். (ற)


## காணி விற்பனைக்கு

சாவகச்சேரி நகரசபைக்குட்பட்ட பெருங்குளம் சந்தியில், கிணற்றுடன் அத்திபாரமிடப்பட்ட 4 பரப்பு பிரயோசனங்களுடனான காணி விற்பனைக்குண்டு.

தொடர்பு: திரு.செல்வராஜா,
0776658786,
0779521943.


## அழகியல் கல்வி ஆசிரியர்களுக்கு நேர்முகப் பரீட்சை நடத்த ஏற்பாடு

அழகியற் கல்விக்கு அசிரியர் நியமனம் பற்றிய நேர்முகப் பரீட்சை அடுத்த மாதம் 15ஆம் திகதிக்கு முன்னர் நடைபெறும் என கல்வியமைச்சு அறிவித்துள்ளது.

இதற்கு முன் பலமுறை இப்பரீட்சை நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டிருந்தபோதும் தவிர்க்க முடியாத காரணங்களால் இது பிற்போடப்பட்டுள்ளதாகவும் இந்த தாமதத்தால் எவ்வித அரசியல் பழிவாங்கலோ அல்லது முரண்பாடுகளோ ஏற்படவில்லை எனவும் கல்வியமைச்சு திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளது.

குறிப்பிட்ட தினத்தில் இந்த நியமனம் சம்பந்தமான நேர்முகப் பரீட்சை நிச்சயமாக நடக்கும் என கல்வி அமைச்சு உறுதியளித்துள்ளது. (10)

## கஞ்சா கடத்தல் நீதிமன்ற ஊழியர் இருவர் கைது

அனுராதபுரம், ஒக்.30

நீதிமன்றில் சமர்ப்பிக்கப்பட்டிருந்த கஞ்சா பார்சல் ஒன்றைக் கடத்தினர் என்ற குற்றச்சாட்டில் அனுராதபுரம் நீதிமன்ற ஊழியர்கள் இருவர் கடந்த செவ்வாய்க்கிழமை மாலை ஹபரண பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

கடந்த 21ஆம் திகதி அனுராதபுர நீதிமன்றின் உத்தியோகபூர்வ இலட்சினை பொறிக்கப்பட்டிருந்த பொதியொன்றுடன் மோட்டார் சைக்கிளில் சென்ற நபரொருவர் ஹபரணை, பலுகஸ்வெவ பகுதியில் கைது செய்யப்பட்டார். அவரிடம் விசாரணை மேற்கொண்ட பொலிஸார் பின்னர் அவரை கெக்கிராவ நீதிமன்றத்தின் முன்னிலைப் படுத்தினர்.

கெக்கிராவ நீதிவான் ஸ்ரீநித்விஜேசேகரவின் உத்தரவின் பேரில் மற்றுமொரு சந்தேக நபரும் கைதானார். சந்தேக நபர்களில் ஒருவர் அனுராதபுரம் நீதிமன்றில் எழுதுவினைஞராகவும் மற்றவர் உதவியாளராகவும் பணிபுரிந்தவர்கள் எனவும் அவர்கள் இருவரும் கண்டி மற்றும் அனுராதபுரம் வாசிகள் எனவும் பொலிஸார் கூறினர். ( உ-5)


## ஜயோதா



### உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இலக்கம் 694 திகதி 28-10-2010

வெற்றி எண்கள்

01 23 31 48 F

ஜக்பொட் பரிசு ரூ. 10,545,820/- வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 4 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | - | 10,545,820/= | - |
| 4 இலக்கங்கள் பொருந்தினால் | 01 | 400,000/= | 400,000/= |
| 3 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 19 | 2,000/= | 38,000/= |
| 3 இலக்கங்கள் பொருந்தினால் | 393 | 1,000/= | 393,000/= |
| 2 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 665 | 1,000/= | 665,000/= |
| 2 இலக்கங்கள் பொருந்தினால் | 16093 | 60/= | 965,580/= |
| 1 இலக்கத்துடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 7488 | 40/= | 299,520/= |
| 1 இலக்கம் பொருந்தினால் | 189521 | 20/= | 3,790,420/= |
| | | மொத்தம் ரூ. | 6,551,520/- |
| வெல்லப்படாத டிக்கட்டுகளுக்காக கொடுக்கப்பட்ட பணப்பரிசுகளின் பெறுமதி | 08 | 50,000/= | 400,000/= |

ரூபா 50,000 வீதம் பணப்பரிசுகள் வெற்றிபெற்ற 8 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்.

| | |
|---|---|
| கம்பஹா | 700497865-8-38 |
| திருகோணமலை | 700487253-8-18 |
| கண்டி | 700490510-7-47 |
| களுத்துறை | 700494459-5-35 |
| கேகாலை | 700486602-3-13 |
| அம்பாந்தோட்டை | 700482160-7-17 |
| இரத்தினபுரி | 700491656-3-03 |
| மட்டக்களப்பு | 700490817-4-24 |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை 6,951,520/=

எதிர்வரும் திங்கட்கிழமை சுப்பர் ஜக்பொட்

ரூ. 11,058,040/=

மஞ்சள் நிற டிக்கட்டுகள் 2010 நவம்பர் 01 ஆம் திகதி திங்கட்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அபிவிருத்தி லொத்தர் சபை
356, கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு - 02
தொ.பே: 2333546/7

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்



## 30 வருட சேவையில்...

தீபாவளியை முன்னிட்டு
SINGER நிறுவனத்தின்
உத்தரவு பெற்ற விற்பனையாளரான
ஊஷா ஏஜென்சியில்
சிங்கர் SISIL
குளிர்சாதனப் பெட்டிகளை
நம்பமுடியாத அதிரடி
விலைக்கழிவுடன்
உங்கள் வீடு வரை
இலவச விநியோக சேவை





**உடன் விரையுங்கள்!**

குறிப்பு-இச் சலுகை கையிருப்பு உள்ளவரை மட்டுமே

## ஊஷா ஏஜென்சி

62 /32 ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

☎ 021 - 222 6982


## அந்தியேட்டி வீட்டுக் கிருத்திய அழைப்பு

தோற்றம்:
15.09.1950



திருமதி ஜெகஜோதி பாக்கியநாதன்

மறைவு:
01.10.2010

கடந்த 01.10.2010 அன்று இறைவனடி சேர்ந்த எங்கள் குடும்பத் தலைவி திருமதி ஜெகஜோதி பாக்கியநாதன் அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (31.10.2010) ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணிக்கு காரைநகர் ஆலங்கேணியடி மண்டபத்திலும் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் முற்பகல் 11 மணியளவில் அன்னாரது இல்லத்திலும் நடைபெறவுள்ளன.

அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

மடத்துப் பிள்ளையார் கோயிலடி,
[illegible] வடக்கு,
[illegible]புரம்.

(105328)

குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முல்லைத்தீவில் உயர் பாதுகாப்பு வலயம் எதுவும் இல்லை என்கிறார் அரச அதிபர்

முல்லைத்தீவு,ஒக்.30

முல்லைத்தீவு மாவட்டத்தில் ஆறு கிராமங்கள் உயர்பாதுகாப்பு வலயமாகப் பிரகடனப் படுத்தப்பட்டன என்கிற செய்தியில் எவ்வித உண்மையும் கிடையாது என்று முல்லைத்தீவு அரச அதிபர் என். வேதநாயகம் உதயனுக்குத் தெரிவித்தார்.

அவ்வாறு எந்தவிதமான அறிவித்தல்களும் தனக்கு இதுவரை கிடைக்கவில்லை என்றும் அவர் உறுதிபடத் தெரிவித்தார்.

முல்லைத்தீவு மாவட்டம் புதுக்குடியிருப்புப் பிரதேசத்தில் உள்ள மல்லிகைத்தீவு, ஆனந்தபுரம், சிவநகர், புதுக்குடியிருப்பு மேற்கு,கிழக்கு,மந்துவில் ஆகிய கிராமங்கள் உயர் பாதுகாப்பு வலயமாக அரசால் அறிவிக்கப்பட்டுள்ளன எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன. இது குறித்து முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபருடன் நேற்றுத் தொடர்பு கொண்டு கேட்ட போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

முல்லைத்தீவு மாவட்டத்தில் மேற்குறிப்பிட்ட பகுதிகளில் விரைவில் மீள்குடியேற்றம் செய்வதற்கான ஏற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன.

அப்பகுதியில் வெடிபொருள்களை அகற்றும் பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன. இந்நிலையில் அந்தக் கிராமங்கள் உயர் பாதுகாப்பு வலயமாக அரசினால் அறிவிக்கப்பட்டுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்தத் தகவலில் எந்த விதத்திலும் உண்மையில்லை. இது தொடர்பான அறிவித்தல் எதுவும் இதுவரை எனக்குக் கிடைக்கவில்லை - என்றார்.

கண்ணிவெடி அகற்றும் பணிகள் பூர்த்தியாகியதும் அந்த இடங்களில் மீள்குடியேற்றம் இடம்பெறும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (உ-9-14)




## பொதுக் கிணறுகள் புனரமைப்பு

வட்டக்கச்சி,ஒக்.30

சர்வோதயம் நிறுவனம் கல்மடு நகரில் உள்ள பொதுக்கிணறுகளை ஆழப்படுத்தி அவற்றைப் புனரமைக்கும் பணிகளை ஆரம்பித்துள்ளது.

மக்கள் மீள்குடியேறிய இந்தப் பிரதேசத்திலுள்ள பொதுக்கிணறுகளும், வீட்டுக் கிணறுகளும் நீரின்றிக் காணப்படுகின்றன. இதனால் இப்பகுதி மக்கள் தமது நீர்த்தேவைக்காக அலைந்து திரிகின்றனர். ஆகவே முதற்கட்டமாக அனைத்துப் பொதுக் கிணறுகளையும் விரைவில் புனரமைப்புச் செய்து வழங்குவதாக இந்த நிறுவனத்தினர் உறுதி வழங்கியதுடன், நடவடிக்கைகளிலும் ஈடுபட்டுள்ளனர். (க-450)

## ஒட்டுசுட்டான் காட்டுப் பிரதேசத்தில் பொலிஸாரால் குண்டுகள் மீட்பு

முல்லைத்தீவு,ஒக்.30

முல்லைத்தீவு - ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் மறைத்து வைக்கப்பட்டிருந்த பெங்களூர் ரோப்பிட்டோ குண்டுகள், அருள் குண்டுகள் உட்பட பல தரப்பட்ட வர்க்கங்களைச் சேர்ந்த குண்டுகளும் உயர்வலுக் கொண்ட தகவல் பரிமாற்றுச் சாதனங்களும் யாழ்.குற்ற விசாரணைப் பிரிவுப் பொலிஸ் குழுவினரால் கடந்த 25 ஆம் திகதி கண்டெடுக்கப்பட்டுள்ளன.

சுமார் 8 அடி நீளமும் 2½ அடி சுற்றளவும் 8 கிலோ வரையில் நிறையுடைய 9 பெங்களூர் ரோப்பிட்டோ குண்டுகளும், அருள் குண்டுகள் 6 உம், 81 மி.மீற்றர் குண்டுகள் 6 உம், கிளைமோர் குண்டொன்றும் அதிகவலுக் கொண்ட தகவல் பரிமாற்றுச் சாதனமொன்றும், புலிகளால் தயாரிக்கப்பட்ட குண்டொன்றும் இவ்விதம் கண்டெடுக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸ் அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

காட்டினுள் மிக நுட்பமாக மறைத்து வைக்கப்பட்டிருந்த இவற்றை அப்பிரதேசத்தில் மீளக் குடியமர்ந்துள்ள பொது மக்களால் வழங்கப்பட்ட தகவலொன்றின் மூலமே கைப்பற்ற முடிந்ததாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (த-22)

## வன்னியில் அதிக எண்ணிக்கையில் பனைகள் தறிப்பு தடுத்து நிறுத்துமாறு பலரிடமும் கோரிக்கை

கிளிநொச்சி,ஒக்.30

வன்னி நிலப்பரப்பில் அதிக எண்ணிக்கையான பனை மரங்கள் தறிக்கப்பட்டு வருவதாக அப்பகுதியில் உள்ள சூழலியலாளர்கள் கவலை தெரிவிக்கின்றார்கள்.

வன்னிப் பிரதேசங்களில் மீள்குடியேற்றம் நடைபெறும் நிலையில் கூரைகளுக்கு வேண்டிய மரத்தேவைகளுக்கென வீட்டு உரிமையாளர்கள் பனை மரங்களைத் தறிக்கின்றனர். மறுபுறத்தே மரக்காலைகள் நடத்துபவர்களும் பெரும் எண்ணிக்கையில் பனைகளைத் தறித்து வீழ்த்தும் நிலைமையும் காணப்படுகின்றது.

பனை அபிவிருத்திச் சபையினர் பனை மரங்கள் தறிப்பதை யாழ்.குடாநாட்டில் கட்டுப்படுத்தி உள்ளதுடன் வடக்குக் கிழக்கில் பல இலட்சக் கணக்கான பனம் விதைகளை நடும் திட்டத்தை முன்னெடுத்துள்ள நிலையில் பயன்தரும் பனை மரங்கள் தறிக்கப்படுகின்றமை பனை வளத்திற்குப் பாரிய பாதிப்பை ஏற்படுத்தக் கூடியது.

இதனையிட்டு பனை அபிவிருத்திச் சபையும் பிரதேச செயலாளர்கள், உதவி அரசாங்க அதிபர்கள் கூடிய கவனம் எடுத்துப் பனைகள் தறிக்கப்படுவதைக் கட்டுப்படுத்த முன் வரவேண்டும் என பனைத் தொழில் முயற்சிகளில் ஈடுபட்டுள்ளவர்கள் கவலையுடன் தெரிவிக்கின்றார்கள். (க-86)



கிளிநொச்சி, உருத்திரபுரம் றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை மாணவர்களுக்கு பருத்தித்துறை ஸ்ரீ இராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமத்தினால் பால் வழங்கப்பட்டது. மாணவர்கள் பால் அருந்துவதையும் அருகில் சுவாமி சித்ரூபானந்தா நிற்பதையும் படத்தில் காணலாம்.
(படம்: கர்ணன்)

## பளை வைத்தியசாலையில் இடவசதியின்மையால் நோயாளர்களும் ஊழியர்களும் அவல நிலையில்

பளை, ஒக். 30

தனியார் வீடொன்றில் இயங்கும் பளை அரசினர் பொது வைத்தியசாலையில் போதிய இடவசதி இன்மையால் நோயாளர்களும் வைத்தியசாலை ஊழியர்களும் சிரமங்களை எதிர்கொண்டு வருகிறார்கள்.

போரின் போது கட்டடங்களும், கூரைகளும் அழிவடைந்த நிலையில் தற்போது தனியார் வீடொன்றில் இந்த வைத்தியசாலை இயங்கி வருகின்றது.

முன்பு வாரத்தில் மூன்று நாள்கள் நண்பகல் 12 மணிக்குப் பின்னர் இந்த வைத்தியசாலையில் சிகிச்சை வழங்கப்பட்டு வந்தது. தற்போது தினமும் சிகிச்சை வழங் கப்படுகின்றது. இதனால் அதிகளவு நோயாளர்கள் வந்து சிகிச்சை பெற்றுச் செல்கிறார்கள். ஆனால் மழைக் காலம் ஆரம்பிக்கும் போது இடவசதி போதாத காரணத்தால் சிரமங்கள் ஏற்படுவதற்கு வாய்ப்புக்கள் உண்டு.

அழிவடைந்த இந்த வைத்தியசாலையின் திருத்தப்பணிகளுக்கு அரசாங்கத்தால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்ட போதும் இதற்குத் தேவையான இடவசதி இல்லாத காரணத்தால் வேலைகள் தாமதமடைவதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. (க-311-313)

## வான் பொய்த்து விட்டதால் வன்னியில் நெற்பயிர்களின் நிலை கேள்விக்குறியில்

ஒட்டுசுட்டான்,ஒக்.30

வான்பொய்த்து விட்டதால் வன்னிப் பகுதியில் நெற்பயிர்கள் முளைத்த நிலையிலும், முளைக்காத நிலையிலும் கேள்விக்குறியில் உள்ளன.

மீள்குடியேறிய வன்னிப்பகுதி மக்கள் இம்முறை அதிகளவு நிலப்பரப்பில் நெற்பயிர்ச் செய்கையில் ஈடுபட்டுள்ளனர். ஆனால் பருவமழை பொய்த்து விட்டதால் விதைக்கப்பட்ட நெற்பயிர்கள் முளைத்த நிலையிலும் முளைக்காத நிலையிலும், காணப்படுவதால் விவசாயிகள் கவலையில் ஆழ்ந்துள்ளனர்.

அத்துடன் மழை இல்லாத காரணத்தால் கிணறுகளின் நீர் மட்டமும் குறைந்து வருகிறது. இதனால் கிணறுகளிலிருந்து வயல்களுக்கு நீர்பாய்ச்ச முடியாத நிலையும் ஏற்பட்டுள்ளது.

கொடிய யுத்தத்திற்கு முகம் கொடுத்து எல்லாவற்றையும் இழந்து நிர்க்கதியான நிலையிலுள்ள இந்த மக்கள், தமது வாழ்க்கையை ஓரளவாவது சீர்செய்ய முடியுமென்ற நம்பிக்கையுடன் நெற்செய்கையில் ஈடுபட்டனர். ஆனால் மழை பொய்த்து விட்டதால் தமது நம்பிக்கையும் பொய்த்து விடுமோவென இவர்கள் அச்சத்துடன் காணப்படுகின்றனர். (க-341)

## கச்சார்வெளி, அல்லிப்பளை,அரசர்கேணி மக்கள் இரண்டு வாரங்களுக்குள் மீள குடியேறுவர்

### அமைச்சர் டக்ளஸ் கூறுகிறார்

பளை, ஒக். 30

கச்சார்வெளி, அல்லிப்பளை, அரசர்கேணி ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த மக்கள் இன்னும் இரண்டு வாரங்களுக்குள் மீள்குடியேற்றம் செய்யப்படவுள்ளதாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

கடந்த சனிக்கிழமை பச்சிலைப்பள்ளி மேற்கு ஒன்றியமும் வடமாகாண தெங்குச் செய்கையாளர்களும் இணைந்து பளை கிறிஸ்தவ தேவாலயத்தில் நடத்திய கலந்துரையாடலில் கலந்து கொண்ட போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

கச்சார்வெளி, அல்லிப்பளை, அரசர்கேணி ஆகிய பிரதேசங்களில் மிதிவெடிகள் அகற்றும் பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன. இப்பணிகள் முடிவுற்றதும் இப்பகுதிகளைச் சேர்ந்த குடும்பங்கள் தமது சொந்தக் காணிகளில் குடிமனைகளை அமைப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். இக்கலந்துரையாடலில் நாடாளுமன்ற உறுப்பினர் சில்வெஸ்திரி அலன்ரீன், பச்சிலைப் பள்ளி பிரதேச செயலர் ரி.முகுந்தன், பிரதேச சபைத் செயலாளர் சி.சிவப்பிரகாசம், சங்கத்தலைவர் மோகனதாஸ், ஒன்றியத் தலைவர் செ.மார்க்கண்டு ஆகியோர் கலந்து கொண்டார்கள். (க-313-311)

## சாளம்பன் குளத்தின் வேலைகள் முடிவடைவதால் சின்னச்சாளம்பன் கிராம மக்கள் மகிழ்ச்சியில்

ஒட்டுசுட்டான்,ஒக்.30

ஒட்டுசுட்டான் பிரதேசத்திலுள்ள சாளம்பன் குளத்தின் புனரமைப்பு வேலைகள் முடியும் தறுவாயில் உள்ளதால் இக்குளத்தைச் சூழவுள்ள பகுதிகளில் வாழும் மக்கள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

மிகநீண்ட காலமாகவே ஒட்டுசுட்டான் பகுதியிலுள்ள சின்னச் சாளம்பன் கிராமத்திலுள்ள சாளம்பன் குளம் புனரமைப்புச் செய்யப்படாமல் முறிகுளமாக இருந்து வந்துள்ளது. இதனால் இந்தப் பகுதியிலுள்ள மக்கள் இந்தக் குளத்தை நம்பி விவசாயத்தில் ஈடுபட முடியாத நிலையில் இருந்தனர். இப்பகுதியில் தோட்டத் தொழிலை நம்பிச் சீவிப்பவர்களே அதிகளவில் வாழ்வதால் இவர்கள் பல்வேறு சிரமங்களையும் அனுபவித்து வந்தனர். தற்போது இந்தக் குளமானது புனரமைப்புச் செய்யப்படுவதால் இவர்கள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

இக்குளத்தைப்பற்றி அப்பகுதியின் கிராமத் தலைவரான பால ஜெயந்தி தெரிவிக்கும்போது-

எமது சின்னச் சாளம்பன் கிராமத்தில் வாழும் மக்கள் மிகவும் வறியவர்கள். நாம் இங்கு வந்து குடியேறிய காலம் தொடக்கம் கூலி வேலையைத் தான் செய்து வருகின்றோம். எமக்கு நீர்ப் பாய்ச்சல் காணி இல்லை. முத்துஐயன்கட்டு குளத்து நீரை நாம் பயன்படுத்த முடியாது.

ஆனால் குளத்திற்கான பங்களிப்பை நாம் செய்தபோதும் எமக்கு ஒரு துண்டு காணி கூடத் தரவில்லை. நாம் பலமுறை அரச அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டும் பயன் ஏதும் இல்லை. இந்த நிலையில் இந்தக் குளத்தையாவது புனரமைத்து வழங்குமாறு பல வருடங்களாகக் கேட்டு வந்துள்ளோம். ஆனால் தற்போது தான் அதன் வேலைகள் முடிவுற்றுள்ளன. இதனால் எமது கிராம மக்கள் அதிக பயனடைவார்கள். எமது கிராமமும் எழுச்சி பெறும். சுருக்கமாகக் கூறுவதானால் 'நீர் உயர நெல் உயரும், நெல் உயரக் குடி உயரும், குடி உயரக் கோன் உயரும்' என்ற வாக்குக்கு அமைய நாம் முன்னேற்றம் அடைவது உறுதி என்று கூறினார். (க-341)

## பச்சிலைப் பள்ளியில் மீள்குடியேறிய பகுதிகளில் மீதி 25 குடும்பங்களே மீள்குடியேற வேண்டும்

பளை, ஒக். 30

பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் பிரிவில் மீள்குடியேற்றம் செய்யப்பட்ட பகுதிகளில் இன்னமும் 25 குடும்பங்களே மீள்குடியேற்ற வேண்டிய நிலையில் உள்ளன.

தற்போது பச்சிலைப்பள்ளிப் பிரதேச செயலர் பிரிவில் மக்களின் மீள்குடியேற்றம் துரிதமாக நடைபெற்று வருகின்றது. இதுவரை இப்பிரதேசத்தில் மீள்குடியேற்றம் செய்யப்பட்ட பகுதிகளில் 25 குடுபங்களைச் சேர்ந்த 72 பேர் மீள்குடியேற்ற வேண்டிய நிலையிலுள்ளதாகப் பிரதேச செயலர் ரி.முகுந்தன் தெரிவித்தார்.

இவர்கள் தற்போது நலன்புரி முகாமொன்றில் தங்கியுள்ளார்கள். இவர்களை இன்னும் இரு வாரங்களில் நலன்புரி முகாமிலிருந்து அழைத்து வந்து அவர்களது சொந்தக் காணிகளில் மீள்குடியேற்றம் செய்வதற்கு வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார். (க-311-313)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இறைச்சிக் கோழி விற்பனை

புறொயிலர், கல்பேட் தினமும் சுத்தம்செய்து காலை 6 மணி தொடக்கம் இரவு 8 மணிவரை குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம்.
நல்லூர் பாம் சென்ரர், 19.முருகேசர் லேன், நல்லூர்.

## தவறிவிட்டது

சபாபதிப்பிள்ளை வீதி, சுன்னாகம் தெற்கு, சுன்னாகம் எனும் முகவரியுடைய வேலுப்பிள்ளை ரேகா என்பவரின் தேசிய அ.அ (898582728V) தெல்லிப்பழை-யாழ்ப்பாணம் பேருந்தில் பயணிக்கும்போது தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் பின்வரும் தொ.பே.இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.
தொ.பே:-0214910982

## வாகனம் விற்பனைக்கு

CPL.C XXXX மிற்சுபிஸி (வடி) லொறி (பெற்றோல்) விற்பனைக்குண்டு.
1லீற்றர் பெற்றோலுக்கு 20 Km தூரம் வேலை செய்யும்.
தொடர்பு: 0718473886, 0714394559.

## மணமகள் தேவை

கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, வெளிநாட்டில் PR உள்ளவரும், 5' 10'' உயரமுள்ள மணமகனுக்கு 35 வயதுக்குட்பட்ட மணமகளைப் பெற்றோர் தேடுகின்றனர். தொடர்புகளுக்கு:- 0773640927
goldentime 2011@yahoo.ca

## வீடு விற்பனை

கொழும்புத்துறை றோட்டில் கணக்கர் சந்திக்கு அண்மையாக விபுலானந்தர் வீதியில் வாகனத் தரிப்பிட வசதி மற்றும் சகல வசதிகளுடன் கூடிய 4 பரப்புக் காணியில் அமைந்த மாடி வீடு விற்பனைக்குண்டு.
தொடர்பு: 0776146434

## உடனடியாக வீடு வாடகைக்குத் தேவை

இரண்டு அறைகளுடன் சகல வசதிகளும் கொண்ட யாழ்.மாநகர சபை எல்லைக்குள் வீடொன்று வாடகைக்குத் தேவை.
தொடர்புகொள்ள வேண்டிய தொ.பே.இல: 0778284837

## மணமகன் தேவை

பிரான்ஸில் பிறந்து அங்கு நல்ல வேலையில் இருக்கும் 27 வயதுடைய பெண்ணுக்கு பிரான்ஸில் வதிவு உரிமை (PR) உள்ள மணமகன் தேவை.
தொடர்பு:- 0771600507

## கடைக் கட்டடமும் அதற்குரிய நிலமும் விற்பனைக்கு உண்டு

ஆடியபாதம் வீதியில் பல்கலைக்கழகத்துக்கு அருகில் 18 அடி நீளமும் 12 அடி அகலமும் மேல் தளம் பிளாற்றும் கொண்ட கடை விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: 0771737144
(நேரம் காலை 8 மணி முதல் இரவு 8மணி வரை) (105124)

## நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு

நல்ல இன Boxer நாய்க்குட்டிகள் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு:- 0212230024, 0776622313

## வேலை ஆள்கள் தேவை

பிரதான வீதி, நெல்லியடியில் இயங்க இருக்கும் தனியார் பார்மஸி நிறுவனத்திற்கு அனுபவமுள்ள பார்மஸிஸ்ற் (அனுமதிப்பத்திரம் உள்ளவர்) தேவை. உடன் தொடர்பு கொள்ளவும். (ஆண், பெண் இருபாலாரும்)
தொ.பே.இல:- 021 226 4582
0778435999

## மணமகள் தேவை

அமெரிக்காவில் வசிக்கும் 35 வயதுடைய R.C. அழகான ஆணுக்கு அதே நாட்டில் அல்லது கனடாவில் வசிக்கும் பெண் தேவை. R.C., இந்து மணமக்களும் தேவை.
தொடர்பு: மேரி திருமண சேவை,
46,புதுவீதி, கொய்யாத் தோட்டம், யாழ்ப்பாணம். தொ.பே.: 0779116346. (105315)

# நெஞ்சை விட்டகலாத ஓராண்டு நினைவலைகள்



அமரர்
**கந்தையா அன்னம்மா**
மலர்வு: 09.07.1932
உதிர்வு: 09.11.2009
திதி: 30.10.2010

ஆண்டு ஒன்று ஓடி மறைந்து விட்டதுவே அம்மா!
உங்கள் புன்சிரிப்பும் அன்பான பேச்சும்
தொலைந்து விட்டதுவே அம்மா
ஆயிரம் பேர் எமக்கு ஆறுதல் சொன்னாலும்
உங்கள் வார்த்தைக்கு ஈடாகுமா அம்மா!
உதிரத்தால் எழுதினாலும் உங்கள் பாசத்திற்கு
உயிர் கொடுக்க முடியாது அம்மா!
தியாகக் கனத்த இதயத்தின் வலியோடு
வாடிவதங்குகின்றோம் அம்மா!
ஓராண்டு என்னம்மா ஓராயிரம் ஆண்டானாலும்
ஆறாத்துயர் அடங்கிடுமோ அம்மா!
மீளாத்துயில் கொண்ட எங்கள் அன்புள்ளத்தின்
ஆத்மா சாந்தி அடைய இறைவனை வேண்டி நிற்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

என்றும் உங்கள் நினைவுடன்:
**குடும்பத்தினர்.**

யுவசக்தி லேன்,
சுதுமலை தெற்கு, மானிப்பாய். (105248)

# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

நயினாதீவு, 4ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட

**பாலசுப்பிரமணியம் சாரதாமணி (மணி)**

தோற்றம்: 09.11.1946 திதி:-30.10.2010 மறைவு: 22.10.2008



அன்புத் தெய்வமே! அம்மா
எங்கள் நல்வாழ்வுக்காய்
உமையுருக்கி ஒளிதந்தீர் அம்மா
எங்கள் உயர்வுக்கு
உம் சிந்தனையை
உரமாக்கி விருட்சமாகி
நின்றீர் அம்மா
வறுமையிலும் செம்மை
வழி நின்று
பெருமையுடன் எமை
வளர்த்தீர் அம்மா
இரண்டு ஆண்டுகள்
ஓடி மறைந்தாலும்
நாம் உனை மறவோம்.
உங்கள் ஆத்ம சாந்திக்கு
நயினை நாகபூஷணி
அம்பாளை வேண்டி நிற்கின்றோம்.

(105240)

நாதன் கடை,
1ஆம் வட்டாரம்,
நயினாதீவு.

**குடும்பத்தினர்.**


தலைநகரில் கடந்த மூன்று ஆண்டுகாளாக வெற்றிகரமாக பல்லாயிரக்கணக்கான மாணவர்ளை உயர்கல்விக்காக வெளிநாட்டிற்கு அனுப்பும் நம்பிக்கையான நிறுவனத்தில் நீங்கள் இணைந்து 100% உத்தரவாதத்துடன் VISAவை பெற்றுக் கொள்ள நாம் உதவக் காத்திருக்கின்றோம்.



Study in the
**UNITED KINGDOM**
இறுதிச் சந்தர்ப்பம்
IELTS தேவையில்லை

**JAN/FEB INTAKES IN PROGRESS**

**2010 AUGUST 12**ல் அறிமுகப்படுத்தப்பட்ட புதிய நடைமுறையின் கீழ் பின்வரும் கற்கை நெறிகளுக்கு **IELTS** தேவையில்லை.

**Foundation Degree Programme - No IELTS**
**Basic Requirements**
O/L, A/L (atleast 1 Pass), Working Experience Dip in English in Sri Lanka

**Business / General English Course - No IELTS**
**Basic Requirements**
O/L, A/L (atleast 1 Pass), Working Experience Dip in English in Sri Lanka

**Postgraduate / MBA / MSC - No IELTS**
**Basic Requirements** O/L, A/L Degree, Working Experience

உங்களுக்கான அனுமதிகள், ஆவணங்களை தயார்படுத்தல் என்பன எங்களால் நேர்த்தியான முறையில் செய்து தரப்படும்

சகல நாடுகளுக்குமான அனைத்து வித Documentation மற்றும் விசாக்களும் 100% உத்தரவாதத்துடன் அனுபவம் வாய்ந்த சட்டத்தரணிகளால் பெற்றுத்தரப்படும்.

Eisc **EXPRESS**
INTERNATIONAL STUDIES & CONSULTANTS
30-1/14, W.A. De Silva Mawatha Colombo 6. (Above Hotel Saravana Bavan)
Tel: 2500207 E-mail: eisc_2007@yahoo.com
Robin 0777 222 422 Selva - 0714 - 299 935, Web : www.expresslanka.com
FLEX Graphic


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறுதிக் கட்ட யுத்தத்தின்போது நோர்வே இலங்கைக்கு ஆயுதங்களை வழங்கியது

## சர்வதேச மனிதாபிமான அமைப்பு சந்தேகம்

கொழும்பு, ஒக். 30

இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக் குமிடையிலான இறுதி யுத்தத்தின்போது நோர்வே, இலங்கைக்கு இரகசியமாக ஆயுதங்களை விற் பனை செய்துள்ளது என்று, நோர்வேயைத் தள மாகக் கொண்டு இயங்கும் சர்வதேச மனிதாபிமான அமைப்புக்களில் ஒன்றான 'நோர்வேஜின் சேர்ச் எய்ட்' வெளியிட்ட அறிக்கையில் சந்தேகம் வெளி யிடப்பட்டுள்ளது.

நோர்வே, அமெரிக்காவுக்கு ஏராளமான ஆயு தங்களை விநியோகித்துள்ளது என்றும், நோர்வே யின் ஆயுதங்களின் உதவியுடன் ஈராக்குடனான அமெரிக்காவின் யுத்தத்தில் குறைந்தது 200 ஈராக்கியர்கள் கொல்லப்பட்டிருக்கின்றார்கள் என்றும், இம்மனிதாபிமான அமைப்பின் செயலா ளர் மேற்படி அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளார்.

அமெரிக்க இராணுவத்தினர்தான் நோர்வேயின் அதிகளவிலான வாடிக்கையாளர் என்று தெரிவித் துள்ள அவர், இலங்கை, சூடான், கொங்கோ ஆகிய நாடுகளுக்கும் நோர்வே ஆயுதங்களை விற்பனை செய்துள்ளது என்றும் அவர் சந்தேகம் வெளியிட் டுள்ளார்.

நோர்வே ஆயுத விற்பனை மூலமாகத்தான் உலக நாடுகள் பலவற்றிலிருந்து பெரும்தொகைப் பணத்தை சம்பாதிக்கின்றது என்றும் அவர் அவ் வறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளார். (சி)



இலங்கை வங்கியின் சுன்னாகம் மேற்தரக் கிளையின் சிறுவர் சேமிப்புக் கணக்கின் வெற்றியாளர்களுக்கான பரிசில் வழங்கும் நிகழ்வு அண்மையில் நடைபெற்ற போது எடுக்கப்பட்ட படம். இந்த நிகழ்வில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட செஞ் சொற் செல்வர் ஆறு. திருமுருகன் உரையாற்றுவதையும், கிளை முகாமையாளர் எஸ்.ரி.அரசகுமார், இலங்கை வங்கி வடபிராந்திய செயற்பாட்டு முகாமையாளர் வி.எஸ். சிவநாதன் ஆகியோர் அருகில் அமர்ந்திருப்பதையும் படத்தில் காலாம். (204)

### முக்கிய மூன்று விடயங்களை முன்னிறுத்தி

# ஹொரணையில் 'கிராம சாரிகா' திட்டத்தை ஆரம்பிக்கின்றது ஐக்கிய தேசியக் கட்சி

கொழும்பு, ஒக். 30

கட்சியை வெற்றிபெறச் செய் தல், சரத் பொன்சேகாவை விடு தலை செய்தல், ஜனநாயகம் மற் றும் நீதியை நாட்டில் நிலைநாட் டுதல் போன்ற விடயங்களை அடிப்படையாக வைத்து ஐக்கிய தேசியக் கட்சி இன்று சனிக்கிழ மையும், நாளை ஞாயிற்றுக்கிழ மையும் அதன் 'கிராம சாரிகா' வேலைத்திட்டத்தை ஹொரனை யில் ஆரம்பித்து வைக்கின்றது.

எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்று முன் தினம் இடம்பெற்ற ஊடகவிய லாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய ஐ.தே.கட்சியின் பிரதித் தலைவர் கருஜயசூரிய இது தொடர்பாக கூறியவை வருமாறு:-

கிராமத்தில் இருந்துதான் எமக்கு சக்தி கிடைத்தது. 'கிராம சாரிகா' வேலைத்திட்டத்தைத் தொடங்கு மாறு எமக்கு ஆலோசனை வழங் கியவர்கள் கிராம மக்கள்தான். அதன் அடிப்படையில்தான் நாம் இந்த வேலைத்திட்டத்தைத் தொடங்கியுள்ளோம்.

களுத்துறை மாவட்டம், ஹொரனை தேர்தல் தொகுதி யில் நாம் இந்த வேலைத்திட் டத்தை இன்று சனிக்கிழமை ஆரம்பித்து வைக்கின்றோம். சனிக்கிழமையும், நாளை ஞாயிற் றுக்கிழமையும் அங்கு பல நிகழ் வுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

எமது கட்சியை வெற்றிபெறும் கட்சியாக மாற்றுவதே இந்த வேலைத்திட்டத்தின் நோக்கம். அத்தோடு இந்த நாட்டின் சுதந் திரற்காகப் பாடுபட்ட சரத் பொன் சேகாவை விடுதலை செய்வதற் காகப் போராடவேண்டிய கடமை எமக்குண்டு. அவர் தொடர்பாக நாம் மிகவும் கவலையுடன் பேசி வருகின்றோம்.

பொன்சேகா தேசத் துரோகி அல்லர். அவர் இந்த தேசத்தின் வெற்றிக்காகப் பாடுபட்டவர். அவரது விடுதலையை விரும்பும் அனைவரும் இந்த 'கிராம சாரிகா' வேலைத்திட்டத்தில் கலந்து கொள்ள வேண்டும்.

அடுத்ததாக இந்த நாட்டில் ஊடகம் பல தடைகளை எதிர் கொண்டுள்ளது. பத்திரிகை ஆசி ரியர்கள், செய்தியாளர்கள் ஆகி யோர் மிரட்டப்படுகின்றனர். ஊட கச் சுதந்திரத்தை நாம் பாதுகாக்க வேண்டும். அதற்காக அனைவ ரும் இந்த வேலைத்திட்டத்தில் கலந்துகொள்ளவேண்டும்.

வாழ்க்கைச் செலவினை அதி கரிப்பதால் மக்கள் துன்பப்படுகின் றனர். அந்தத் துன்பத்துக்கு முற்றுப் புள்ளி வைப்பதும், கிராம சரிகா வேலைத்திட்ட நோக்கத்தில் ஒன்று.

அதேபோல் இந்த நாட்டில் பல்கலைக்கழக மாணவர்கள் பல பிரச்சினைகளை எதிர்நோக்கியுள் ளனர். அந்தப் பிரச்சினைகளை நாம் தீர்த்துவைக்க வேண்டும். நாட்டில் ஜனநாயகம், நீதி அறவே இல்லை. அவற்றை மீளப்பெறு வதும் 'கிராம சாரிகா' நோக்கத்தில் ஒன்றாகும். - என்றார். (சி)

### பல்கலை மாணவர் – பெற்றோரிடையே

# குழப்பத்தை விளைவிப்பதற்கு முற்படும் திஸாநாயக்கவை கைதுசெய்யவேண்டும்

## இப்படிக் கூறுகிறார் அநுரகுமார எம்.பி.

கொழும்பு, ஒக். 30

உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்கவை கைது செய்ய வேண்டும் என மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினரான அநுரகுமார திஸா நாயக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப் பொன்றில்கலந்துக்கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் கூறியவை வருமாறு:-

ஜனாதிபதித் தேர்தலின் போது மக்களிடத்தில் குழப்பத்தை ஏற்படுத்தும் விதத்தில் வெள் ளைக்கொடி விவகாரத்தை வெளி யிட்டார் எனக் கூறி, சரத் பொன் சேகா கைது செய்யப்பட்டுள்ளார்.

அதேபோன்று, பல்கலைக் கழக மாணவர்களுக்கும் அவர் களுடைய பெற்றோருக்கும் இடை யில் குழப்பங்களை ஏற்படுத்தும் வகையில் உயர் கல்வி அமைச்சர் செயற்பட்டு வருகிறார். அதற்காக அவரைக் கைது செய்ய வேண்டும்.

மேலும், பல்கலைக்கழக மாணவர்களைப் பாதுகாப்பதற் கென உள்ள பொலிஸார், அவர் கள் மீது தாக்குதல்கள் நடத்தப் படும்போது வேடிக்கை பார்ப் பது கவலையளிக்கிறது. இவை எல்லாவற்றையும் பார்த்துக்கொண்டு எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்காமல் உள்ள பொலிஸ்மா அதி பர், அவருடைய சீருடையை அணி யத் தகுதியற்றவர்.'' - என்றார்.

இதேவேளை, களனியில் கடந்த புதன்கிழமை இடம்பெற்ற ஆர்பாட்டத்தின்போது, பல் கலைக்கழக மாணவர்கள் மீது, பிரதி அமைச்சர் மேர்வின் சில் வாவின் ஆதரவாளர்களே தாக்கு தல் நடத்தினர் எனவும் அனுர குமார திஸாநாயக்க தெரிவித்தார்.

### மாகாண ஆங்கில தினப் போட்டி மன்னாரில் திங்கள், செவ்வாய்

மாகாணமட்ட ஆங்கில தினப் போட்டிகள் எதிர்வரும் திங்கள், செவ்வாய்க்கிழமைகளில் மன் னார் சென்.சேவியர் கல்லூரியில் இடம்பெறவுள்ளன.

மாவட்ட மட்டத்தில் இருந்து தெரிவுசெய்யப்பட்ட மாணவர் கள் இந்தப் போட்டியில் பங்கு பற்றவிருக்கின்றனர். (ஐ)

# விலைக்கட்டுப்பாடு தளர்வால் அரிசிவிலை உயரும் அறிகுறி

கொழும்பு,ஒக். 30

அரிசியின் விலை உயரு மென்ற எதிர்பார்ப்பில் விவசாயி கள் நெல் விற்பனையை தற்காலி கமாக நிறுத்தியுள்ளனர். இதன் காரணமாக அரிசி ஒருகிலோ வின் விலை நூறுரூபா வரை யிலும் அதிகரிக்கும் வாய்ப்புகள் உள்ளன என அரிசி வர்த்தகர்கள் தெரிவித்துள்ளனர்.

விவசாயிகள் கடந்த நான்கு ஐந்து தினங்களாக நெல் விற் பனையை நிறுத்தியுள்ளனர். அரிசி உற்பத்தி மந்த நிலையை அடைந்துள்ளது. அதன் பிரதி பலிப்பாக அரிசியின் விலை உயர்வடையலாம் என மரந்த கஹாமுல அரிசி வர்த்தகர்கள் சங்கச் செயலாளர் பி.கே. ரஞ்சித் தெரிவித்தார்.

இது தொடர்பில் நுகர்வோர் அதிகார சபைத் தலைவர் ரூமி மர்சூக் தெரிவித்தவை வருமாறு:-

பெருந்தொகையான அரிசி கொள்வனவு செய்யப்பட்டதை யடுத்தே அரிசிக்கு விதிக்கப்பட் டிருந்த கட்டுப்பாட்டு விலை தளர்த்தப்பட்டது. இதனைக் காரணமாக வைத்து அரிசிக்கு தட்டுப்பாடு ஏற்பட்டு விலை உயருமானால் அரசின் கையிருப் பில் உள்ள அரிசி சந்தைக்கு விநியோகிக்கப்படும்.

விவசாயிகளிடமிருந்து நெல் கொள்வனவு சபை 1,800 மெட் ரிக் தொன் அரிசியைக் கொள் வனவு செய்து கையிருப்பில் வைத்துள்ளது. இதற்கென அரசு ஐந்து பில்லியன் ரூபாவை முத லீடு செய்துள்ளது - இப்படி அவர் குறிப்பிட்டார்.

இது தொடர்பில் சிறிய, நடுத் தர அரிசி ஆலை உரிமையாளர் களுடன் நிதியமைச்சின் செயலா ளர் பி.பி. ஜயசுந்தர விசேட சந் திப் பொன்றை நடத்தவுள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

# பல்கலை மாணவர்கள் எதிர்ப்புப் போராட்டங்களில் இறங்கினால் அவர்களை வீதியில் நாய்களைப் போல மண்டியிட வைப்பேன்!

## கொக்கரிக்கிறார் மேர்வின் சில்வா

கொழும்பு, ஒக். 30

களனிப் பல்கலைக்கழக மாணவர்களின் எதிர்ப்புச் செயற் பாடுகளைப் பொறுத்துக் கொண்டு இனியும் தம்மால் சும்மா இருக்க முடியாது என்றும், எதிர்ப்புப் போராட்டங்களில் ஈடுபடும் மாண வர் களை பல்லாயிரக்கணக்கா னோர் பார்த்துக்கொண்டிருக்க நடுவீதியில் மண்டியிட வைப் பேன் என்றும் பிரதியமைச்சர் மேர் வி ன் சில்வா எச்சரித்துள்ளார்.

நேற்று முன்தினம் களனித் தொகுதியிலுள்ள பாடசாலைகளைக் கண் காணிக்கும் நோக்கில் சுற் றுப் பயணமொன்றை மேற்கொண்ட பின்னர் அங்கு கருத்துத் தெரிவித்த போதே பிரதியமைச்சர் மேற்கண்ட வாறு எச்சரிக்கை விடுத்துள்ளார்.

அத்துடன், ''பல்கலைக்கழக மாணவர்கள் தங்கள் எதிர் காலத்தை வளப்படுத்திக் கொள் வதைப் பற்றி மட்டும்தான் சிந் திக்க வேண்டும். அதை விடுத்து எதிர்ப்புப் போராட்டங்கள், அது, இது என்று இறங்கினால், நடு வீதியில் நாய்களைப் போல மண்டியிட வைத்து - கடுமை யாகத் தண்டிப்பேன் என்றும் அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இதற்கிடையே கடந்த புதன் கிழமை களனிப் பல்கலைக்கழக மாணவர்களுக்கெதிராக மேற் கொள்ளப்பட்ட தாக்குதல் முயற்சி களில், களனிப் பிரதேசத்தின் பிரசித்தி பெற்ற விலைமாதர்கள் மற்றும் கிரிபத்கொடையின் பிர பல நிழல் உலக தாதாவான கப் பம் மஞ்சு வட்டி (பொலி) சோமே உள்ளிட்ட குண்டர் குழுவே ஈடு பட்டிருந்தது எனவும் தெரியவரு கிறது.



கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயத்தில் ஆசிரியர் தினவிழா அண்மையில் நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படம்.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ். மாவட்ட செயலக புள்ளி விவர உத்தியோகத்தர் து. சிறிகரன் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினரால் அழைத்துவரப்படுவதைப் படத்தில் காணலாம். (78)

# கடந்த ஐந்து வருடங்களுக்குள் நாட்டில் 65,000 ஏக்கர் தென்னந்தோப்பு அழிப்பு

கொழும்பு, ஒக். 30

கடந்த ஐந்தாண்டுகளில் நாடெங்கும் சுமார் 65 ஆயிரம் ஏக்கர் விஸ்தீரமான தென்னந் தோப்புகள் அழிக்கப்பட்டுள்ளன என தென்னை அபிவிருத்திச் சபையின் பிரதேச முகாமை யாளர் எச்.எம்.பீ.ஹேரத் தெரி வித்தார். அவர் மேலும் கூறியவை வருமாறு:-

தென்மாகாணத்தில் தென்னை மரங்களுக்கு ஏற்பட்ட தீவிர நோயைக் கட்டுப்ப டுத்துவதற் காக சுமார் 3,50,000 மரங்கள் தறிக்கப்பட்டு அப்புறப் படுத்தப் பட்[illegible] வீதியின் இரு மருங்கி லும் மூன்று கிலோ மீற்றர் தூரம் வரை தென்னை மரங்கள் தறிக்கப்பட் டுள்ளன.

தென்னந் தோப்புக்களைப் பிரித்து விற்கும் நடவடிக்கையி லேயே பேரழிவு ஏற்படுகின்றது. இதனடிப்படையில் குருநாகல் மாவட்டத்தில் மட்டும் நாளொன் றுக்கு சரா சரியாக 560 மரங்கள் வெட்டப்படுகின்றன.

தென்னந்தோப்புகளின் அழிப்பு, நோய்ப் பரம்பல், கவ னிப்புக் குறைவு போன்றவற் றால் எதிர்காலம் கேள்விக்குறி யாகியுள்ளது. நிலைமை இப் படியே சென்றால் இன்னும் 20 வருடங்களில் நாம் தேங்காயை இறக்குமதி செய்ய வேண்டிய நிலை ஏற்படும்.

மாதமொன்றுக்கு ஐந்து பேர டங்கிய குடும்பத்துக்கு 60 தேங் காய்கள் தேவைப்படுகின்றன. தேங்காயின் விலை 40-60 ரூபா வரை உயர்ந்துள்ளது. தோட்ட மொன்றில் ஐந்து தென்னைகளை வளர்த்தால் குடும்பத் தேவைக் குப் போக எஞ்சியவற்றை விற்கலாம்.

கம்பளை, பன்விலதன்ன, மீக முவத்த பிரதேசத்தில் கண்டி அரச அதிபர் கோட்டாபய ஜய ரத்னவின் தலைமையில் நடை பெற்ற மாவட்ட விவசாயக் குழுக் கூட்டத் தில் உரையாற்றிய போதே அவர் மேற்கண்'டவாறு தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீ வருவாய் என...

கடந்த நினைவுகளை - உன்னோடு
நடந்த பாதை தனில்
நனைத்துக் கொள்கிறேன்
நினைவுகளோ சினப்புக்களாய்
நீங்கிய பாடில்லை....

நனவுலகம்,
கண்களில் முட்டி மோதித்
துயிலெழுப்புகிறது;
சோம்பலோ சுழன்றடித்துத்
தூங்க வைக்கின்றது.

ஓ... என்னினிய உறவாடலே!
ஓலமிட்டு அழும் என் மனக்குரலின்
ஓங்களம் - உன்
காதுகளைக் குடையாமற்
பார்த்துக்கொள்....

என் தூக்கமும்
நினைவுகளுமே
உன்னைத் துயிலெழுப்பும் என்பதற்காய்
நான் இன்னமும்
விழித்துக் கொண்டிருக்கிறேன்...

விழிகளோ,
என் நீராய் நெய்சுரக்க
பேந்தியபடி முழிக்கிறது!!

காலம் - என்னைக்
கரைப்பதற்கு முயல்கிறது...

நானோ!
மணல் மேடும் அல்ல
அனல் வேகிய உடலும் அல்ல
என்றும் என்றும்
உன் நினைவுகளே!!!

உடலதற்கு,
காட்டில் ஆற்றுதல் உண்டென்பதால்;
நினைவுகளும் ஆறுதலதற்காய்
உனைவிட்டு
அகல மறுக்கிறது....

உன் நினைவும்
கனவுமே - என்னைக்
கரை சேர்க்கும் என்பதற்காய்
நான் இன்னமும்
காத்துக் கொண்டிருக்கிறேன்...

நுரையடிக்கும் கடலலையே!
வான் தொடுமோர் வரை நிரையே!
என் உறவாடல் உடனே
நித்தமும் நித்தமும்
சேதியோடு
நீவருவாயென்று...

துஜீவ்

# கையால் வர்ணம் தீட்டப்ப



*யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நுண்கலைத் துறையின் கலைவட்டத்தின் ஏற்பாட்டில் ஒக்ரோபர் 30 முதல் நவம்பர் 04 வரை நுண்கலைத்துறை ஓவியகூடத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள ஒளிப் படக் காட்சியை (photography exhibition) முன்னிட்டு இக்கட்டுரை பிரசுரிக்கப்படுகிறது.*

ஒளிப்படக்கலையைப் பொறுத்தவரை அது மேற்குலகில் அறிமுகமாகிய ஒருசில தசாப்தங்களுக்குள்ளாகவே ஆசியாவிற்கும் - இலங்கைக்கும் அறிமுகமாகியது. காலனி யம் - அதன் பொறிமுறை என்பன இந்த விரைவான அறிமுகத்திற்கான பிரதானமான காரணிகளாக இருந்தன. 1853 இல் ஹென்றி மாட்டின், லோட்டன் - லோட்டன் ஸ்ரூடியோ வழியுருவாகும் யாழ்ப்பாண ஒளிப்படக் கலையை பாரம்பரியம், ஒளிப்படக்கலையை விரைந்து பெற்றுக் கொண்டது போலவே கையால் வர்ணம் தீட்டும் புதிய முறையை யும் விரைந்து பெற்றுக்கொண்டிருக்க வேண்டும். ஒளிப்படப்பிடிப்பாளர்கள் ஓவியந்தீட்டும் அடிப்படையாற்றலைக் கொண்டவர்களாகவும், ஒளிப்படக்கலை யகம் என்பது ஒளிப்பட மற்றும் ஓவிய இணைகூடம் என்றவொரு எண்ணக்கரு எழுதாத ஒரு போக்காக ஆரம்ப காலகட்டத் தில் இருந்தாகவே படுகிறது. லோட்டன் ஸ்ரூடியோ தன்னை அறிமுகஞ் செய்யும் போதோ அல்லது ஸபாஸ் ஸ்ரூடியோவின் ஆரம்பகால விளம்பரங்களிலோ அது தன்னை ஒளிப்படக்காரர்கள் மற்றும் சைத்திரி கர்கள் எனவே அறிமுகஞ் செய்துள்ளது. கறுப்பு-வெள்ளைப் படத்திலேயே கறுப்பு வெள்ளைக்குள் தூரிகை-வர்ணமூடான மறுதொடுகை என்பது இவர் களுள் நீண்ட மரபாக முன்பே இருந்துள்ளது. இம்மரபு பலவர்ண தீட்டல் மரபிற்கான இலகுவான உள்நுழையும் வாயிலாக அவர்களுள் தொழில்பட்டிருக்கிறது. ஒளிப்பட வர்ணதீட்டல் - ஒளிப்படக்கலையக தொங்குகாட்சித் திரைகள் மற்றும் இதன் நீட்சியாக நாடக மேடை, காட்சித்திரைகள், வரைபு - விநியோகம் என்பனவும் இதன் பகுதியாக ஆரம்ப காலத்தில் தொழிற்பட்டிருக்கிறது. பெருமளவிற்கு இந்த வரைபு முயற்சியோடு சம்பந் தப்பட்டவர்கள் சுயமான வினைத்திறனூடாக இவற்றைச் செய்பவர்களாக இருந்தார்கள்.

பாலன்

ஸபாஸ் ஸ்ரூடியோ, யாழ்ப்பாணத்தின் முன்னோடி ஒளிப்படக் கூடங்களில் ஒன்று. புன்னாலைக்கட்டுவனைச் சேர்ந்த கே.கே.வி. செல்லையா 1952 இல் இவ்வொளிப்படக் கூடத்தினை ஸ்ரான்லி வீதியில் அது தற்போது இயங்கி வரும் இடத்தில் ஆரம்பித்தார்.1952 இற்கு முன்பதாகவே 'வாஸன்ஸ்' ஸ்ரூடியோ ஆரம்பித்த மாணிக்க வாசகர்

# இருவர் மீது ஒருவர் சாய்ந்து...

''ஹலோ கெதியா வாங்கோ எவ்வளவு நேரம் 'பஸ் ஸ்ரான்டில' நிற்கிறது'' என்று அதில் நின்ற யுவதி செல்பேசி ஊடாகச் சொல்லிக் கொண்டிருந்தார்.

நீண்டநேரம் யாரையோ எதிர்பார்த்துக் காத்திருப்பது போல சினம் கொண்டிருப்பதை அவரது முகம் உணர்த்தியது.

''இந்த இளம் வயதுப் பெட்டை இவ்வளவு 'பிளிங்குடன்' காத்திருக்கிறாள் என்றால் அது யாருக்காக என்று நினைக்கிறியள்?, வேறை யார்? அவளது பிரியமான காதலனுக்காக என்றுதானே நினைக்கிறீர்கள்.

கவிநேசன்

''சத்தியமாகச் சொல்றன் - நானும் அப்பிடித்தான் நினைச்சுக்கொண்டு அதிலை நிற்கிறன்''

மீண்டும் செல்பேசியை அழுத்தி -

''என்ன விளையாடுறியள் எவ்வளவு நேரம் வெயிட் பண்ணுறது.....'' என்று கடுமையாகக் கோபத்துடன் அழுத்திச் செல்பேசியைக் 'கட்' பண்ணிவிட்டுச் சீறிச்சினந்து கொண்டிருந்தாள்.

அதிலை நின்றவர்கள் அந்த யுவதியை ஒரு மாதிரிப் பார்த்தார்கள்.

(படையப்பா படத்தில் நீலாம்பரியின் கோபம் போலை இருந்திச்சு)

அவளது சீற்றத்தைத் தணிப்பதைப் போல 'பல்சர்' மோட்டார் சைக்கிளில் இரண்டு இளைஞர்கள் வந்து நின்றார்கள்.

''கண்ணாடி போட்ட 'ஹெல்மெட்' கொண்டு வந்தீங்களா? என்று அந்த இளையஞர்களைக் கேட்டாள்.

அவர்களும் 'ஹெல்மெட்டை' தூக்கிக்கொடுக்க அதைப்போட்டுக் கொண்டு இரண்டு பேருக்கும் நடுவில் ஏறி இருந்தாள்.

அவள் ஏறியதும் மோட்டார் சைக்கிள் மின்னல் வேகத்தில் தூள்கிளப்பியது.

அதில் நின்றவர்களெல்லாம் திகைத்துப் போனார்கள். அடப்பாவி இதுக்கா இவ்வளவு நேரம் சீறிச்சினந்து கொண்டிருந்தாள்.

நான் நினைக்கிறன், சமூகத்துக்கு ஏதோ நல்லது செய்ய வேண்டும் என்று நினைக்கிற சீர்திருத்தவாதி போல இருக்கும் எண்டு...

அதில் நின்ற முதியவர் ஒருவர் எனக்கருகில் வந்து...

''தம்பி உந்தப் பெட்டையை இதிலை வைச்சு இரண்டு, மூன்று நாளைக்கொருக்கா ஏத்திக்கொண்டு இந்தப் பொடியள் போவாங்கள்.''

''எங்கட ஊரிலை இருக்கிற ஒரு ஆள்களில்லாத வீட்டிலை வைச்சுக் கதைப்பாங்கள். திரும்பவும் இதிலை கொண்டுவந்து பின்னேரம் இறக்கிப்போட்டுப் போடுவாங்கள். பார்த்தியளே நாடு ரொம்பக் கெட்டுப்போச்சு என்று அவர் கூறிமுடிப்பதற்குள் ...... இரண்டு பேரும் சேர்ந்தா கதைப்பாங்கள் என்று ஆச்சரியத்துடன் கேட்டேன்.




''ஓம் தம்பி.... நான் பல தடவை கண்டிருக்கிறன்''

அப்படியெண்டால் நீங்கள் அவங்களைக் கண்டிக்கலாம் தானே? என்று கோபமாய்க் கேட்டேன். ''அவங்களைப் பார்த்தால் பக்கா 'ரவுடி' போல இருக்கு. கண்டிச்சுப்போட்டு நான் ஊரில இருக்கிறதில்லையே தம்பி.... ஒரு காலத்திலை இப்படியான சீரழிவுகளை நான் தட்டிக் கேட்ட னான்தான். அதுவொரு காலம். இப்ப ரொம்பக் கஷ்ரம் தம்பி. எங்களை இனி அந்த ஆண்டவன் தான் காப்பாற்ற வேணும். அவன் மேலை பழியைப் போட்டுவிட்டு இருப்பம் - என்று ஏக்கப் பெருமூச்செறிந் தார்.

பார்த்தீங்களா? இந்தச் சம்பவம் ஒன்றும் பகட்டுக்காகவும், கற்பனையுடனும் எழுதப்பட்டதல்ல. அகன்று விரிந்த வலிகாமப் பிரதேசத்தின் ஒரு பகுதியில், கடந்தவாரம் கண்ணால் கண்ட உண்மைச் சம்பவமே இது -

''நெஞ்சு பொறுக்குதில்லை - இந்த நிலைகெட்ட மானிடரை நினைக் கையிலே.....''

என்று பாரதியின் ஆதங்கவரிகள்தான் இதயத்தினை எட்டிப்பார்க்கிறது.

''யாழ்ப்பாணக் கலாசாரத்தில் எதுவெல்லாம் நடக்கக்கூடாதோ இப்போ அதுவெல்லாம் நடக்குது. கண்டிக்க வேண்டியவர்கள் கண்டும் காணாததுபோல இருக்கிறார்கள்.

இப்படியே நிலைமை போனால், யாழ்ப்பாணம் ''பாழ்ப்பாணமாக'' மாறும்... எனவே, நாங்கள் அதற்கு இடம் கொடுக்காமல் செயற்பட வேண்டும். உரியவர்கள் சிந்திக்க வேண்டிய தருணமிது. சிந்திப்பார்களா? [illegible] கலாசாரத்தை...




# சிங்கராஜவன

(சென்ற வாரத் தொ

பல்வேறு சிறப்புக்கள் கொண்ட சிங்கர பலதரப்பட்ட ஆய்வுகளை செய்துள்ளோம் நாள்களில் மூன்று வகையான காடுகளில் மேற்கொண்டோம்.

எம்மை வழிப்படுத்துவதற்காகவும் எம விளக்கங்களைத் தருவதற்காகவும் பெரும் என்பவர்களும் எம்முடன் இணைந்திருந்த இனிய நண்பர்களாகவே மாறிவிட்டார்கள்

அவ்விடத்தை விட்டு புறப்படும் நாள் எழுந்திருக்கவே மனதில்லாதிருந்தது. தங் முகத்தில் சோகம் ததும்பியது. தினமும் இ என்பது பிடித்துப் போனது . இராமன் பதி விம்மும் இதயங்களுக்கு ஒன்று சொல்கி சிங்கார வனத்தின் காட்டுபங்களாவில் தா

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ...ட்ட ஒளிப்படங்களின் காட்சி





அவர்கள் அதற்கு முன்னோடியாக ஓர் ஒளிப்பட கலையகத்தினை இதே இடத்தில் வைத்திருந்ததாக அறியமுடிகிறது.

கே.கே.வி. செல்லையா அவர்கள் ஓர் ஒளிப்படக்கலைஞர் மட்டுமன்றி ஓவியராகவும் மிகக்குறிப்பாக ஒரு நாடகக்காரராகவும் பிரபல்யம் பெற்றவர். 1952 களில் அவரால் தொடக்கப்பெற்ற மேற்படி ஒளிப்படக்கலையகம், அவர் ஆரம்பித்து சில வருட காலத்துக்கு உள்ளாகவே உரிமைமாற்றம் பெற்றுள்ளது. நா.முத்திலிங்கம் என்பவர்தான் கஸ்தூரியார் நிலைய வீதியிலும் பின்பு மின்சார நிலைய வீதியிலும் நடத்தி வந்த ''லிங்கம் ஸ்ரூடியோ''வினைக் கைவிட்டு ஸபாஸ் ஸ்ரூடியோவைப் பொறுப்பேற்றுக் கொண்டார். அவரது தொடர்ச்சியாக தற்போது அவரது புதல்வர் ஸ்ரீஸ்கந்தராசா ஸபாஸ் ரூடியோவை நடத்தி வருகிறார்.

ஸபாஸ் ஸ்ரூடியோ யாழ்ப்பாணத்தில் மிக பிற்காலம் வரைக்கும் கையால் வர்ணம் தீட்டும் ஒளிப்பட ஆக்கங்களிற்கு பிரபலமான ஓர் ஒளிப் படக்கூடமாகத் திகழ்ந்துள்ளது. ஒருவகையில் டிஜிற்றல் புகைப்பட முதன்மை - photoshop பயன்படுத்தி கறுப்பு-வெள்ளைக்கு சாயமிடும் முறை கள் மேற்படி அவர்களது பழைய முதன்மையை இன்று குறைத்துவிட்டபோதிலும், இன்று யாழ்ப்பாண ஒளிப்படக்கலைப் பாரம்பரியத்தை நின்று நிதானித்து திரும்பி பார்க்கும் போது ஸபாஸ் ஸ்ரூடியோ கையால் வர்ணமிடும் முறையின் பிரதான பங்களிப்பாளராக யாழ்ப்பாணம் ஒளிப்படக்கலை வரலாற்றில் தென்படுகிறது.

ஸபாஸ் ஸ்ரூடியோவின் பிரதான வர்ணம் ...டு வேலையினை அதன் உரிமையாளரான நா.முத்துலிங்கமே செய்து வந்துள்ளார். குறிப்பாக தைலவர்ணத்தினை பயன்படுத்தி வர்ணம் தீட்டும் முறையில் அவரது பங்களிப்பு முக்கியமானதாகும். அவரது ஆரம்ப கால தைல வர்ணப் பிரயோக முடைய ஒளிப்படங்கள் மிகச் சீரான தூரிகைப் பிரயோகத்தினையும் - முடிப்பினையும் உடையன.

இவருக்கப்பால் ஸபாஸ் ஸ்ரூடியோவின் பிரதான வர்ணம் தீட்டுனராக திரு.வர்ணம் அவர்கள் இருந்துள்ளார்கள். வர்ணம் அவர்கள் நீர்வர்ணத்தினைக் கையாள்வதில் சிறப்புத் தேர்ச்சியுடையவராக இருந்துள்ளார்.

இதேவேளை, ஒளிப்படக் கலையகத்துடன் நேரடியாக இணைந்து கொள்ளாத, சுயாதீனமாக பல்வேறு ஒளிப்படக் கூடங்களின் வேலைகளையும் செய்து கொடுக்கும் வர்ணம் தீட்டும் ஒரு படைப்பாளர் குழாமும் யாழ்ப்பாணத்தில் தொழிற்பட்டுள்ளது. ...வ்வாறானவர்களுள் ஒருவரான திரு.யோகம் என்பவரும் ஸபாஸ் ஸ்ரூடியோவின் ஒளிப்படங்களிற்கு வர்ணமிடும் தொழிற்பாடுகளில் ஈடுபட்டதாகத் தெரியவருகின்றது. யோகமும் நீர்வர்ணத்தினைப் பாவிப்பதில் ஆற்றலுடையவராக அறியப்படுகிறார். இக்காட்சிக்கு எடுத்து வரப்பட்டுள்ள ஸபாஸ் ஸ்ரூடியோவின் கையி ருப்பில் இருந்த கையால் வர்ணந்தீட்டப்பட்ட ஒளிப்படங்கள் ஏறத்தாழ 1965-2005 வரையான நெடுங்காலப்பகுதிக்குரியன. அவர்களிடம் இருந்த மேற்படி ஒளிப்படங்களின் ஒரு தொகுதி கடந்த கால யுத்த அனர்த்தங்கள் மற்றும் 'நிஷா' புயலின் வெள்ளப் பாதிப்புகளுள் அகப் பட்டு அழிந்து போயுள்ளது. இன்றுள்ள இப்படங்கள் யாழ்ப்பாணத்தினதும், பொதுவாக கையால் வர்ணந்தீட்டும் ஒளிப்பட முறையினதும் ஒரு குறுக்குவெட்டுமுகமாகும்.



# ...னத்தில் ஒரு சிங்கார உலா




(...டர்ச்சி)

...கராஜ வனத்தைத் தரிசித்து ...ாம். அங்கு நாம் தங்கியிருந்த ...ல் ஆய்வுகளை

...மக்கு தேவையான ...ம்பான்மை லால்,சுரங்க ...ந்தார்கள். அவர்களும் எமக்கு ...ள்.

...ள் விடிந்த பொழுது எமக்கு ...ங்களையறியாமலே எம்மவர்களின் ... இயந்திரமான நாட்டு வாழ்க்கையில் மூழ்கியிருந்த எம்மவர்களுக்கு காட்டு வாழ்கை ...தின்னான்கு ஆண்டுகள் காட்டுக்குப் போனதை நெஞ்சு பொறுக்குதில்லை என்று ...கிறேன். பதின்னான்கு ஆண்டுகள் இல்லை பதின்னான்கு ஆயிரம் வருடங்கள் என்றாலும் ...தங்கியிருக்கமுடியும் என்பது வெள்ளிடைமலை.

(முற்றும்)

# கொஞ்சம் கவனியுங்கள்

யாழ்.குடாநாட்டுக்கு யார் வந்தாலும் நாம் கால் பதித்தது ''தமிழ் மக்களுக்காக, உங்களுக்கு தகுந்த சேவை வழங்குவதற்காகஉங்களது சுபீட்சமான எதிர்கால வாழ்வுக்காக, என்ற ஒரே புராண படலம் தான் எந்த விடயத்துக்கு மேடை ஏறினாலும், எம்மை மீட்பதற்காக வந்த மாதிரித்தான் பேசிக் கொண்டு போகிறார்கள். இன்னும் அதிகமாகச் சொல்லப் போனால் ''உன் கண்ணில் நீர் வழிந்தால் என் நெஞ்சில் உதிரம் கொட்டுதடி '' என்ற நிலைதான்.

எல்லாமே 'எந்திரன் படம் மாதிரி' பிரமாண்டமாகத்தான் உள்ளது. பட்த்திலும் கதாநாயகன் இரட்டை வேடம்-வெளியிலும் இரட்டை வேடம் தான் போட வேண்டியுள்ளது. பணமுள்ளவன் ஒரு வேடம்,பணம் இல்லாதவன் ஒரு வேடம், இருவருமே சில நேரங்களில் இரட்டை வேடம் போடவேண்டியுள்ளது. கையில் கிடைக்கும் பணத்தைக் கொண்டு ''இந்த இரட்டைவேடம் தீர்மானிக்கப்படுகின்றது. பணம் உள்ளவரும், இல்லாதவரும் பூமியில் வாழ்ந்தேயாக வேண்டும். வாழ்வதற்கு எதிர்நீச்சல் போட்டேயாகவேண்டும்.

பணமில்லாதவர்கள் ''தனது நிலையை நினைத்து வருந்துகிறார்கள், எதிர்காலத்தை நினைத்து பயப்படுகிறார்கள். தங்களைத் தாழ்த்திக் கொள்கிறார்கள் கையில் பணம் உள்ளவருக்கு என்ன செய்வதென்று தெரியாத நிலை, சும்மா இருக்க முடியாது,மனது அலைபாயாமல் இருக்க முடியாது. மற்றவர்கள் ''பார்க்கிற மாதிரி ஏதோ ஒன்றை செய்தாக வேண்டும், கூட்டமும் ஆட்டமும் தேவையாக இருக்கும்.

எமதுகலாசாரத்தில் நடைமுறையிலுள்ள திருமணம், பிறந்தநாள்கொண்டாட்டம், புதுமனைப்புகுவிழா போன்ற பல்வேறு நிகழ்வுகள் எமது வாழ்க்கை ஓட்டத்தில் சக மனிதர்களோடு கலந்து கொண்டு நடக்கும் கொண்டாட்டங்களாக நாம் செய்து வருகின்றோம் இவை செய்ய வேண்டிய விடயங்களே.

ஆனால் இப்போது நிலைமை மாறிவிட்டது. பணம் வந்தால் பத்தும் செய்யும் என்றுசொல்வார்கள். பணம் என்றால் ''பிணமும் வாய்திறக்கும்'' என்ற பழமொழியுமுண்டு. இந்த நிலையில் பணமானது எம் சமுதாயத்தில் ஒரு பகுதியில் கரைபுரண்டு ஓடுகின்றது. இதனால் சில நிகழ்வுகள் செய்யாது விட்டால் ''சமூகத்தில் மதிப்புக் குறைந்து விடுமோ'' என்ற அச்ச உணர்வு தலை தூக்குகின்றது, தனது பிறந்த நாள் நிகழ்வினை கொண்டாடாமல் புகைப்படங்களின்றி பள்ளி போகும் பிள்ளைகளுக்கு, சில அவமானங்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

''என்ன, வாழ்வில் வரும் விடயங்களுக்கு யோசிக்கிறாய், ஒரு முறை பணத்தைச் செலவழித்தால் குறைந்தா போய்விடும்''? பெரிய பெரிய பந்தல்கள், அலங்கார வளைவுகள், சோடனைகள், அலங்கார மின்விளக்குகள், காதை அதிரவைக்கும் பாட்டுச் சத்தமும்வீடியோபதிவும், புகைப்படமுமாக ''இயக்குநர் சங்கரின் சினிமா போல்''வீட்டு விஷேடங்கள் திரைக்கு வந்து விட்டன''. கடைசியில் இதுவரை காலமும் தம்பாட்டில் நடந்து கொண்டிருந்த'செத்தவீடும்' இறந்தவருக்கு ஏதோ 'பாராட்டு விழா' (உயிருடன் இருக்கும் போது செய்யத்தவறியதாலோ?) செய்வது போல்தாரை, தப்பட்டைகள் வாத்தியங்களோடு''ரொம்பவும் சந்தோஷமாக ஊர்வலம் போகும். சந்தோஷமான, தூக்கமோ இப்படியான நிகழ்வுகளில் நேரம் காலத்தைப்பற்றி பெரிதாக யாரும் அலட்டிக்கொள்வது இல்லை. இவ்வளவு காசைக் கொட்டிச் செய்யும்போது நேரத்தைப்பார்க்கலாமே? ரொம்பச் சந்தோஷமாகக் கலியாணம் நடக்கும். மண்டபத்துக்குப் போனால் கூட்டமே தென்னிந்திய அரசியல் கட்சி நடத்தும் பிரசாரக் கூட்டத்திற்கு வந்தது போல் இருக்கும். கலியாணம் நடக்கும், தலை சுத்தும் இவ்வளவு கூட்டம் எப்படி வந்தது? ''நாங்கள் பெரிசாய் யாருக்கும் சொல்லவில்லை எனத்தங்களுக்கு சொல்லி பின் சிறிதாய் வழியில் காண்போருக்கு வந்திடுங்கோ எனச் சொல்லித் தீர்ப்பார்கள். பாவம் கலியாணவீடு போனவர்கள் கதி பெரும் சங்கடமாகப் போய்விடும். மணமக்களை வாழ்த்துவதா?அல்லதுபந்திக்கு முந்துவதா?

பாவம் வயதுபோன தம் பகுதிகளுக்கோ, கூட்டத்தை கண்டு தலை சுத்தும் ''உதுக்குள்ள எப்படியப்பா இடிபட்டுக் கொண்டு சாப்பிடுகிறது. அட வந்தவையை அழைச்சுக் கொண்டு போய் இருந்த ஒரு சனத்தையும் கானேல்ல.

எல்லாச் சொந்தங்களும், பந்தங்களும் மணமக்களைத் தமிழ் பட வில்லன்கள் போல் சுற்றிவளைத்து நின்று கொண்டிருந்தார்கள்.இப்படியான அநுபவம் உங்களுக்கு ஏற்பட்டதில்லையா? சனத்துக்குச் சொல்லி விட்டால் மட்டும் போதுமா? யார் வந்தார்கள், யார் போனார்கள், யார் உணவருந்தினார்கள் எல்லோரையும் மரியாதையோடு கவனித்துக் கொள்ள முடிகின்றதா?

வீடு தேடி வந்த மனிதருக்கு நாங்கள் உரிய மரியாதை, கவனிப்புச் செய்தோமா?

அண்மையில் ஒரு திருமண வைபவத்துக்குச் சென்றனர் தம்பதிகள். பந்தியும் வைத்தாகிவிட்டது. எல்லோரும் தத்தம்பாட்டுக்குப் புறப்பட்டுக்கொண்டிருந்தனர். ஆனால் இந்தத் தம்பதிகள் மட்டும் இன்னமும் அசையாமலே இருந்தார்கள். மனைவி கணவனிடம் ''எல்லாரும் வெளிக்கிட்டிட்டினம். வாங்கோவன் நாங்களும் போவம்'' என்று கூறினார். அதற்கு ''கல்யாண வீட்டில எங்கள ஒருத்தரும் வடிவாக் கவனிக்கேலை. பிறகு நாங்கள் கல்யாண வீட்டுக்கு வரேல எண்டுகூட சொல்லுவாங்கள். எதுக்கு வீண்சோலி? ஒரு படத்தை மாப்பிள பொம்பிளையோட நிண்டு எடுத்திட்டு போவம். நாங்கள் வந்ததுக்கு அது தான் சாட்சி.'' என்று கூறிவிட்டு படம் எடுக்க நின்றவர்களின் வரிசையில் போய் இணைந்தார்.

பார்த்தீர்களா? படத்தைப் பார்த்துத்தான் உறவுகளின் வரவுகளை ஞாபகப்படுத்தும் காலமாகிவிட்டது. பணத்தினை சட்டைப் பையில் வையுங்கள். மனிதர்களை மனதில் இருத்துங்கள் இரண்டையும் இருக்கும் இடத்திலிருந்து இடம்மாற்ற வேண்டாம். உங்களுக்கு நன்மை கிட்டட்டும்.

தொல்புரம்: சி.கதிர்காமநாதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்:**
தேவையான பணத்தைப் புரட்டிக் கொள்ளும் வாய்ப்பு உருவாகும். கணவன், மனைவி இடையே அன்னியோன்யம் அதிகரிக்கும். வியாபாரிகள் விற்பனை அதிகரிப்பால் கூடுதல் லாபம் பெறலாம். எதிரிகளின் சூழ்ச்சிகளை சாமர்த்தியமாக அறிந்து வெற்றி கொள்வீர்கள். நீங்கள் எதிர்பார்க்காத ஒருவர் உங்களைத் தேடி வரலாம்.

**இடபம்:**
அறியாமல் தவறு செய்து சிலரின் ஏச்சு, விமர்சனங்களுக்கு ஆளாகலாம். நண்பர்கள் சில விடயங்களில் உங்களுக்கு நல்ல யோசனை சொல்லலாம். பல நாள்களாக தள்ளி வைத்த வெளியூர் பயணம் மேற்கொள்ளலாம். பெண்கள் குடும்பச் செலவுகளில் தாராளம் காட்டுவர். பொழுது போக்கு விடயங்களில் நாட்டம் செல்லும்.

**மிதுனம்:**
மாமன், மைத்துனர்கள் உங்களுக்குத் தகுந்த நேரத்தில் கை கொடுத்து உதவுவர். தேக ஆரோக்கியம் தெம்பு, உற்சாகம் தரும். கடந்த காலத்தில் செய்த தவறு ஒன்றை நினைத்து வருத்தமடைவீர்கள். மற்றவர்கள் மத்தியில் உங்களைப் பெரிய ஆளாகக் காட்டிக் கொள்ள முற்படுவீர்கள். உதிரி வரவு உண்டு.

**கடகம்:**
ஆடம்பரப் பொருள்கள் வாங்குவீர்கள். உறவினர்கள் வருகையால் வீட்டில் கலகலப்பு அதிகரிக்கும். சிலரை நம்பி முக்கிய வேலைகளை ஒப்படைத்து விட்டு, அது எப்படியாகுமோ என பயப்படலாம். பயணங்களின் போது நடிகர்களைச் சந்திக்கலாம். வழக்கத்திற்கு மாறாக கடும் வேலைப்பளுவைச் சந்திக்கலாம். சோம்பல் கூடும்.

**சிங்கம்:**
வீண் பிடிவாதங்களைத் தவிர்த்து எதிலும் விட்டுக் கொடுத்துச் செல்லும் நாள். சுயநலமின்றி பொது விடயங்களில் ஈடுபடுவீர்கள். முக்கியமான வேலையாக வெளியிடங்களுக்கு செல்லலாம். ஆடை, அலங்காரப் பொருள்கள் வாங்கலாம். குறைந்த ஆதாயத்தை எதிர்பார்த்து செய்த வேலை ஒன்றில் கணிசமான ஆதாயம் கிடைக்கலாம்.

**கன்னி:**
பிள்ளைகள் வழியில் சந்தோஷம் தரும் செய்திகளைக் கேட்கலாம். எதிர்பாராத பணவரவுகள் இருந்தாலும் அதற்கேற்ற செலவுகளும் உண்டு. ஓய்வு எடுக்க நினைத்தாலும் முடியாத அளவுக்கு ஏதாவது வேலை நெருக்கடிகளைச் சந்திக்கலாம். உறவினர்கள் சிலரின் வீடுகளுக்கு செல்லலாம். நண்பர்கள் வட்டம் விரிவடையும்.

**துலாம்:**
தடை, தாமதங்களுக்குப் பின்னர் எடுத்த காரியங்களில் வெற்றி காணும் நாள். வீட்டில் சில வசதிகளை அதிகரிக்க முற்படுவீர்கள். கணவன், மனைவி இடையே ஏற்பட்ட சச்சரவுகள் தீர்விற்கு வரும். புதிய சொத்துக்கள் வாங்கப் போட்ட திட்டம் தள்ளிப் போகலாம். உடல் ரீதியான உபாதைகளால் உற்சாகம், தெம்பு குறையலாம்.

**விருச்சிகம்:**
சில பொருள்களை அதிக விலை கொடுத்து வாங்கி விட்டு பின்னர் வருத்தம் அடையலாம். எங்காவது செல்லும் போது யாராவது வீட்டிற்கு வந்து தொந்தரவு கொடுக்கலாம். பரிகாசப் பேச்சுக்களால் மற்றவர்களின் கோபத்திற்கு ஆளாகலாம். மற்றவர்களுக்காக உங்களின் கைப்பணத்தை செலவிடலாம்.

**தனுசு:**
நண்பர்கள் மூலம் பணவரவுகளைப் பெறலாம். உத்தியோகத்தர்கள் நிர்வாகத்தினரிடம் முன்வைத்த கோரிக்கைகள் நிறைவேறும். ஒரே இடத்தில் அமைதியாக இருக்காமல் அங்கும் இங்கும் பரபரப்பாக செயற்பட நேரிடலாம். விருந்து, விசேட நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ள வாய்ப்புக் கிடைக்கும். ஆனந்தமான நாள்.

**மகரம்:**
அவசரமாக முடிக்க வேண்டிய பொறுப்புகளால் அலைக்கழிப்பு நேரும். குடும்பத்தில் மகிழ்ச்சி, சந்தோஷம் அதிகரிக்கும். நினைத்த காரியம் ஒன்றில் பெண்கள் உதவியால் வெற்றி கிடைக்கலாம். கலைஞர்கள் ஏற்றமான பலன்களைக் காண்பர். வழக்கு விவகாரங்களில் அனுகூலமான திருப்பங்களைக் காணலாம். நல்ல செய்தி கேட்கலாம்.

**கும்பம்:**
வயிறு தொடர்பான உபாதைகளைச் சந்திக்கலாம். மறைமுக எதிர்ப்புகள் போட்டிகளை எதிர் கொள்ளலாம். உறவினர்கள் சிலர் கேட்ட உதவிகளை மறுக்காமல் செய்வீர்கள். ஒருவர் மூலம் ஒரு வேலையை முடிக்க முற்பட்டு, அது முடியாமல் மற்றொருவர் மூலம் முடிக்கலாம். பிள்ளைகளுக்கு நல்ல ஆலோசனைகள் சொல்வீர்கள்.

**மீனம்:**
சக ஊழியர்கள் விடயங்களில் விட்டுக் கொடுத்துச் செல்ல வேண்டும். சில விடயங்களில் நினைத்தது ஒன்றாகவும், நடப்பது ஒன்றாகவும் அமையலாம். தந்தை வழியில் எதிர்பாராத செலவுகளைச் சந்திக்கலாம். உங்களின் செல்வாக்கைப் பயன்படுத்தி மற்றவர்கள் காரியம் சாதிக்கலாம். ஏமாற்றங்களால் அதிருப்தி ஏற்படும்.

# தென்மராட்சி பிரதேச செயலகம் நடத்திய சிறுவர் தினப் போட்டிகளின் முடிவுகள்

தென்மராட்சி, ஒக். 30

சர்வதேச சிறுவர் தினத்தை யொட்டி தென்மராட்சி பிரதேச செயலகமும் வலயக்கல்வி அலுவலகமும் இணைந்து பாடசாலை மாணவர் களிடையே நடத்திய பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்றோர் விவரம் பிரதேச செயலகத்தினால் அறிவிக்கப்பட்டுள்ளது. வெற்றி பெற்றோரின் விவரம் வருமாறு

**புத்தாக்கக் கண்காட்சிப் போட்டி**

முதலாம் இடம் - பொன்னுத்துரை காஸ்ரோ (சாவகச்சேரி இந்துக் கல்லூரி)

2ஆம் இடம் - திருஞானசம் பந்தன் ஆரணி, கெங்காதரன் கோவர்த்தனன், தவராசா செந்தாளன் - (சாவகச் சேரி இந்துக்கல்லூரி)

3ஆம் இடம் - கெங்காதரன் கோவர்த்தனன், ஜெயகணேசன் ஜெயகீதன்- (சாவகச்சேரி இந்துக் கல்லூரி)

**பிரதேச மட்ட கவிதைப் போட்டி**

முதலாம் இடம் - திருஞானம் தர்சிகா-(மீசாலை வீரசிங்கம் ம.வி).

**கட்டுரை**

முதலாம் இடம்-சின்னத்தம்பி லக்சியா-மீசாலை வீரசிங்கம் ம.வி.

2ஆம் இடம் - சின்னத்தம்பி தனுஷியா -(மந்துவில் ஸ்ரீபாரதி வித்தி).

3 ஆம் இடம்-ஸ்ரீதரன் ரம்யா - (சாவகச்சேரி இந்துக் கல்லூரி). (201 - 207)



வலி.கிழக்குப் பிரதேச சபையும் புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தக் கல்லூரியும் இணைந்து வாசிப்பு மாதத்தை முன்னிட்டு நடத்திய புத்தகக் கண்காட்சி வலி.கிழக்குப் பிரதேச சபை தலைமைச் செயலகத்தில் இடம்பெற்றபோது எடுக்கப்பட்ட படம் இது.

நிகழ்வில் வலி.கிழக்குப் பிரதேசசபைச் செயலாளர் த.நடராஜா மங்கள விளக்கேற்றி நிகழ்வை ஆரம்பித்து வைப்பதையும் அருகில் புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தக் கல்லூரி முதல்வர் இ.இராஜமகேந்திரன் மற்றும் பிரதேச சபை பணியாளர்கள், மாணவர்கள் நிற்பதைப் படத்தில் காணலாம்.

(படம் :-கோப்பாய்ச் செய்தியாளர்)

# முக்தி

ஓர் ஊரில் துறவி ஒருவர் வாழ்ந்து வந்தார். அதிகமானோர் அவரிடம் உபதேசம் கேட்பது வழக்கம். அவர் அறிவுரை, ஆறுதல் போன்றவற்றைச் சொல்வார்.



ஒருநாள் ஓர் ஆசாமி வந்தான். அவன் மிகவும் கஞ்சத் தனமானவன். மற்றவர்களுக்கு எதையும் கொடுத்துப் பழகாதவன். அப்படி இருந்தும் அவனுக்கு ஓர் ஆசை. என்ன தெரியுமா? முக்தி கிடைக்க வேண்டும்! என்பது 'அதற்கு என்ன வழி?' அதைத் தெரிந்து கொள்வதற்காகத்தான் துறவியிடம் வந்தான். ''முக்தி கிடைப்பதற்கு என்ன வழி'' எனத் துறவியிடம் கேட்டான்.

'இதோ பார்! தர்ம நெறிகளைப் பின்பற்ற வேண்டும். ஏழை எளியவர்களுக்கு உதவி செய்ய வேண்டும்'' என்றார் துறவி.

''யோசித்துப் பார்த்தான்'', ''துறவி சொல்வதைப் போல நடந்தால்தான் முக்தி கிடைக்கும் போல இருக்கு! எனவே அதற்கு அதிகம் செலவு செய்ய வேண்டும். செல்வம் எல்லாம் கரைந்து போயிடுமே என்ன செய்வது?

குறைந்த பட்சம் எவ்வளவு செலவழிக்க முடியுமோ அவ்வளவு செலவு செய்தால் போதும் என்ற முடிவுக்கு வந்தான். அந்த அளவு முக்தி கிடைத்தால் போதும். அதன் பிரகாரம் நடக்க ஆரம்பித்தான். தினமும் ஒரு பிடி அரிசி எடுத்து யாருக்காவது தானம் பண்ணுவான். சிறிது நாள்கள் சென்ற பின் துறவியைப் பார்க்கச் சென்றான். ''தினமும் ஒருபிடி அரிசி தானமாக வழங்கி வருகிறேன்'' எனக் கூறினான்.

துறவி மௌனமாக இருந்தார்.

அந்த சமயத்தில் துறவி மரத்துக்கு அடியில் உட்கார்ந்திருந்தார். மரத்தின் அடிப்பாகத்திலே தனது விரல் நகத்தினால் கீற ஆரம்பித்தார். 'இந்த ஆள் என்ன இது... துறவி வாயைத் திறக்கவில்லையே...' என அந்த ஆசாமி யோசித்துக் கொண்டு பார்த்துக் கொண்டே நின்றான்.

பின்பு, ''என்ன சுவாமி! நான் என்னோட தானத்தைப் பற்றிச் சொல்கிறேன். நீங்கள் கீறிக் கொண்டிருக்கிறீர்களே!'' என்று கேட்டான். அதற்குத் துறவி 'நகத்தாலே மரத்தை வெட்டிக் கொண்டிருக்கிறேன்'' என்றார்.

''இந்தப் பெரிய மரத்தை நகத்தாலே வெட்ட முடியுமா?'' என்று கேட்டான்.

''ஒரு பிடி அரிசியைக் கொடுத்துவிட்டு நீ மோட்சத்துக்குப் போக வேண்டும் என நினைக்கும்போது நான் என் நகத்தால் மரத்தை வெட்ட முடியும் என நினைக்கக் கூடாதா?''

துறவி இப்படிக்கேட்டதும்தான் அந்த ஆளுக்குத் தான் செய்த தவறு புரிந்தது.

ஒருநாள் முக்தியடைவது என்ன சாதாரண விடயமா? முக்தி கிடைக்கும் தலங்கள் இருப்பதாகக் கூறப்படுகின்றது. அதாவது திருவாரூரிலே பிறந்தால் முக்தி, சிதம்பரத்தை தரிசித்தால் முக்தி, திருவண்ணாமலையை நினைத்தால் முக்தி, காசியிலே இறந்தால் முக்தி என அந்த இடத்தின் மகிமையைப் புரிந்துதான் அப்படிச் சொல்வது வழமை.

ஒருநாள் முத்தியடைந்த 5 பேரில் ஒருவரை ஒருவர் சந்தித்தார்கள். ''நீங்கள் எப்படி இங்கே வந்து சேர்ந்தீர்கள்?'' என ஒருவர் கேட்டார். முதலாவது நபர் ''நான் திருவாரூரிலே பிறந்தேன்''!, இரண்டாவது நபர் ''நான் சிதம்பர தரிசனம் செய்தேன்'' மூன்றாவது நபர் ''திருவண்ணாமலையை நினைத்தேன்'' நாலாவது நபர் ''நான் காசியிலே இறந்தேன்!'' எனக் கூறினார்.'' என்ன பேசாமல் இருக்கிறீர்கள்... உங்களுக்கு எப்படி முக்தி கிடைத்து சொல்லுங்கள்'' என்று நான்கு பேரும் ஐந்தாவது நபரைக் கேட்டார்கள்.

அவர் மெதுவாக வாயைத் திறந்து; நான் மவுண்ட் ரோடை கடந்து வந்தேன்! என்றார்.

கோ.சுவாமிநாதன்.

# நம்பினோர் கைவிடப்படமாட்டார்

ஓர் இரவு வேளை... ஒருமுறை மலை உச்சியில் இருந்து கால் தடுக்கிக் கீழே விழுந்த ஒருவர் ''கடவுளே என்னைக் காப்பாற்று'' என்று அலறினார்.

சட சட என்று கீழே விழுந்த அவர் அதிஷ்டவசமாக ஏதோ ஒரு மரக்கிளையைப் பிடித்துக் கொண்டு அந்தரத்தில் தொங்கினார். கடுமையாக இருள் சூழ்ந்திருந்தது.

இரவு முழுவதும் இப்படியே மரக்கிளையில் தொங்க முடியுமா என்ற பயத்தில் ''கடவுளே என்னைக் காப்பாற்றினாய்...ஆனால்'' முழுமையாகக் காப்பாற்றி இருக்கக் கூடாதா, உன்னை நம்பினேனே'' என்று மன்றாடினார்.

இதனைக் கேட்ட கடவுள் ''இப்போதும் ஒன்றும் குடி முழுகிவிடவில்லை. நீ என்னை நம்புவது உண்மையானால் உன் இரண்டு கைகளையும் விட்டு விடு'' என்றார். ''ஆ... அதற்கு வேறு ஆளைப்பார்'' என்றபடி இரவு முழுதும் குளிரில் விறைத்துச் இறந்து போனார் அவர். ஆனால் அவர் கையை விட்டி ருந்தால் அவருக்கு எந்தவித ஆபத்தும் ஏற் பட்டிருக்காது. காலை மலர்ந்த போது பார்த்தவேளை தொங்கிக் கொண்டி ருந்த அவரது காலில் இருந்து பூமி இரண்டடியிலேயே இருந்தது.



இதுதான் கடவுளை நம்பாததால் ஏற்பட்ட சந்தேகத்தின் விளைவு.

சுகி.சிவம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சவாலே சாதனையாக...

எந்த அவலங்கள் வந்தாலும் எத்தனை துயரச்சிலுவைகள் தம் மீது சுமத் தப்பட்டாலும் துணிவோடு எதிர்கொண்டு அதனையே சவாலாக எடுத்து பரீட்சையில் வெற்றி பெறுவது என்பது தமிழ் மாணவர்களின் வழிவழியான வரலாறு. எந்தவிதமான அடிப்படை வளங்களும் அற்ற சூழ்நிலையில் நெய்தல் நிலமாக விளங்கும் மணற்காடு பிரதேசத்தில் சுமார் 300 குடும்பங்கள் கடலை தமது வாழ் வாதாரமாக நம்பி சீவியம் நடத்தி வருகின் றன.

இந்தக்கிராமத்தில் அடிப்படை வளங்கள் எதுவுமற்று தகரக் கொட்டகைகளையே கூரைகளாகக் கொண்டு ஓர் அகதிமுகாமைப் போன்று மணற்காடு றோமன் கத்தோலிக்க பாடசாலை வளவைச் சுற்றிவர வேலி என்று குறிப்பிடும் அளவில் சிறு தகரங்கள் மூலம் கால்நடைகள் உள்ளே வருவதை தடுக்கும் எத்தனத்தில் இவை அமைக்கப்பட்டுள்ளன. சிறு பரப்பளவுக் காணியில் நெருக்கமான வகுப்பறைகள் அமைக்கப்பட்டுள்ளன.

சுனாமி, யுத்தம் என இந்தப் பாடசாலை தொடர் அனர்த்தங்களை சந்தித்திருந்தது. 26.12.2004 அன்று ஏற்பட்ட சுனாமி காரணமாக இந்தப் பாடசாலை முழுக் கட்டுமானமுமே சிதையும் அளவுக்கு அழிவுகளைச் சந்தித்தது. இந்தப் பாடசாலைச் சுற்று வட்டாரத்தில் வசித்து வந்த சுமார் 73 பேர் ஆழிப்பேரலையின் கோரப்பிடிக்குள் தம் உயிரை பறிகொடுத்திருந்தனர்.

இந்த அழிவுகளுக்கு பின் ஜி.ரி.சற் நிறுவனம் இந்த பாடசாலையைக் கட்டித் தருவதாகச் சொன்னார்கள். எனினும் அவர்கள் அப்படி எதுவும் செய்து தரவில்லை. அவர்கள் ஒதுக்கப்பட்ட இடம் இன்னமும் வெறுமையாக இருக்கிறது. அதன் பின்னர் கல்வித் திணைக் களம் தந்த ஒரு தொகை நிதியுதவியுடன் தான் இந்தப் பாடசாலையை கொஞ்சம் திருத்தியுள்ளோம். இது பாடசாலை அதிபர் பொ.பொன்னம்பலத்தின் கருத்து. இந்தச் சவால்களுக்கு மத்தியில் மேரிடியிலினி என்ற மாணவி 167 புள்ளிகளைப் பெற்று புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்துள்ளார்.

இவரின் சித்தி குறித்து பாடசாலை அதிபர் பொ. பொன்னம்பலம் கூறுகையில் ''பிள்ளை நல்ல முயற்சி எடுத்து படிப்பாள். தந்தை மீன் வியாபாரி. இவ்வளவு கஷ்டத்துக்கு மத்தியிலும் தளராது படித்து இந்த நிலையை அடைந்திருப்பதை நினைக்கும் போது எனக்கும் இந்தப் பாடசாலைக்கும் இந்த பிரதேச மக்களுக்கும் பெருமையாகத்தான் இருக்கிறது.

1943 ஆம் ஆண்டு இந்த பாடசாலை ஆரம்பித்ததில் இருந்து மணற்காடு றோமன் கத்தோலிக்க தமிழ்க்கலவன் பாடசாலையில் இருந்து சித்தியடைந்த முதல் மாணவி இவள் தான். 2004இல் ஏற்பட்ட


அதிபர் ஆசிரியருடன்....


தனது பெற்றோருடன்....

2004இல் ஏற்பட்ட சுனாமியின் கோரத்தாண்டவத்திற்கு பிறகு 2009 வரை இடைத்தங்கல் முகாமில் தான் இந்த பிள்ளை இருந்தவர். மின்சாரம் இந்தப் பிரதேசத்துக்கு வந்து மூன்று மாதம்தான் ஆகின்றது. இப்பாடசாலை குறுகிய பரப் பளவுக்குள்தான் இயங்குகிறது. அடிப்படை வளங்கள் அற்ற நிலையிலுள்ள ஒரு பாடசாலை யில் இருந்து இந்தப் பிள்ளை பாஸ் பண்ணியது பெரிய விடயம் என்றார்.

சுனாமியின் கோரத்தாண்டவத்திற்கு பிறகு 2009 வரை இடைத்தங்கல் முகாமில் தான் இந்த பிள்ளை இருந்தவர். மின்சாரம் இந்தப் பிரதேசத்துக்கு வந்து மூன்று மாதம்தான் ஆகின்றது. இப்பாடசாலை குறுகிய பரப் பளவுக்குள் தான் இயங்குகிறது. அடிப் படை வளங்கள் அற்றநிலையிலுள்ள ஒரு பாடசாலையில் இருந்து இந்தப் பிள்ளை பாஸ் பண்ணியது பெரிய விடயம் என்றார்.

இந்தச் சாதனையை நிகழ்த்திய மேர் டியூலினி எம்மிடம் தன் கருத்துக்களைப் பகிர்ந்துகொண்டார். ''நான் 'பாஸ்' பண்ணினதை நினைக்க சந்தோஷமாய் இருக்குது. எங்கட அப்பா மீன் வியாபாரி. எனக்கு மூன்று சகோதரர்கள். 'கொலசீப் பாஸ்' பண்ண வேண்டும் என்று அப்பா தான் முழு முயற்சி எடுத்தவர். இங்கை இருந்து 4 மைல் தூரத்தில் உள்ள ரியூசனுக் குப் போய்ப்படிச்சனான் . அங்கை உள்ள ஆசிரியரும் எனக்கு படிக்க நிறைய உதவி செய்தவர். 'உதயன்' பத்திரிகையின் புலமைச்சுடர் எனது வெற்றிக்கு உதவியது. இந்த வினாப்பத்திரங்களைப் பாடசாலை ஆசிரியர்களும் என்ர அப்பாவும் எனக்குத் தந்து உற்சாகம் தந்தவை. காலை 4.30 மணிக்கு எழும்பி இரவு 9.30 வரை படிப் பன். தனது வெற்றிக்கு எமது பாடசாலையின் முன்னாள் அதிபர் குருகுலலிங்கம் சேர் வகுப்புகளை ஒழுங்குபடுத்தி தந்தவர். எனக்கு டாக்டர் ஆக வேண்டும் என்று ஆசை'' என்று அந்த மாணவி கூறினாள்.

அந்தச் சிறுமி பின்னர் பாடசாலையின் முன்னாள் அதிபர் குருகுலலிங்கத்தின் புகைப்படத்தை எம்மிடம் காட்டி இவர் என்ரை வெற்றிக்கு முழுமுயற்சி எடுத்தவர். அவரோடையும் கதையுங்கோவன்

ஹரிஸ்

என்று முன்னாள் அதிபரின் தொலைபேசி இலக்கத்தையும் எமக்குத்தந்தபோது இந்த பிள்ளையின் நன்றி மறக்காத தன்மையும், ஞாபக சக்தியும் எம்மை வியப்பிலாழ்த்தியது.

பின்னர் இந்தப் பிள்ளையின் சாதனை தொடர்பாக வகுப்பாசிரியர் திருமதி மே.மரியரூபன் அவர்கள் கூறுகையில், இந்தப்பிள்ளைக்கு விவேகம், வினாக்களுக்கான விடையை அளிக்கும் திறன், இயல்பாக ஆராயும் திறமை என்பன அதிகமாகவே இருக்கின்றன. அதைவிட நிறையத் தேடலும் இருக்கிறது. ஒரு வகுப்பில் 43 பிள்ளைகள் படிக்கிறார்கள். வகுப்பிற்கு கூரை தகரம் தான்.அதைவிட சுற்றி வரவும் தகரம் தான் அடித்து இருக்கிறார்கள். மழை காலத்தில் அதனுள் இருக்க முடியாது. தூவானம் அடிக்கும் வெயில் என்றால் பிள்ளைகளுக்கு ஒரே வெக்கை எந்த வளமும் இல்லை. ஆனாலும் பிள்ளைகளுக்கு நல்ல ஆற்றல் இருக்கிறது. லீவு தான் என்றாலும் வகுப்பு வைப்போம்.

இப்பாடசாலை மாணவர்கள் பலரும் வறுமைக் கோட்டுக்கு உட்பட்டவர்கள். கடற்றொழில் செய்கின்ற குடும்பங்களைச் சேர்ந்தவர்கள்.குடும்பங்கள் வறுமையில் வாடுவதால் மாணவர்கள் பரீட்சையில் சித்தியடையாவிட்டால் கடற்றொழிலில் ஈடுபடுவார்கள். இது நாள் இங்குள்ள நிலை என்று கூறினார்.

பின்னர் அந்த மாணவியின் வீடு நோக்கி நடக்க ஆரம்பித்தோம். நாம் கண்ட வீடுகள் பலவும் இடைத்தங்கல் முகாம் கூடாரங்களையே ஞாபகப்படுத்தின. குறித்த மாணவி சொந்தக்காரரின் வீட்டில் இருந்தே படித்து சித்தியடைந்தார் என்பதை அறிந்த போது எமக்கு வியப்பாக இருந்து.

அங்குசென்று அவரின் பெற்றோரினை சந்தித்து பிள்ளையின் வெற்றி குறித்து வினவினோம். ''ஒருநாள் நான் கல்வித் திணைக்களத்திற்கு போனனான். அங்கு நிண்ட அதிகாரி ஒருவர் எனக்கு சவால் விடுத்தார். உங்கள் பிரதேசத்தில் இருந்து ஒரு பிள்ளையாவது 'கொலசிப்' பாஸ் பண்ணுமா? எண்டு அ வர் விட்ட சவாலே தான் என்ர பிள்ளையைப் பாஸ்பண்ண வைக்க வேணும் எண்ட உந்து சக்தியை எனக்குத் தந்தது. பருத்தித்துறையிலுள்ள மெதடிஸ் பெண்கள் உயர்தர பாடசாலைக்கு தான் பிள்ளையை அனுப்பி படிப்பிக்க நினைக்கிறம். ஆனால் பிள்ளை அங்க தங்கிப்படிக்க நிறையச்செலவாகும். இந்த பிரதேசத்திலே பிள்ளையை வைச்சிருந்து அவனின் அறிவை மழுங்கடிக்கிறோமே எண்டும் கவலையாக்கிடக்கு. ரியூசனில் பிள்ளைக்குப் படிப்பிச்ச கிருபா ரீச்சர், ஹேமா ரீச்சர் முழுமுயற்சி எடுத்து படிப்பிச்சவை என்றார் அந்த மாணவியின் தந்தை. வறுமைக்கு மத்தியிலும், முயற்சி செய்தால் எந்தச் சவாலிலும் வெற்றியடைய முடியும் என்பதற்கு உதாரணமான அந்த மாணவி தன் எதிர்காலம் பற்றிய கனவுகளோடு காத்திருக்கிறாள். *

# தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு: அடுத்த கட்டநகர்வு என்ன?

- யதீந்திரா -

கடந்த அறுபது வருடங்களாக ஈழத் தமிழ் மக்களை பிரதிநிதித்துவப் படுத்திய அரசியல் தலைமைகள் தாங்கள் சரியென்று நம்பிய ஒரு வழியால் பயணித்து வந்திருக்கின்றன.

அந்த காலகட்டத்தின் எமது தலைமுறைகளும் விருப்பு வெறுப்புகளுக்கு அப்பால் அவற்றுடன் இணைந்து நின்றிருக்கின்றன.

இதில் முதலாவது முப்பது வருடம் கறுப்புக் கொடி, கடையடைப்பு, சத்தியகிரகம் என்றெல்லாம் நமது தலைவர்கள் சாத்தியமான வகையில் தமது எதிர்ப்புக்களை வெளிப்படுத்தி இருந்தனர். ஆனால், ஒன்றையும் அடைய முடியவில்லை.

அடுத்த பகுதி முப்பது வருடங்கள் போராட்ட வடிவமாக மாறியது. எனினும் நாம் எந்த வழியைத் தெரிவுசெய்து கொண்டும் எம்மால் எதனையும் அடையமுடியவில்லை.

முதலாவது காலம், 'ஈழத் தமிழ் மக்களை கடவுள்தான் காப்பாற்ற வேண்டும்' என்பதாக நிறைவு பெற்றது. இரண்டாவது காலம் அந்த நம்பிக்கையைக் கூட விட்டு வைக்காத அளவுக்கு இருண்டகாலமாக இருக்கின்றது. சரி அப்படியானால் எமது அடுத்த தெரிவு எது? பாதை எது? நிச்சயமாக அந்த பாதை கடந்த அறுபது வருடங்களின் தொடர்ச்சியாக இருக்க முடியாது. இன்றைய சூழலை விளங்கிக் கொண்டு அதற்கு ஏற்பவே நாம் பயணிக்க முடியும்.

இங்கு கடந்த காலத்தில் நிகழ்ந்தவை பலவற்றையும் பற்றி விவாதித்துக் கொண்டிருப்பது எந்தவொரு ஆக்கபூர்வமான பலன்களையும் தரப்போவதில்லை. கடந்த காலத்தில் அரச தரப்பால் எமக்கு நேர்ந்த அவலங்கள் குறித்து நாம் பேச முடியும். எங்களிடம் அவ்வாறு பேசுவதற்கு ஏராளமான விடயங்கள் இருக்கின்றன.

அதேபோன்று சிங்கள மக்கள் தரப்பிலிருந்தும் புலிகள் அப்பாவி சிங்கள மக்களை கொல்லவில்லையா என்ற கேள்வி எழும். எங்கள் அளவுக்கு இல்லாவிட்டாலும் பௌத்த பிக்குகள் கொல்லப்பட்டதிலிருந்து இறுதியாக பஸ்கள் மீது மேற்கொள்ளப்பட்ட குண்டு வெடிப்புகள் வரை அவர்களாலும் பேச முடியும்.

நாங்கள் பேச அவர்களும் பேசுவார்கள் இறுதியில் விவாதம் புரிவதிலேயே காலங்கள் உருண்டோடும் எனவே விவாதங்களை விட்டு விட்டு ஆக்கபூர்வமாக சிந்தித்து செயற்படுவதே இன்று அவசியமாக இருக்கின்றது. உடனே அது என்ன ஆக்கபூர்வம் என்ற கேள்வி எழலாம்.

இப்போதெல்லாம் ஆக்கபூர்வமாக யாதார்த்தமாக என்றெல்லாம் சொல்லவே அச்சப்பட வேண்டியிருக்கிறது. எம்மில் ஒரு சிலர் அடுத்தவர்களுக்கு துரோகி, கைக்கூலி இப்படி பட்டங்கள் சூட்டுவதற்காகவே விரதமிருக்கின்றனர்.

அதற்காக ஆக்கபூர்வமான விமர்சனங்களையும் எதிர்ப்புக்களையும் வெளிப்படுத்தக் கூடாது என்று இந்தக் கட்டுரை வாதிட முயற்சிக்கவில்லை. சரி முதலில் நிலைமைகளை ஓர் ஆய்வுக்கு எடுத்துக் கொள்வோம்.

தற்போது இலங்கையில் தமிழர்களின் அரசியல் கோரிக்கைகள் எத்தகைய நிலையில் இருக்கின்றன? முன்னர் இருந்த நிலைமைகளுக்கும் தற்போதைய நிலைமைகளுக்கும் இடையில் இருக்கும் வேறுபாடுகள் என்ன? இன்றைய சூழலில் தமிழர்கள் முன்னர் வைத்த அதே கோரிக்கைகளை எழுப்ப முடியுமா?

அவ்வாறு எழுப்பினாலும் அதனை செவிசாய்க்கக்கூடிய நிலையில் இன்றைய கொழும்பு அரசு இருக்கின்றதா? இன்றைய அரசு பலம் எத்தகையது? இன்றைய அரசைப் பகைத்துக் கொண்டு எவரேனும் தமிழர்களுக்கு உதவ முன்வருவார்களா?

சிலர் சொல்லுவது போன்று இந்தியா ஏதேனும் அழுத்தங்களை இலங்கை அர சின் மீது பிரயோகிக்குமா? இன்றைய சூழலில் அத்தகைய ஏதேனும் தேவை இந்தியாவுக்கு இருக்கிறதா?

இவ்வாறான கேள்விகளை எழுப்பாமல் எமது அடுத்த கட்ட அரசியல் குறித்து எதனையும் பேச முடியாது. ஆனால், நடைமுறையில் இவ்வாறான எந்தவொரு கேள்வியையும் எழுப்பாமலேயே எமது அரசியல் விற்பனர்கள் அனைவரும் அரசியல் பேசி வருகின்றனர். எனவே நாம் மேற்படி கேள்விகளுக்கான விடைகளைப் பார்ப்போம்.

புலிகளின் காலத்தில் தமிழர்களின் அரசியல் என்பது ( Power based politics ) பலமான அரசியலாக இருந்தது. இது அனைவருக்கும் தெரிந்த உண்மை. அந்த பலம் என்பது பல்லாயிரக்கணக்கான இளைஞர் மற்றும் மக்களின் தியாகங்களால் விளைந்த ஒன்று. அந்தப் பலமே பேச்சு மேசையில் அரசுக்கு நிகராக புலிகளை அமர்த்தியது.

புலிகள் தாம் வன்முறையின் மூலம் அடைந்த பலத்தை ஜனநாயகத் தளத்துக்கு கைமாற்றிக் கொள்ளக் கிடைத்த சந்தர்ப்பம் தான் மேற்கின் தலைமையில் இடம்பெற்ற பேச்சு. ஆனால், புலிகளால் அதனை சரியாகக் கையாள முடியவில்லை. இறுதியில் அரசு புலிகளை அழித்தொழிக்கும் முப்பதாண்டு கால யுத்தத்தில் வெற்றி பெற்றது.

எனவே, இன்று இருக்கும் காலம் என்பது வெல்லவே முடியாது என்று கருதப்பட்ட ஓர் இயக்கத்தை தோற்கடித்தது மட்டுமல்லாமல் அதன் கட்டமைப்புக்கள் அனைத்தையும் இலங்கைக்குள் துடைத்தழித்திருக்கும் அரசின் காலம் ஆகும்.

இந்த நிலைமையில் இருந்துதான் அரசின் பலத்தை நாம் மதிப்பிட வேண்டும். அரசு தனது இராணுவ ரீதியான வெற்றியை அரசியல் தளத்துக்கு மாற்றியதன் மூலம் தனது அரசின் ஸ்திரத்தன்மையை ஒழுங்குபடுத்திக் கொண்டது.

ஏனெனில் எந்தவொரு இராணுவ வெற்றியும் முறையாக அரசியல் தளத்துக்கு மாற்றப்படும் போதுதான் அது ஒரு முழுமையான வெற்றியாக மாறுகின்றது. அரசின் இந்த அணுகு முறையே அரசு குறித்த மேற்கின் விமர்சனங்களைக் கூடப் படிப்படியாகத் தணித்தது.

ஆரம்பத்தில் போர்க் குற்றங்கள் குறித்து கடும் விமர்சனங்களை முன்வைத்த மேற்கு அரசுகள் சில படிப்படியாக தமது விமர்சனங்களிலிருந்து விலகி இலங்கை அரசுடன் அனுசரித்துச் செல்லும் உபாயத்தை கடைப்பிடிக்கத் தொடங்கின. இன்று தெற்காசியாவின் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடமாக மாறியிருக்கும் இலங்கை யுடன் இணைந்து செல்லவே அனைத்து சக்திகளும் முயற்சிக்கின்றன. இது மிகவும் வெளிப்படையான ஒன்றும் கூட.

(18 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் அஞ்சல் சேவை

## புறாக்கள் மூலம் ஆரம்பித்து வளர்ந்துள்ள தேசப்பணி

நூற்றறுபது வருடங்களுக்கு முன்னர் 1850 ஆம் ஆண்டில் கொழும்பிற்கும் காலிக்குமிடையே புறாக்கள் மூலமாகத் தபால் அனுப்பப்பட்டுள்ளது. செப்ரெம்பர் 24 ஆம் திகதி இச்சேவை ஆரம்பிக்கப்பட்டதெனப் பதிவேடுகளிலிருந்து அறிய முடிகின்றது.

இதனை அடுத்துக் கொழும்பிற்கும் கண்டிக்குமிடையே குதிரை வண்டிகளில் தபாற் சேவை நடைபெற்றுள்ளது. 1831 ஆம் ஆண்டில் இச் சேவை ஆரம்பிக்கப்பட்டது. தபாற் கந்தோர்களினால் நிர்ணயிக்கப்பட்ட பாதைகள் வழியே இவ்வாறு தபால்கள் எடுத்துச் செல்லப்பட்டன.

1798 ஆம் ஆண்டில் ஒல்லாந்தர்களால் தபாற் சேவையொன்று ஆரம்பிக்கப்பட்டது. ஆயினும் இச்சேவை ''டச்சு கிழக்கு இந்தியக் கம்பனி'' ஒன்றின் கீழ் இயங்கியது.

பிரித்தானியர் ஆட்சிக் காலத்தில் 1815 இல் பொதுமக்கள் சேவைக்கெனத் தபால் திணைக்களம் ஒன்று தனியாக நிறுவப்பட்டது. இத் திணைக்களத்தின் கீழ் இலங்கையின் முதலாவது தபாற் கந்தோர்கள் கொழும்பு, காலி, மாத்தறை, மன்னார், திருகோணமலை, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் திறந்து வைக்கப்பட்டன. 1830 இல் பெருந்தோட்டப் பகுதி விஸ்தரிக்கப்பட்டமையால் தபாற் சேவையையும் விரிவு படுத்த வேண்டியதாயிற்று. இதன் காரணமாகத் தபாற் கந்தோர்களின் எண்ணிக்கை அதிகரிக்க இச்சேவையினால் பயனடையக் கூடிய பிரதேசங்களின் விஸ்த்தீரணமும் துரித கதியில் அதிகரித்தது.

ஆரம்பத்தில் புறாக்களின் சேவையைத் தொடர்ந்து பின்னர் துரிதமாக ஓடிச் செல்லக் கூடிய தபாற் சேவகர்களினால் தபால் விநியோகம் மேற்கொள்ளப்பட்டது. தபாற் பொதிகளைத் தோளிற் சுமந்து இடத்துக்கிடம் கால் நடையாகவே சென்று தபால்களை விநியோகிப்பதில் இத் தபாற் சேவகர் சிற்சில ஆபத்துக்களை எதிர் கொள்ள வேண்டியதோர் துர்ப்பாக்கிய நிலையும் உருவானது. எனவே தற்காப்பிற்காக இவர்கள் நீண்டதோர் ஈட்டியைக் கையில் எடுத்துச் சென்றனர்.

பிரித்தானியர் ஆட்சிக்காலத்திலிருந்து இந் நாட்டில் தொடர்ச்சியாக நடைபெற்று வந்த தபாற் சேவையின் வரலாற்றைப் படவிளக்கங்களுடனும் ஆவணங்கள் மூலமாகவும் நேரில் பார்த்து அறிந்து கொள்ள விரும்பின் கொழும்பு டி.ஆர்.விஜேவர்த்தன மாவத்தையில் அமைந்துள்ள தபாற் சேவைகள் அமைச்சின் தபாற் சேவைகள் தலைமையகத்திற்குச் செல்லவேண்டும். அங்கு அண்மையில் புதிதாக அமைக்கப்பட்ட ''தபால் தந்தி தொல்பொருள் காட்சியகம்'' வியப்பூட்டுவதாக இருக்கின்றது.

நாடு பூராகவும் எங்கு பார்த்தாலும் பிரதான வீதிகளின் அருகே சிவப்புப் பெட்டிகளை நாம் காண்கிறோம். அதனுள்ளே தான் முத்திரை ஒட்டிய தபால்களைப் போடுகின்றோம்.

இப்பெட்டிகளில் எதுவித மாற்றங்களும் மேற்கொள்ளப்படாது ஒரே மாதிரியானவையாகவே தான் காட்சியளிக்கின்றன. இருப்பினும் பிரித்தானியர் ஆட்சிக்காலத்தில் பிரித்தானியச் சக்கரவர்த்திகள் காலத்திற்குக் காலம் பதவி மாற்றம் மேற்கொள்ளும் போது இத்தபாற் பெட்டிகளில் காணப்பட்ட அவர்களது இலச்சினைகளில் மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டிருந்தது. தபால் திணைக்களம் உருவாக்கப்பட்ட போது ராணி விக்டோறியாதான் பிரித்தானிய சாம்ராஜ்யத்தின் பேரரசியாக இருந்தார்.

6 ஆம் ஜோர்ஜ் மன்னர் , 5 ஆம் ஜோர்ஜ் மன்னர், 7 ஆம் எட்வேட் ஆகியோருக்குப் பின்னர் இவருக்கு முடி சூட்டப்பட்டது. இவர்கள் ஒவ்வொருவரும் பதவியேற்ற போது அவரவர் இலச்சினைகள் தபால் பெட்டிகளில் பதிக்கப்பட்டன.

இந் நிகழ்வுகள் யாவற்றையும் வியப்பூட்டும் வகையில் அருங்காட்சியகத்தில் பார்க்கக் கூடியதாயுள்ளது.

தபால் அலுவலகங்களுடனான செய்தித் தொடர்புகள் கடந்த காலங்களிலோர் செய்திப் புரட்சியை ஒருவாக்கியுள்ளதென்பது மிகையாகாது. இருநூற்றாண்டுகளில் ஏற்பட்ட மாற்றங்களைத் தத்ரூபமாக எடுத்துக் காட்டுகின்றது இந்த அருங்காட்சியகம்.

இன்று இந்நாட்டில் 4700 தபாலகங்கள் உள்ளன. பிரதம தபாலகங்கள் 643, உபதபாலகங்கள் 3411, முகவர் தபாலகங்கள் 684.

சமூகத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்யக் கூடியதாகத் தபாலச் சேவைகள் எவ்வாறு வளர்ச்சி பெற்றனவென்பதை இந்த அருங்காட்சியகம் எடுத்துக் காட்டுகின்றது. இது இலங்கையின் தபால் சேவையின் வரலாறாகும்.

(தொகுப்பு: காரை ஆனந்தன்)

## ஆடைத் தொழிற்சாலை யுவதி கழுத்து நெரித்துக் கொலை; பாழடைந்த தென்னந் தோட்டத்திலிருந்து சடலம் மீட்பு

கொழும்பு, ஒக்.30

கைக்குட்டையால் கழுத்து நெரிக்கப்பட்டு கொலை செய்யப்பட்ட யுவதி ஒருவரின் சடலம் மீகொட தாம்பே பிரதேசத்தில், பாழடைந்த தென்னந்தோட்டம் ஒன்றிலிருந்து மீட்கப்பட்டுள்ளது என பாதுக்கை பொலிஸார் தெரிவித்தனர்.

தாம்பே, கோன்காவில என்ற இடத்தில் வசித்துவந்த ரசிகா தரங்கணி (வயது - 22)என்ற யுவதியே இவ்வாறு சடலமாக மீடகப்பட்டுள்ளார்.

பால்சேகரிக்கச் சென்ற தொழிலாளர்கள் பாதையில் கைப்பை ஒன்றைக் கண்டுவிட்டு நடத்திய தேடுதலின்போதே யுவதியின் சடலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

அண்மையில் இடம்பெற்ற இச்சம்பவம் குறித்து கூறப்பட்டவை வருமாறு:-

உயிரிழந்த யுவதி பனாகொட இராணுவ முகாமுக்கு முன்னால் உள்ள ஆடைத்தொழிற்சாலையில் பணிபுரிந்துள்ளார். இவர் சடலமாக மீட்கப்படுவதற்கு முதல்நாள் வீட்டிலிருந்து கிளம்பியுள்ளார். கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருக்கும் நோயாளி ஒருவரைப் பார்க்கப் போகிறார் என வீட்டில் கூறிச் சென்றுள்ளார். எனினும், இரவாகியும் வீடு திரும்பவில்லை. இரவு 11.30 மணியளவில் தனது பக்கத்து வீட்டுக்கு தொலைபேசியில் தொடர்பு கொண்டு, நேரமாகிவிட்டதால் வீடு திரும்ப முடியவில்லை என்றும், பெற்றோருக்குத் தகவல் வழங்குமாறும் கூறியுள்ளார்.

இந்த நிலையில் மறுநாள் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். சடலத்தின் அருகில் கைப்பை ஒன்றும், கையடக்கத் தொலை பேசி ஒன்றும், சில 'கவரிங்' நகைகளும், கடிகாரமும், கைக்குட்டை ஒன்றும் கண்டெடுக்கப்பட்டுள்ளன. அங்கிருந்து சற்றுத்தூரத்தில் பற்றைக்கருகி லிருந்து யுவதியின் பாதணிகள் எடுக்கப்பட்டுள்ளன.

சம்பவ இடத்திற்கு விஜயம் செய்து விசாரணைகளை மேற்கொண்ட ஹோமாகம மாவட்ட நீதிவான் சுமித் பெரேரா இது கொலையெனத் தீர்ப்பளித்தார். விசாரணைகளை நடத்துமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டார். மேற்படி சம்பவம் பிரதேசத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. (சி)


### வீடு விற்பனைக்கு

16, அத்தியடி, புது வீதியில் நிலப்பரப்பு 1, குழி 5 கொண்ட காணியும் வீடும் விற்பனைக்குண்டு.

தொ.பே.: 0779009391, 0212225091. (105325)

### உடனடியாக வீட்டுப் பணிப் பெண் தேவை

ஒன்றரை வயதுக் குழந்தையைப் பார்ப்பதற்கு வீட்டில் தங்கியிருந்து பார்க்கக்கூடிய ஒரு பொறுப்பும் இல்லாத பெண் விரும்பத்தக்கது. எனினும் ஏனையோரும் கருத்தில் எடுக்கப் படுவர் என்பது குறிப்பிடத்தக்கது.

தொடர்பு கொள்ள வேண்டிய தெலைபேசி: 0778284837. (103222)

abe

A Mega Seminar on

The Association of Business Executives(ABE) - U.K. Programs

for those who are waiting for A/L results, degree holders and others

Admission Free

A Presentation (in Tamil and English) will be delivered by

A Member of the Association of Business Executives(U.K.)

Venue: Jaffna Central College (Romaine Hall)

Date: 31st October, 2010 Time : 3.30 PM - 6.30 PM

Seminar organised by:
ABE (U.K.) - Sri Lanka Branch
T.P.: 011 - 5749743

Seminar coordinated by:
Gateway - Jaffna Branch
347, Kasthuriyar Road, Jaffna.
Tel : 0215675555, Fax : 0212227967

Thousands of students are currently studying towards an ABE qualification and many of them will use their qualification as an affordable, fast-track route to a globally recognised bachelor's degree or an MBA programme.

ABE works with over 500 accredited colleges in 100 countries worldwide to deliver Certificate, Diploma, Advanced Diploma and Postgraduate Diploma level qualifications.

There are exemption arrangements with other professional bodies including ACCA, CIMA and BCS.

ABE self-study program is introduced in Jaffna first time.

More than 50% of the ABE students are studying self-study mode globally.

Students who want to join on a part - time ABE program in Colombo or a full - time ABE program in U.K. at colleges (A) rated by the British Home Office, will be given due advice and consultancy by the Member of the Association of Business Executives(U.K.).

For further details on ABE, please contact via:

071 - 5213154

Participants will be given 10% discount for all the courses at Gateway

www.abeuk.com

நீங்கள் பீனிசம், பீனிச வாய்வு இளநரை, தலையிடி, தலைப்பாரம், மூக்கினால் இரத்தம் வடிதல், காதடைப்பு, கண்மங்கல் என்பவற்றால் அவதிப்படுகிறீர்களா ?

இதோ பாவியுங்கள்

கண்ணுக்குக் குளிர்ச்சியும் முகத்திற்கு அழகும் உண்டாக்கி கூந்தலை நீளமாகவும் கறுப்பாகவும் அழகாகவும் வளரச்செய்யும் சித்த ஆயுர்வேத முறைப்படி தயாரிக்கப்பட்ட

சித்தாரா பொன்னாங்காணித் தைலம்

பொன்னாங்காணித் தைலம் வாங்கும்போது வர்ணமூடியுடன் சித்தாரா டிஸ்பென்ஸரி வைத்திய முத்திரைக் குறியீடு உள்ளதா எனப் பொதி செய்யப்பட்ட பெட்டியைத் திறந்து சரிபார்த்து வாங்குங்கள்.

Manufactured By:
SITHARA PRODUCTS
Puttalam Road, Chilaw
(Reg.No:- 6382) AR/PR/No.228

யாழ்.மாவட்ட ஏகவிநியோகஸ்தர்:
சிவா நறுமணப்பூங்கா
இல.288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 2567

(C/564561)


### 31ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு 15★ 04 ★1943 உதிர்வு 30★ 09 ★2010



### திருமதி கர்ணசாமி உமாதேவி

அன்பான மனைவியாய் பாசமிகு தாயாய்
பண்பான பேர்த்தியாய் பார் போற்றும் புகழோடு
உலகின் ஒளி விளக்காய் பிறரை மகிழ்வித்தீரே!
இன்பமழை பொழிந்த எம் இனிய விடிவிளக்கே
ஒன்றல்ல ஓராயிரம் மாதங்கள் சென்றாலும்
எம் இதயத்தில் சுடராய் எந்நாளும் ஒளிர்வீரே!

கடந்த 30.09.2010 வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்த எமது குடும்பத் தலைவியின் 31ஆம் நாள் நினைவு தினமான இன்று (30.10.2010) அவரது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்வில் கலந்துகொள்வதோடு மதிய போசனத்திலும் பங்குகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

'துவாரகை',
மூளாய் மேற்கு, மூளாய். (105309)

அன்புடன்
குடும்பத்தினர்
(கணவர்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்பாறை மாவட்ட 40கிராமங்களில் பல்வேறு அபிவிருத்திப் பணிகள் ஆரம்பம்

அம்பாறை, ஒக். 30

அம்பாறை மாவட்டத்தில் 60 வருடங்களுக்கு முன்னர் 40 கிராமங்களில் ஆறாயிரம் குடும்பங்கள் குடியேற்றப்பட்டன. இக் கிராமங்கள் அமைச்சர் பி.தயாரத்னாவின் வேண்டுகோளுக்கிணங்க அரசால் அபிவிருத்தி செய்யப்பட்டு வருகின்றன.

இப்போது 40கிராமங்களிலும் பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட குடும்பங்கள் உள்ளன. இக்குடும்பங்களைச் சேர்ந்தோரில் ஒரு பகுதியினர் மகாவலிப் பிரதேசத்திலும், உட வளவைப் பிரதேசத்திலும் தொழில் வசதிகளுடன் குடியேறியுள்ளனர்.

கல்லோயா குடியேற்றப் பிரதேசத்திலுள்ள 40குடியேற்றக் கிராமங்களிலும் முழுமையான அபிவிருத்தி வேலைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. வீதிகள் கொங்கிறீட் வீதிகளாக மாற்றி அமைக்கப்படுகின்றன. நீர்ப்பாசன வாய்க்கால்களின் இரு கரைகளுக்கும் கொங்கிறீட் போடப்படுகிறது. இதனால் நீர் முழுமையாக விவசாயத்துக்குப் பயன்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது. நாட்டு மக்களுக்குத் தேவையான அரிசியில் 25 வீதமான அரிசியை அம்பாறை மாவட்ட விவசாயிகளே உற்பத்தி செய்கிறார்கள் என்று விவசாய அமைச்சின் புள்ளி விவரங்களிலிருந்தும் தெரிய வருகிறது.

அம்பாறை மாவட்டத்தில் கூடுதலான அளவு நெல் உற்பத்தி செய்யப்படுகிறது. சோளமும் செய்கைபண்ணப்படுகிறது. அம்பாறையில் கோழித்தீன் உற்பத்தித் தொழிற்சாலை ஒன்றும் அமைக்கப்பட்டு வருகின்றது.

இதேபோன்று குடியேற்றவாசிகளுக்குத் தொழில் வாய்ப்புகளை வழங்குவதற்காக முதலீட்டாளர்கள் ஆடைத்தொழிற்சாலை, கொங்கிறீட் கற்கள் உற்பத்தித் தொழிற் சாலை ஆகியவற்றை அமைப்பதிலும் ஈடு பட்டு வருகிறார்கள். (ளி)

# கல்வி அதிகாரியின் தலையீடு: ஆர்ப்பாட்டம் கைவிடப்பட்டது

மட்டக்களப்பு, ஒக். 30

தாளங்குடா ஸ்ரீ முருகன் வித்தியாலய அதிபர் குணரெட்ணம் இடமாற்றம் செய்யப்பட்டமைக்கு ஆட்சேபனை தெரிவித்து மேற்கொள்ளப்பட்ட ஆர்ப்பாட்டம், கோட்டக் கல்வி அதிகாரியின் தலையீட்டால் கைவிடப்பட்டது.

மட்டக்களப்பு மண்முனைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட தாளங்குடா ஸ்ரீ முருகன் வித்தியாலய அதிபர் குணரெட்ணம் வேறொரு பாடசாலைக்கு இடமாற் றம் செய்யப்பட்டதை எதிர்த்து ஆர்ப்பாட்டம் ஒன்று இடம்பெற்றது.

புதன்கிழமை காலை வித்தியாலயத்தின் வெளிப்புறத்தில் ஆர்ப்பாட்டத்தை வித்தியாலய அபிவிருத்திச் சங்க நிருவாகத்தினரும் பொதுமக்களும் இணைந்து மேற்கொண்டனர்.

ஆர்ப்பாட்டம் இடம்பெற்றுக் கொண்டிருக்கையில் அவ்விடத்துக்கு வந்த கோட்டக் கல்வி அதிகாரி தா.நித்தியானந்தன் அதிபரின் இடமாற்றத்தைத் தடுக்க தாம் நடவடிக்கை எடுப்பார் என வாக்குறுதி அளித்தார். இதையடுத்து ஆர்ப்பாட்டம் கைவிடப்பட்டது.

இவ்வித்தியாலயத்தில் 442 மாணவர்கள் கல்வி கற்கின்றனர். எனினும் 17 ஆசிரியர்களே கடமையாற்றுகின்றனர். இதுவே இக் கிராமத்தில் உள்ள பெரிய பாடசாலையாகும் என தெரிவிக்கப்படுகின்றது. (ளி)






இம்முறை மாகாண மட்டத்தில் நடைபெற்ற கணித,விஞ்ஞான விநாடி வினாப் போட்டியில் பாத்திமாக் கல்லூரி இரண்டாமிடத்தை ஈட்டியுள்ளது. பதக்கங்களைப் பெற்ற மாணவர்கள் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டார்கள். கல்லூரி அதிபர் எம்.ஸ்ரிபன் மத்தியு, பிரதி அதிபர் புவனேந்திரராசா, கற்பித்த ஆசிரியர்கள் ஆகியோருடன் பதக்கங்கள் பெற்ற மாணவர்களான ஞா.கிருஸாகரி, பி.சி.டிலுசன், எம்.எவ். எம்.நிகாத் ஆகியோர் பதக்கங்களுடன் நிற்பதையும் சான்றிதழ்கள் பெற்ற மாணவர்களையும் நினைவுச் சின்னத்தையும் படத்தில் காணலாம்.

# கார்மேல் பாத்திமா கல்லூரிக்கு நான்கு தங்கப் பதக்கங்கள்

மாகாண மட்ட ரீதியாக நடைபெற்று முடிந்த கணித, விஞ்ஞான வினாடி வினாப் போட்டியில் கல்முனை கார்மேல் பாத்திமாக் கல்லூரி 4 தங்கப்பதக்கங்களைப் பெற்று மாகாண மட்டத்தில் இரண்டாமிடத்தை ஈட்டி யுள்ளது என கல்லூரி முதல்வர் எம்.ஸ்ரிபன் மத்தியு தெரிவித்தார்.

தரம் 6இல் கல்விபயிலும் ஞா.கிருஸாகரி இரண்டு தங்கப் பதக்கங்களையும், தரம் 8இல் கல்விபயிலும் மாணவன் பி.சி.டிலுசன் ஒரு தங்கப்பதக்கத்தையும், தரம் 11இல் கல்விபயிலும் மாணவன் எம்.எவ்.எம். நிகாத் ஒரு தங்கப்பதக்கத்தையும் பெற்றுள்ளனர்.

இவர்களைப் பாராட்டிக் கௌரவிக்கும் நிகழ்வு கல்லூரியில் நடைபெற்றது. இவர் களை வழிநடத்திய ஆசிரியர்களும் கல்லூரி முதல்வரால் பாராட்டப்பட்டனர். (ளி)

# ஹட்டன் தொழில் ஆணையாளர் அலுவலகத்தில் நாளொன்றில் 25 விண்ணப்பங்களே விநியோகம்

## தோட்டத் தொழிலாளர்கள் ஆட்சேபம்

நுவரேலியா, ஒக். 30

ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம் சம்பந்தமாக தோட்டத் தொழிலாளர்கள் ஹட்டன் தொழில் ஆணையாளர் அலுவலகத்திற்குச் செல்கின்றனர்.

எனினும், இங்கு நாளொன்றுக்கு 25 பேருக்கே விண்ணப்ப படிவங்கள் வழங்கப்படுகின்றன. ஏனையோர் ஏமாற்றத்துடன் திரும்பவேண்டியுள்ளது எனத் தொழிலாளர்கள் பலரும் விசனம் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பாக தொழிலாளர்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டவை வருமாறு:-

ஊழியர் சேமலாப நிதி விண்ணப்பப் படிவங்களைப் பெறுவதற்காக நுவரெலியா மாவட்டத்தைச் சேர்ந்த தோட்டத் தொழிலாளர்கள் பெரும் எண்ணிக்கையானோர் முதல்நாள் இரவே சென்று குறிப்பிட்ட அலுவலகத்திற்கு முன்பாக வரிசையில் நிற்பார்கள்.

எனினும், மறுநாள் முதல் 25 பேருக்கு மட்டுமே படிவங்கள் வழங்கப்படுகின்றன. இரவிரவாக கால்கடுக்க நின்ற ஏனைய தொழிலாளர்கள் திருப்பி அனுப்பப்படுகின்றனர்.

மேலும் திங்கள், செவ்வாய் மற்றும் புதன் கிழமைகளில் மாத்திரமே படிவங்கள் வழங்கப்படுகின்றன. அவ்வாறான நாட்களிலும் தொழிலாளர்கள் அலைக்கழிக்கப்படுகின்றனர்.

எனவே, தோட்டத் தொழிலாளர்களின் நலன் கருதி வருகை தரும் தொழிலாளர்கள் அனைவருக்கும் விண்ணப்பப் படிவங்களை வழங்க வேண்டும்.

அதேவேளை, மேற்படி காரியாலயத்தில் தமிழ்பேசும் அதிகாரிகளை நியமிக்க வேண்டும். இதற்கு நுரலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும் - என்று தொழிலாளர்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (ளி)

# 70ஆவது நபரைக் காவுகொண்டது குருவிட்ட போபத்எல்ல அருவி

கொழும்பு, ஒக்.29

குருவிட்ட போபத் எல்லை அருவியில் நீராடிய இளைஞரொருவர் அதில் மூழ்கி உயிரிழந்த சம்பவம் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது.

எஸ்.சிவராசன் என்ற இளைஞரே இவ்வாறு உயிரிழந்தார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

திருமண வைபவம் ஒன்றில் கலந்து கொள்வதற்காக வந்திருந்த உறவினர்களுடன் இவர் நீராடிக் கொண்டிருந்தபோதே இந்த அசம்பாவிதம் ஏற்பட்டுள்ளது.

பிரதேசவாசிகள் மேற்கொண்ட 15 மணிநேரத் தேடுதலின் பின்னரே சடலம் மீட்கப்பட்டுள்ளது.

1993 ஆம் ஆண்டுக்குப் பின்னர் இந்த அருவில் மூழ்கி எழுபதுபேர் உயிரிழந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ளி)




# மின்னல் தாக்கத்தில் மூன்றுபேர் பாதிப்பு

லுணுகலை ஜனதாபுர பகுதி வீடொன்றின்மீது மின்னல் தாக்கியதில் இரு பெண்கள் உட்பட பாதிக்கப்பட்ட மூவர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். கையடக்கத் தொலைபேசியை இயக்கமுற்பட்டபோதே மின்னல் தாக்கியதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

# கேகாலை இரட்டைக் கொலை வழக்கில் மேலும் இருவருக்கு மரண தண்டனை

கேகாலை, ஒக். 30

கேகாலை திக்எல்லவில் 18 வருடங்க ளுக்கு முன்னர் இடம்பெற்ற இரட்டைக் கொலைச் சம்பவத்தில் எஞ்சியிருந்த மேலும் இருவருக்கு கேகாலை மாவட்ட நீதிமன்றம் மரண தண்டனை விதித்து தீர்ப்பளித்துள்ளது.

இவ்வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டிருந்த ஏழுபேருக்கு ஏற்கனவே மரணதண்டனை விதிக்கப்பட்டிருந்தது. இந்தநிலையில் மேற் கூறிய இருவரும் சிறையிலிருந்து தப்பிச் சென்று தலைமறைவாகியிருந்தனர். இவர்கள் கடந்த வருடம் டிசம்பர் 2ஆம் திகதி மீண்டும் கைதுசெய்யப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

1992 மார்ச் 3ஆம்திகதி திக்வெல்லவில் வசித்து வந்த பொடிமாத்தயா என்ற நபரை யும், அவரது மனைவியான விமலாவதி என்ப வரையும் அடித்துக் கொன்றனர் என ஏழுபேர் மீதும் குற்றம் சாட்டப்பட்டிருந்தது. (ளி)

# கிளங்கன் ஆதார வைத்தியசாலைக்கு தினமும் விசேட போக்குவரத்துச்சேவை

நுவரேலியா, ஒக்.29

ஹட்டன் இலங்கை போக்குவரத்துச் சபை மூலம் நேற்றுமுன்தினம் முதல் டிக்கோயா கிளங்கன் வைத்தியசாலைக்கு விசேட பஸ்சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

மத்தியமாகாணசபை உறுப்பினர் முரளி ரகுநாதன் விடுத்த வேண்டுகோளுக்கிணங்கவே இச்சேவை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் தினமும் ஹட்டன் நகரிலிருந்து காலை 5.30, பகல் 11.30, மாலை 5.00 மணிக்கு என மூன்று சேவைகள் நடைபெறும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ளி)

# பதுளை உள்ளூராட்சி மன்றங்களின் பிரதிநிதிகளுடன் மாகாண அமைச்சர் செந்தில் தொண்டமான் சந்திப்பு

பதுளை, ஒக்.30

எதிர்வரும் உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பதுளை மாவட்ட தமிழப் பிரதிநிதித்துவங்களைத் தக்கவைப்பது தொடர்பான கலந்துரையாடலொன்று அண்மையில் மாவட்ட அரச அதிபர் காரியாலயத்தில் நடை பெற்றது.

அரச அதிபரின் பங்குபற்றுதலுடன் மாகாண அமைச்சர் செந்தில் தொண்டமான் தலைமையில் கலந்துரையாடல் நடைபெற்றது.

இ. தொ. கா. ஆலோசகர் டி.வி. சென்னன் உட்பட்ட பிரதிநிதிகளுடன் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் பலரும் இதில் கலந்து கொண்டனர். எதிர்வரும் உள்ளூராட்சிமன் றத் தேர்தலில் தமது பிரதிநிதித்துவங்களைத் தக்கவைப்பது தொடர்பாக ஆராய்ந்தனர்.

இங்கு உரையாற்றிய செந்தில் தொண்ட மான் தெரிவித்தவை வருமாறு:-

அரசியல் கட்டமைப்பில் உள்ளூராட்சி மன்றங்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன. மக்க ளுடன் நேரடியான தொடர்புகளைப் பேணி, அவர்களின் பிரச்சினைகளை இனங்கண்டு அவற்றுக்குத் தீர்வுபெற்றுக் கொடுக்கக் கூடிய ஒரு நிறுவனமாக இவை காணப்படு கின்றன.

அரசால் மேற்கொள்ளப்படும் சகல அபிவிருத்தி திட்டங்களும் உள்ளூராட்சி மன்றங்களூடாகவே நடைமுறைப்படுத்தப்படும். இதில் தமிழ்ப்பிரதிநிதித்துவம் கட்டாயமாகும்.

எனவே, எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் நாம் ஒற்றுமையுடன் சிந்தித்துச் செயற்பட்டு எமது பிரதிநிதித்துவங்களை அதிகரிக்க வேண்டும் - இவ்வாறு செந்தில் தொண்டமான் தெரிவித்தார். (ளி)

# வீட்டின் சுற்றுச்சூழலை அசுத்தமாக வைத்திருந்தவருக்கு 4 மாதச்சிறை

கண்டி, ஒக். 30

டெங்குநுளம்பு பரவும் வகையில் வீட்டின் சுற்றுச்சூழலை அசுத்தமாக வைத்திருந்த ஒருவருக்கு கண்டி நீதிவான் நீதிமன்றத்தினால் 4 மாதச் சிறைத் தண்டனையுடன் 1,500 ரூபா அபராதமும் விதித்து தீர்ப்பளிக் கப் பட்டது.

மேற்படி தீர்ப்பு கண்டி மாவட்ட நீதிமன்றத்தின் மீள்பரிசீலனைக்காக அனுப்பப்பட்டது. எனினும், மாவட்ட நீதிவான் பிரீத்தி பத்மவினால் தீர்ப்பு சரியானது எனக் கூறப்பட்டு, மீள் பரிசீலனை மனு நிராகரிக்கப்பட்டது.

மெனிக்கின்ன பிரதேசத்தில் அமைந்துள்ள குறித்த நபரின் வீட்டில் பழைய டயரொன்று நுளம்புபரவும் வகையில் போடப்பட்டிருந்தது. இதையடுத்து பொலிஸாரால் இவர் கைது செய்யப்பட்டார்.

இதேவேளை, நுவரெலிய மாவட்டத்தி லுள்ள 80 வர்த்தக நிலையங்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்படவுள்ளது என நுவரெலிய மாவட்டச் செயலாளர் ஜி. பி. குமாரசிறி தெரிவித்தார்.

குறைந்த நிறையில் பாண்களை விற்றமை, தரம் குறைந்த அளவை உபகரணங்களைப் பாவித்தமை, எரிபொருள் அளத்தலில் மோசடி உள்ளிட்ட பல குற்றச் சாட்டுகளை முன்வைத்தே வழக்குத் தாக்கல் செய்யப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு.......

(13 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இத்தகையதொரு பின்புலத்தில்தான் ஈழத் தமிழர்களின் அரசியல் கோரிக்கை என்ற விடயம் நோக்கப்பட வேண்டும்.

புலிகள் பலமாக இருந்த காலத்தில் தமிழர் தலைமையுடன் வலிந்து பேச வேண்டிய தேவைப்பாடுகள் அரசுக்கு இருந்தன. குறிப்பிட்ட காலத்தை பிரதிநிதித்துவப்படுத்திய அரசுகள் அனைத்துமே விரும்பியோ விரும்பாமலோ புலிகளுடன் பேச முன்வந்தன. இலங்கையில் இருவகை நிர்வாகங்கள் இருப்பதை அப்போதைய அரசுகள் எதனாலும் நிராகரித்துச் செல்ல முடியாத நிலைமை யாகவே இருந்தது.

ஆனால், தற்போதைய அரசுக்கு அவ்வாறான கடப்பாடுகள் எதுவும் இல்லை. இதனை எமது அரசியல் விற்பனர்கள் எவரும் உணர்ந்து கொண்டதாகத் தெரியவில்லை. எனவே அரசு எல்லாமுமாக இருக்கின்ற ஒரு சூழலில் அரசை தவிர்த்துக் கொண்டு எதனையும் இலங்கைக்குள் செய்ய முடியாது என்பதே யதார்த்தம்.

ஆனால், புலம்பெயர் சூழலில் நாம் என்ன வேண்டுமானாலும் செய்யலாம். தேர்தல் வைக்கலாம். உருத்திரகுமாரனை பிரதமராக தெரிவு செய்யலாம்.

கொழும்பின் அரசியல்வாதிகள் ஐரோப்பிய நாடுகளுக்குச் செல்லும் போது அவர்களை கண்டித்து ஜனநாயக ரீதியாக எதிர்ப்பை தெரிவிக்கலாம். இவற்றை அரசால் தடுக்கவும் முடியாது. அத்துடன், இவற்றால் அரசை பணிய வைக்கவும் முடி யாது.

ஆனால், இலங்கைக்குள் நிலைமைகள் முற்றிலும் வேறானது. இலங்கைக்குள் ஈழத் தமிழ் மக்களுக்கான எதிர்காலம் என்பது அரசுடன் இணைந்த ஒன்று. அரசை தவிர்த்து சிந்திப்பது வெறும் சுலோக அரசியலுக்கு உகந்ததாக இருக்குமேயொழிய யதார்த்தத்திற்கு பொருத்தமான ஒன்றல்ல.

இன்று புலிகளின் அழிவுக்கு பின்னர் ஈழத் தமிழ் மக்களின் எதிர்காலத்தை நிர்ணயிப்பதாகக் கூறி பலர் களத்தில் குதித்திருக்கின்றனர். இவர்களில் பிரதான தரப்பினர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு. 'தமிழ் கட்சிகளின் அரங்கம்' என்னும் பெயரிலும் மற்றைய அணியினர் தரப்பினர் செயற்படுகின்றனர்.

தமிழ் கட்சிகளின் அரங்கத்தில் அங் கம் வகிக்கும் டக்ளஸ் தேவானந்தாவின் தலைமையிலான ஈ.பி.டி.பி கட்சியைத் தவிர அனைவருமே மக்கள் மத்தியிலி ருந்து அன்னியப் பட்டிருப்பவர்கள் (இவருக்கும் ஒட்டுமொத்த வடக்கு, கிழக்கு என்ற வகையில் செல்வாக்கு இல்லை).

அதில் சிலரை புதிய தலைமுறையின ருக்கு அடையாளம் கூடத் தெரியாது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைப் பொறுத் தவரையில் ஒப்பீட்டளவில் பெரும்பா லான வடக்கு, கிழக்குத் தமிழ் மக்களின் ஆதரவைப் பெற்ற ஒரேயொரு அமைப்பு என்ற வகையில் அது கூடுதல் முக்கி யத்துவம் பெறுகிறது.

எனவே, ஈழத் தமிழ் மக்களின் அரசியல் தலைமை என்று சொல்லக் கூடிய தகுதி தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கே உண்டு. எனவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஈழத் தமிழர்கள் தொடர் பில் முக்கியமான முடிவுகளை எடுக்க வேண்டிய பொறுப்பில் இருக்கின்றது.

தற்போதைய சூழலில் அரசுடன் இணைந்து போகக் கூடியவற்றில் இணைந்தும் விமர்சிக்க வேண்டியவற்றில் விமர் சனத்துடனும் செயலாற்றும் பொறிமுறை ஒன்று குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமது முடிவுகளை பகிரங்கப் படுத்த வேண்டும். ஈழத் தமிழர்களின் எதிர்காலத்தை கருத்தில் கொண்டு சிந்தித்தால் இலங்கையில் தூய எதிர்ப்பு அரசியலின் காலம் முடிந்துவிட்டது.

இங்கு எதிர்ப்பு அரசியல் என்ற கருத்துக்கு பதிலாக அழுத்த அரசியல் என்பதே பொருத்தமாக அமையும். 'தமிழ்க் கட்சி களின் அரங்கமும்' இலங்கையின் ஒவ்வொரு இடமாக தெரிவு செய்து தேனிலவில் ஈடு படுவதைவிடுத்து ஆக்க பூர்வ மாக ஈழத் தமிழர்களின் எதிர்காலம் தொடர்பில் தங்களது நிலைப்பாட்டை பகிரங்கப்படுத்த வேண்டும்.

பொதுநலவாய நாடுகளின் பிரதிநிதிகளைச் சந்தித்த ஜனாதிபதி தமிழ் கட்சிகள் ஒன்றுபட்டால் மட்டுமே அரசியல் தீர்வு குறித்து பேச முடியும் என்று மிகவும் நுட்பமாக பூமறாங்கை தமிழ்த் தலைமைகள் என்போர் பக்கம் வீசியிருக்கிறார்.

ராஜதந்திர அரசியலில் 'பூமறாங் தியறி' என்று ஒன்றுண்டு. உலகப்புகழ் பெற்ற சாணக்கிய அரசியல்வாதியென தேர்தல் காலங்களில் அவரது ஆதரவாளர்களால் புகழப்பட்ட இரா.சம்பந்தர் இதனை நன்கு அறித்திருப்பார் என்றே நாம் நம்பலாம்.

இறுதி யுத்தத்தில் போர்க் குற்றங்கள் இம்பெற்றதாக பல மனித உரிமை அமைப்புக்கள் கொழும்பை விமர்சித்த போது இந்த பூமறாங் தியறியையே கொழும்பு நுட்பமாகப் பயன்படுத்தியது.

ஆப்கானிலும், ஈராக்கிலும் என்ன நடந்ததோ அதுவே முள்ளிவாய்காலிலும் நடந்தது என்று கூறி விமர்சித்தவர்களை திருப் பித்தாக்கியது. இப்போது கொழும்மை நோக்கி பூமறாங்கை தமிழ்த் தலைமைகள் என்போர் வீசவேண்டு மாயின் தமக்குள் ஒன்றுபட வேண்டும்.

ஆனால் ஒன்றுபடாமை என்பதே தமிழரின் நோய். பின்னர் எப்படி திருப்பி வீசுவது. இதனை கொழும்பு நன்கு அறியும். எப்போது இந்த நோயில் இருந்து எம்மால் விடுபட முடியுமென்றால் தலைமை குறித்த ஆசையை விட்டுவிட்டு எமது மக்கள் மீண்டெழ வேண்டும் என்று சிந்தித்து அதனை செயற்படுத்திக் காட்டினால் மட்டுமே அது சாத்தியமாகும்.

குறிப்பிட்ட காலத்துக்காவது அனைவரும் கடந்கால விடயங்களை மறந்து ஓர் இடைக்கால நிபந்தனையின் அடிப்படையில் கூட ஒன்றுபட்டு செயலாற்ற முடியும். எல்லாவற்றுக்குமான விடை அரசி யல் வாதிகளின் செயற்பாட்டில் இருக்கிறது. பாதிக்கப்பட்ட மக்களோ கேள்விக் குறியுடன்.

இதில் மிகவும் பரிதாபத்திற்குரியவர்கள் ஈழத் தமிழர்களின் எதிர்காலம் குறித்து சிந்திக்கும் ஊடகவியலாளர்கள், எழுத்தாளர்கள், சிந்தனையாளர்கள் என்போர் தான். அவர்களும் எழுதிக் கொண்டே இருக்கின்றனர் ஆனால் எந்தவொரு ஈழத் தமிழ் அரசியல்வாதியும் அதனை ஒரு கருத்துக்குக் கூட எடுத்ததில்லை. அதிலிருந்து எதனையும் கற்றுக் கொள்ள முயன்றதில்லை.

ஈழத் தமிழ் மக்களை பிரதிநிதித்துவப் படுத்திய, படுத்துகின்ற அரசியல் சக்திகள் அனைவருமே எல்லாமும் அறிந்த சகலகலா வல்லவர்கள். அதனால்தான் என்னவோ கடந்த அறுபது வருடங்களாக ஈழத் தமிழ் மக்களின் நலனுக்காக எதனையும் அவர்களால் செய்ய முடியவில்லை.


01.11.2010 முதல் வெளிவருகிறது

பதுளை வலம்

மாணவர்களுக்காக சுடர் ஒளி கல்விச்சுடர்

O/L நடத்தும் மாவட்ட வலம் - 2010

பதுளை வலம்

தேசிய ரீதியில் புகழ்பெற்ற சுடர் ஒளி கல்விச்சுடர் வளவாளர்களின் சேவையை வீட்டில் இருந்தவாறே பெற்றுக்கொள்வதற்கு ஓர் அரிய வாய்ப்பு!

நாளை மறுதினம் முதல் வெளிவரவுள்ள கொழும்பு மாவட்ட வலத்தில் இடம்பெறுபவை:

விஞ்ஞானம்

திரு.வி.பரணிதரன்

பதுளை மடுல்சீமை தமிழ் மகா வித்தியாலயம்

வெளிவரும் திகதி: 01.11.2010

கணிதம்

திரு.பி.பிரபாகரன்

பதுளை மடுல்சீமை தமிழ் மகா வித்தியாலயம்

வெளிவரும் திகதி: 02.11.2010

ஆங்கிலம்

திரு.எஸ்.யோகேஸ்வரன்

பதுளை சரஸ்வதி மத்திய கல்லூரி

வெளிவரும் திகதி: 03.11.2010

தமிழ்

திரு.ஆர்.ராஜரட்ணம்

வெளிவரும் திகதி: 04.11.2010

பெற்றோர்களே, மாணவர்களே!

உங்கள் பிரதிகளைப் பெற்றுக்கொள்ள அருகிலுள்ள "உதயன், சுடர்ஒளி" முகவரிடம் இன்றே முற்பதிவு செய்துகொள்ளவும். [illegible] உங்களுக்குப் பிரதிகள் கிடைப்பதை உறுதிசெய்துகொள்ளவும்.


# வாழ்வாதார உதவி வழங்கும் நிகழ்வு

அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தினரால் சுயதொழில் பயனாளிகளுக்கான வாழ்வாதார உதவிகள் வழங்கும் நிகழ்வு இன்று சனிக்கிழமை முற்பகல் 9 மணிக்கு அகதிகள் புனர்வாழ்வு கேட்போர் கூடத்தில் நடைபெறும்.

நிறுவனத்தின் தலைவர் பேராசிரியர் ப.சிவநாதன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வுக்குப் பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்.


ஜனஜய லொத்தர்

உத்தியோகப்பூர்வ முடிவுகள்

வாரம் 172 சீட்டிழுப்புத் திகதி 28.10.2010

வெற்றி இலக்கங்கள்: 07 12 37 48 சுப்பர் இலக்கம்: 03

சுப்பர் பரிசுப்பொதி — ரூ. 7,314,710/=

| வெற்றி இல. | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்த பரிசுத் தொகை |
|---|---|---|---|
| சுப்பர் இலக்கம் தவிர்ந்த ஏதே 1 இலக்கத்துக்கும் | 62556 | ரூ. 20/= | ரூ. 12,51,120/= |
| சுப்பர் இலக்கத்துடன் ஏதே 1 இலக்கத்துக்கும் | 5767 | ரூ. 40/= | ரூ. 2,30,680/= |
| சுப்பர் இலக்கம் தவிர்ந்த ஏதே 2 இலக்கங்களுக்கும் | 4877 | ரூ. 100/= | ரூ. 4,87,700/= |
| சுப்பர் இலக்கத்துடன் ஏதே 2 இலக்கங்களுக்கும் | 409 | ரூ. 200/= | ரூ. 81,800/= |
| சுப்பர் இலக்கம் தவிர்ந்த ஏதே 3 இலக்கங்களுக்கும் | 102 | ரூ. 1,500/= | ரூ. 1,53,000/= |
| சுப்பர் இலக்கத்துடன் ஏதே 3 இலக்கங்களுக்கும் | 12 | ரூ. 3,000/= | ரூ. 36,000/= |
| சுப்பர் இலக்கம் தவிர்ந்த ஏதே 4 இலக்கங்களுக்கும் | 1 | ரூ. 1,000,000/= | ரூ. 10,00,000/= |
| சுப்பர் இலக்கத்துடன் ஏதே 4 இலக்கங்களுக்கும் | - | ரூ. 7,314,710/= | |
| மொத்த எண்ணிக்கை | 73724 | | ரூ. 3,240,300/= |

வியாழக்கிழமை சுப்பர் பரிசுப்பொதி ரூ. 7,504,940/= உட்பட வரிவிலக்கற்ற புதிய மோட்டார் வாகனமும் அதன் மிகுதிப்பணமும்

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை

356, கலாநிதி கொல்வின் ஆர். டி சில்வா மாவத்தை யூனியன் பிளேஸ், கொழும்பு 02.

தொலைபேசி: 2 333 546 - 47 தொலைநகல்: 2 333 545

Website: www.dlb.lk



கேபிள் T.V. இயக்குநர்களுக்கான கலந்துரையாடல்

யாழ்.மாவட்ட கேபிள் T.V. இயக்குநர்களுக்கான அவசர கலந்துரையாடல் நடைபெறவுள்ளது. அனைத்து கேபிள் T.V. இயக்குநர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

காலம்: 31.10.2010 ஞாயிற்றுக்கிழமை

நேரம்: முற்பகல் 11 மணி

இடம்: யாழ்.தொழில்நுட்ப நிறுவனம் (JTI)

இல.45, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

T.P.: 0777710785, 0777917790


# ஓராண்டு நினைவலைகள்

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 05 ★ 02 ★ 1950 | 09 ★ 11 ★ 2009 |



## அமரர் ஐயாத்துரை பாலரத்தினம்

எங்கள் அப்பாவே!

ஆண்டு ஒன்று ஆனது அப்பாவே! ஓராண்டு என்ன ஓராயிரம் ஆண்டுகளானாலும் மாறாது உங்களின் நினைவுகள். உங்களுக்காக ஏங்கும் உள்ளங்கள் எம் மூச்சில் கலந்து நிற்கின்றது. ஆறாத் துயரில் நீள நினைவுகளை நெஞ்சினிலே பதித்து சென்றுவிட்டீர்களே! ஆண்டு ஒன்று கழிந்தாலும் ஆறுமோ எங்கள் மனங்கள். நீண்டதோர் நீங்கா நினைவுகளுடன் உங்கள் ஆவி பிரிந்ததே. விரைந்து நீங்கள் எங்களைப் பிரிந்து எங்கு சென்றீர்கள். மாண்டு போனீர்கள் என்று எண்ணவேயில்லை. எங்கள் மனைகளிலும் மனங்களிலும் நிறைந்து நிற்கின்றீர்கள். எம்மைவிட்டு நீங்கள் சென்றது ஓர் ஆண்டல்ல எத்தனை ஆண்டுகள் ஆனாலும் உங்கள் நினைவுகள் எங்களுடன் கூடவே இருக்கும். நீங்கள் பாதி வயதினிலே நோயுற்றீர்களே! நாடு கடந்து சென்ற எங்களை நித்தம் நித்தம் நினைத்து வேதனை அடைந்தீர்களே! பாசமாய் பெற்றெடுத்த அருமை மகளை நினைத்து நினைத்து வாடினீர்களே! நீங்கள் என்றென்றும் நிழலாகி நிற்கிறீர்கள் எங்கள் மனங்களிலே. மறுபிறவி ஒன்று உண்டென்றால் எங்களிடமே வந்து சேருங்கள் அப்பா! என்றென்றும் உங்கள் ஆத்மா சாந்தியடைய கடவுளிடம் வேண்டுகின்றோம்.

என்றென்றும் நெஞ்சங்களில் நினைவுடன்
மனைவி, பிள்ளைகள், மருமக்கள்.

இல.10, 2ஆம் ஒழுங்கை,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம். (105337)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜப்பான் தூதரின் கார் மீது பாகிஸ்தானில் துப்பாக்கிசூடு



கராச்சி,ஒக்.30

பாகிஸ்தானிலுள்ள கராச்சி நகரில் தீவிரவாதிகள் அட்டூழியம் அதிகரித்து வருகிறது. இவர்கள் வெளிநாட்டினரைத் தாக்கி அவர்களிடமிருந்து பணத்தைக் கொள்ளையடித்து வருகின்றனர்.

வியாழக்கிழமை ஜப்பான் தூதரக அதிகாரியின் கார் கராச்சியில் சென்றுகொண்டிருந்தது. அப்போது அந்தக் காரை மோட்டார் சைக்கிளில் மர்ம நபர்கள் பின் தொடர்ந்து வந்தனர். பின்னர் கார் மீது துப்பாக்கியால் சுட்டனர்.

இதில், காரிலிருந்த 2 ஊழியர்கள் காயமடைந்தனர். இதனால் அங்கு பதற்றமும் பரபரப்பும் ஏற்பட்டன. இதைத் தொடர்ந்து பொலிஸார் அங்கு விரைந்து சென்று காயமடைந்தவர்களை மீட்டு வைத்தியசாலையில் சேர்த்தனர்.

இதற்கிடையே பொலிஸாரைக் கண்டதும் காரில் துப்பாக்கியால் சுட்டவர்கள் தப்பி ஓடிவிட்டனர். துப்பாக்கிச் சூடு நடந்த போது காரில் ஜப்பான் தூதர் இல்லை.

இவர்கள் வங்கியில் பணம் எடுத்துக் கொண்டு வந்ததைப் பார்த்த மர்ம மனிதர்கள் இதைக் கொள்ளையடிக்கும் நோக்கத்தில் கார் மீது துப்பாக்கியால் சுட்டனர் என பொலிஸ் அதிகாரி ஜாவீத் அக்பர் ரியாஷ் தெரிவித்துள்ளார். காயமடைந்தவர்களின் உயிருக்கு ஆபத்து எதுவும் இல்லை என்றும் அவர் கூறினார்.

இந்தோனேசியாவில் ஆழிப்பேரலை விபரீதம்

# இரண்டு நாள்களாக மரத்தில் தொங்கிய ஒன்றரை வயதுக் குழந்தை உயிருடன் மீட்பு

ஜகர்த்தா, ஒக். 30

இந்தோனேசியாவில் ஆழிப்பேரலையால் தூக்கி வீசப்பட்ட ஒன்றரை வயது குழந்தையொன்று இரு நாள்களுக்குப் பின்னர் மரமொன்றிலிருந்து உயிருடன் மீட்கப்பட்டது.

இந்தோனேசியாவிலுள்ள மெந்தாவி தீவில் கடந்த திங்கட்கிழமை பூகம்பம் ஏற்பட்டு ஆழிப்பேரலை தாக்கியது. இதில் அந்தத் தீவிலுள்ள ஏராளமான கிராமங்கள் அழிந்தன.

இராட்சத அலைகளில் சிக்கி ஏராளமானோர் உயிரிழந்தனர். மரண எண்ணிக்கை 394 ஆக உயர்ந்துள்ளது. இன்னும் 300 பேரைக் காணவில்லை.

அவர்களில் 3இல் 2 பங்கினர் பலியாகி இருக்கக்கூடும் என்று கூறப்படுகிறது. எனவே, மரண எண்ணிக்கை 600ஐ தாண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது என மீட்புப் படை அதிகாரி ஏத்எட்வர்டு கூறினார்.

ஆழிப்பேரலை பாதித்த பகுதிகளில் தொடர்ந்து மீட்புப் பணிகள் நடந்து வருகின்றன. இப்போதும் சிலர் உயிருடன் மீட்கப்பட்டு வருகின்றனர்.

ஒன்றரை வயது குழந்தை ஒன்று ஆழிப்பேரலையால் தூக்கி வீசப்பட்டு 2 நாட்களாக மரத்தின் உச்சியில் கிடந்தது. உயிருடனிருந்த அந்தக் குழந்தை மரக்கிளைகளைப் பிடித்தபடி அழுது கொண்டிருந்தது. அந்த குழந்தையைப் பத்திரமாக மீட்டனர்.

அதேபோல 10 வயது சிறுவன் ஒருவனும் மரக்கிளைகளைப் பிடித்தபடி கிடந்தான். அவனையும் மீட்டனர். ஆனால், அவனது தாய், தந்தை இருவருமே ஆழிப்பேரலைக்கு பலியாகிவிட்டனர்.

ஆழிப்பேரலையில் சிக்கியவர்கள் சிலரின் உடல்கள் கால் வேறு, கை வேறாகச் சிதறின. அவை ஆங்காங்கே மரத்தில் தொங்கியபடி இருந்தன. பல உடல்கள் மண்ணுக்குள் புதைந்து கிடக்கின்றன. அவற்றைத் தோண்டி எடுத்து வருகின்றனர்.

ஆழிப்பேரலையில் வடக்கு பெகாய் என்ற இடம் மிகவும் பாதிக்கப்பட்டிருந்தது. அந்த ஊரைச் சேர்ந்த சந்திரா என்ற பெண் கூறும்போது, பூகம்பம் ஏற்பட்டதும் நாங்கள் அச்சத்துடன் இருந்தோம். அடுத்த 10 நிமிடங்களுக்குப் பின்னர் வீட்டுக்கு வெளியே பெரியளவில் வெடிச்சத்தம் போல கேட்டது. அடுத்த விநாடிகளில் ஆழிப் பேரலை தாக்கியது என்றார்.

மீட்கப்பட்ட சடலங்கள் கூட்டம், கூட்டமாக ஒரே இடத்தில் அடக்கம் செய்யப்பட்டு வருகின்றன. சதேகங் என்ற இடத்தில் 98 பேரின் சடலங்கள் ஒரே இடத்தில் அடக்கம் செய்யப்பட்டுள்ளன.

பாதிக்கப்பட்ட பகுதிக்கு நிவாரணப் பொருட்களை ஏற்றிச் சென்ற கப்பல் மெந்தாவியை சென்றடைந்துள்ளது. அங்கிருந்து நிவாரணப் பொருட்கள் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன.

ஆழிப்பேரலையில் 468 வீடுகள் முற்றிலும் இடிந்துவிட்டன. அவர்களுக்குத் தற்காலிக கூடாரங்கள் அமைத்துக் கொடுத்துள்ளனர்.

# மியான்மர் எதிர்க்கட்சித் தலைவி சூகி தேர்தலுக்குப் பின்னர் விடுதலையாவார்

## வெளியுறவுத்துறை அமைச்சர் தெரிவிப்பு

ஹனோஸ்,ஒக்.30

20ஆண்டுகளாக வீட்டுக்காவலில் வைக்கப்பட்டிருக்கும் எதிர்க்கட்சித் தலைவி ஆங் சாங் சூகி தேர்தலுக்குப் பின்னர் விடுதலை செய்யப்படுவார் என மியான்மர் வெளியுறவுத்துறை அமைச்சர் நியான் வின் தெரிவித்துள்ளார்.

மியான்மரில் இராணுவ ஆட்சி நீடித்து வருகிறது. 20 ஆண்டுகளுக்கு முன்னர் இதை எதிர்த்துப் போராட்டம் நடத்தியமைக்காக கைதுசெய்யப்பட்ட எதிர்க்கட்சித் தலைவி ஆங் சாங் சூகி தொடர்ந்து வீட்டுச் சிறையில் அடைக்கப்பட்டு காவலில் வைக்கப்பட்டு வருகிறார். மேலும் அங்கு நாடாளுமன்றத்துக்கு ஜனநாயக முறையில் தேர்தலும் நடைபெறவில்லை.

இந்நிலையில் 20 ஆண்டுகளுக்குப் பின்னர் அங்கு எதிர்வரும் நவம்பர் 7ஆம் திகதி நாடாளுமன்றத் தேர்தல் நடைபெற உள்ளது. இதற்கிடையே வீட்டுக் காவலில் இருக்கும் எதிர்க்கட்சித் தலைவியின் தண்டனை காலமும் எதிர்வரும் நவம்பர் 13ஆம் திகதியுடன் முடிவடைகிறது.

எனவே தேர்தலுக்குப் பின்னர் அவரை விடுதலை செய்யவேண்டும் என தென்கிழக்கு ஆசிய நாடுகளின் கூட்டமைப்பு (ஆசியான்) கோரிக்கை விடுத்துள்ளது.

இதை மியான்மரின் இராணுவ ஆட்சி ஏற்றுக் கொண்டது. தேர்தலுக்குப் பின்னர் அவர் விடுதலை செய்யப்படுவார் என மியான் மர் வெளியுறவுத்துறை அமைச்சர் நியான் விண் தெரிவித்துள்ளார்.

இந்த தகவலை ஆசியான் அமைப்பு நாடுகளின் செயலாளர் நாயகம் சுரின் பிட்சுவான் அறிவித்துள்ளார். அவரை மீண்டும் கைது செய்து வீட்டு காவலில் வைக்க காரணம் எதுவும் இல்லை. என்ன நடக்கப் போகிறது என்பதை காத்திருந்துதான் பார்க்க வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பிலிப்பைன்ஸ் வெளியுறவு செயலாளர் அல்பெர்போ ரொமுலோ கூறும்போது, நியான்விண் வாக்குறுதியில் எனக்கு திருப்தியில்லை. எதிர்க்கட்சித் தலைவி விடுதலை செய்யப்படுவார் என்று அவர் தெரிவித்துள்ளார். ஆனால், அவர் மீது புதிய குற்றச்சாட்டுகள் பதிவு செய்யப்படுமா? என்பது பின்னர் தெரியவரும் எனத் தெரிவித்துள்ளார்.

# ஆஸ்திரேலிய பாடசாலையில் இந்திய சிறுவன் மீது தாக்குதல்

மெல்போர்ன்,ஒக்.30

ஆஸ்திரேலியாவில் மெல்போர்ன் நகர பாடசாலையில் படித்துவரும் 12 வயது இந்திய சிறுவன், இனவெறியுடன் தாக்கப்பட்டான்.

அவனுடன் படித்து வரும் 2 உள்ளூர் மாணவர்கள், அவனை காரணமில்லாமல் திடீரென தாக்கினர். அவனது கண்ணில் குத்தினர். இதனால் அவனது கண்ணில் ஏற்பட்ட பாதிப்பை சரிசெய்ய கண் அறுவை சிகிச்சை செய்யப்பட்டது.

அவனுக்கு கண்ணில் நிரந்தர பாதிப்பு ஏற்படுமோ என்று பெற்றோர் அச்சம் அடைந்துள்ளனர்.இது இனவெறி தாக்குதல்தான் என்று பாடசாலை அதிபர் பிரோன்வின் ஹாமில்டன் ஒப்புக்கொண்டுள்ளார்.

தாக்குதலில் ஈடுபட்ட 2 மாணவர்களும் இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளனர்.

# கட்டுப்பாட்டுக் கணனியில் கோளாறு அமெ. ஏவுகணைகள் தொடர்பு அறுந்தது

வாஷிங்ரன்,ஒக்.30

அமெரிக்காவில், வியோமிங்கிலுள்ள வாரன் விமானப்படைத் தளத்தில் 50 அணு ஏவுகணைகள் பராமரிக்கப்பட்டு வருகின்றன. இவை, கண்டம் விட்டு கண்டம் சென்று தாக்கக்கூடியவை. இந்த ஏவுகணைகளின் செயல்பாடுகள், அங்குள்ள ஏவுகணை செலுத்தும் கட்டுப்பாட்டு மைய கணினிகளின் கட்டுப்பாட்டில் வைக்கப்பட்டிருந்தன.

இந்நிலையில், அவற்றில் ஒரு கணினியில் திடீரென தொழில்நுட்பக் கோளாறு ஏற்பட்டது. இதனால் 50 ஏவுகணைகளுடனான தொடர்பும் அறுந்தது. பதறிப்போன பொறியியலாளர்கள் போராடி நிலைமையைச் சரிசெய்தனர். அதுவரை, 45 நிமிட நேரம், 50 அணு ஏவுகணைகளும் கட்டுப்பாட்டை இழந்த நிலையிலேயே இருந் தன.

# இத்தாலி பிரதமர் சில்வியோ மீது புதிய பாலியல் முறைப்பாடு

ரோம், ஒக்.30

இத்தாலி பிரதமர் சில்வியோ பெர்லஸ்கோனி (வயது -74) மீது புதிதாக பாலியல் முறைப்பாடு எழுந்துள்ளது. 18 வயது இளம் பெண்ணுடன் பாலியல் உறவு வைத்திருந்தார் என அவர் மீது கடந்த ஆண்டு முறைப்பாடு வெளியானது.

இதைத்தொடர்ந்து அவரை விவாகரத்து செய்வதாக மனைவி வெரோனிகா லாரியோ அறிவித்தார். அதே ஆண்டு ஜூன் மாதத்தில் பட்ரிஷிபா டிஅட்டாரியோ என்ற பெண்ணும் பெர்லஸ்கோனி மீது பாலியல் முறைப்பாடு செய்துள்ளார்.

அடுத்தடுத்து இதுபோன்ற முறைப்பாடுகள் வெளியானதால் பரபரப்பு ஏற்பட்டது. இந்த நிலையில், மீண்டும் அவர் மீது புதிதாக ஒரு பாலியல் முறைப்பாடு முளைத்துள்ளது.

மொராக்கோவைச் சேர்ந்த 17 வயது பெண்ணுடன் இவர் பாலியல் உறவு வைத்திருந்தார் எனத் தகவல் வெளியாகியுள்ளது.

ஒரு தனியார் தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டியில் பிரதமர் பெர்லஸ் கோனியின் மிக நெருங்கிய நண்பர் எமிரியோ பெடி என்பவர் இதனைத் தெரிவித் துள்ளார்.

சமீபத்தில் அர்கோர் நகரிலுள்ள தனது வீட்டில் பெர்லஸ்கோனி ஒரு விருந்து வைத்துள்ளார். அதில் அந்த மொராக்கோ பெண் கலந்துகொண்டார். அவருடன் 20 பெண்கள் பங்கேற்றனர். 2 ஆண்கள் மட்டுமே இருந்தனர்.

தன்னுடன் பாலியல் உறவு கொண்ட அந்தப் பெண்ணுக்கு பெர்லஸ்கோனி பணத்தை அன்பளிப்பாக அளித்துள்ளார் என்றும் எமிலியோபெடி தெரிவித்துள்ளார். ஆனால், அப்பெண்ணின் பெயரை அவர் வெளியிடவில்லை. மாறாக ரூபி. ஆர் என்ற புனைப்பெயருடன் தெரிவித் துள்ளார்.

இம்முறைப்பாட்டை ரூபி.ஆர் என்ற பெண் ஒப்புக்கொண்டுள்ளார். பெப்ரவரி 14ஆம் திகதி பிரதமர் பெர்லஸ் கோனி நடத்திய காதலர் தின விருந்து நிகழ்ச்சியில் பெடியுடன் கலந்துகொண்டேன். அதன் பின்னர் 2 தடவைகள் கலந்துகொண்டேன் என்று கூறியுள்ளார்.

ஆனால் முறைப்பாட்டை பிரதமர் பெர்லஸ் கோனியின் சட்டத்தரணிகள் மறுத்துள்ளனர். இது [illegible] குற்றச்சாட்டு [illegible]



ஈரான் வந்திருந்த பொலிவியா ஜனாதிபதி ஈவோ மார்லஸ், ஈரானிய ஜனாதிபதி [illegible]மதிநிஜாத் ஆகியோர் ஓய்வு நேரத்தில் தலைநகர் தெஹ்ரானிலுள்ள [illegible] கால்பந்து விளையாட ஆயத்தமாகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய விளையாட்டுவிழா கண்டியில் இன்று ஆரம்பம்; யாழ்.மாவட்ட வீர, வீராங்கனைகளும் பங்கேற்பு

யாழ்ப்பாணம், ஒக். 30

இலங்கை விளையாட்டு அமைச்சின் ஏற்பாட்டிலான 36 ஆவது தேசிய விளையாட்டு விழா இன்று பிற்பகல் 3.30 மணிக்கு கண்டி போகம்பறை மைதானத்தில் கோலாகலமாக ஆரம்பமாகின்றது.

இந்த விளையாட்டு விழாவில் பங்கேற்பதற்காக யாழ். மாவட்ட வீர,வீராங்கனைகள் நேற்று புறப்பட்டனர். வடக்கு மாகாணத்தில் இருந்து பங்கேற்பவர்களில் கூடுதலானவர்கள் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்தவர்களாவர்.

ஆரம்ப நிகழ்வுகள் விளையாட்டுத்துறை அமைச்சர் சீ.பி.இரத்தினநாயக்கா தலைமையில் இடம்பெறவுள்ளன.

பிரதம மந்திரி டி.எம். ஜெயரத்னா முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டு நிகழ்வுகளை ஆரம்பித்து வைக்கவுள்ளார்.

இன்றைய ஆரம்ப நிகழ்வுகளைத் தொடர்ந்து அனைத்துப் போட்டிகளும் இன்று முதல் மூன்று தினங்கள் நடைபெறவுள்ளன.

வடக்கு மாகாண அணியில் இடம்பெற்றுள்ள யாழ். மாவட்ட அணி வீர, வீராங்கனைகள் இரண்டு பஸ்களில் நேற்றுக் காலை யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் இருந்து புறப்பட்டுச் சென்றுள்ளார்கள்.

யாழ். மாவட்டத்தில் இருந்து செல்லும் அணிக்கு யாழ். மாவட்ட விளையாட்டு உத்தியோத்தர் திருமதி ஜே.எப்.ரூபசிங்கமும் ஏனைய விளையாட்டு அலுவலர்களும் பொறுப்பாகச் சென்றுள்ளனர்.

வடமாகாண அணியில் அதிக எண்ணிக்கையான வீர, வீராங்கனைகளாக யாழ். மாவட்ட வீர, வீராங்கனைகள் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (ஐ-86)



யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் மாவட்டங்களிற்கிடையிலான கராத்தே சுற்றுப்போட்டி இலங்கை கராத்தே சம்மேளனத்தால் நடத்தப்பட்டது.

இந்தப் போட்டியில் யாழ்ப்பாணத்துக்கு இரண்டு தங்கப் பதக்கங்களும், இரண்டுவெள்ளிப்பதக்கங்களும், ஒரு வெண்கலப்பதக்கமும் கிடைத் துள்ளன.

இப்போட்டியில் வெற்றிபெற்ற யாழ்ப்பாண மாவட்டத்தைச் சேர்ந்த வீரர்களின் விவரம் வருமாறு:

இடமிருந்து வலமாக முதலாம் இடம்- விஜயகணேஸ் (தங்கப் பதக்கம்), இரண்டாம் இடம் - உதயசங்கர் (வெள்ளிப்பதக்கம்), இரண்டாம்இடம்- தயா நிதி (வெள்ளிப்பதக்கம்), மூன்றாம் இடம்- விமலேஸ்வரன் (வெண்கலப் பதக்கம்), முதலாம் இடம்- விஜயேந்திரன் (தங்கப்பதக்கம்).

## போட்டியை அடுத்து மாணவரிடையே கைகலப்பு

வலி.வடக்கு, ஒக். 30

கோப்பாய் கல்விக் கோட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியைத் தொடர்ந்து இரு பாடசாலை மாணவர்களுக்கு இடையே கைகலப்பு நடைபெற்றுள்ளது.

இறுதிப் போட்டியில் வெற்றி பெற்ற பாடாலை மாணவர்களுக்கும் தோல்வி அடைந்த பாடசாலையின் மாணவர்களுக்கும் இடையே வீதியில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் மாணவர்கள் ஒருவரையொருவர் மோதிக்கொண்டனர்.

குறிப்பிட்ட இடத்திற்கு விரைந்த கோப்பாய் பொலிஸார் விடயத்தில் தலையிட்டு மாணவர்களை எச்சரித்து ஆசிரியர்கள் முன்னிலையில் விடுவித்துள்ளார்கள். (ஐ-86 )




## விளையாட்டு மைதானத்துக்கு காணி அன்பளிப்பு

தென்மராட்சி, ஒக். 30

மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலய வெளிநாடு, உள்நாடு பழையமாணவர் சங்கத்தின் அனுசரணையுடன் வித்தியாலய விளையாட்டு மைதானத்திற்கு ஏழரைப் பரப்புக் காணி கொள்வனவு செய்யப்பட்டு வித்தியாலய நிர்வாகத்திடம் அண்மையில் கையளிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் மேலும் ஒன்பது பரப்பு காணி கொள்வனவு செய்து வழங்க பழைய மாணவர் சங்கம் ஏற்பாடு செய்து வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-207)

## சைக்கிள்,மரதன் போட்டிகள்

யாழ்ப்பாணம், ஒக். 30

கிறின்பீல்ட் சனசமூக நிலையத்தின் 52 ஆவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு அழைக்கப்பட்ட கழகங்களுக்கு இடையிலான மரதன் ஓட்டப் போட்டி இன்று சனிக்கிழமை காலை 6 மணியளவில் சனசமூக நிலைய முன்றலில் இடம்பெறவுள்ளது.

இதேவேளை- சைக்கிள் ஓட்டப் போட்டி நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 6 மணியளவில் சனசமூக நிலைய முன்றலில் ஆரம்பமாகவுள்ளது எனவும் தெரிவித்துள்ளார். (ஐ-23)

## கடுமையான போராட்டத்தின் பின்னர் ஹென்றியரசர் கோட்டச் சம்பியனானது

வலி.வடக்கு, ஒக். 30

சண்டிலிப்பாய் கல்விக் கோட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடைபெற்ற 13 வயதுப் பிரிவினருக்கான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் பலத்த போட்டியின் பின்னர் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி கோட்ட மட்டச் சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டது.

மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் மானிப்பாய் இந்துக் கல்லூரியும், இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரியும் மோதிக் கொண்டன.

போட்டி ஆரம்பமாகி முடிவடையும் வரை இரு அணிகளும் மைதானத்தை தமது விளையாட்டினால் உற்சாகப்படுத்தி வைத்து இருந்தார்கள்.

இரு அணிகளுக்கும் கோல்கள் பெறும் வாய்ப்புகள் கிடைக்கப் பெற்ற போதிலும் உரியமுறையில் பயன்படுத்தத் தவறி ஆதரவாளர்களின் சினத்திற்கு இரு அணிகளும் உள்ளாகின.

புனித ஹென்றியரசர் கல்லூரி தனக்குக் கிடைத்த பந்துகளை கோல் கம்பத்தினுள் அடித்த போதிலும் மானிப்பாய் இந்துக் கல்லூரி கோல்காப்பாளர் மிகவும் கெட்டித்தனமாகப் பந்தைப் பிடித்து எதிரணியினர் கோல் பெறும் வாய்ப்பை தடுத்து நிறுத்தி பார்வையாளர்களின் கரகோஷத்தைப் பெற்றுக் கொண்டார்.

ஆட்டம் இரு அணிகளும் கோல்கள் பெறாத நிலையில் சமநிலையில் முடிவடைந்தது. வெற்றி தோல்வியைத் தீர்மானிக்க வழங்கிய சமநிலை தவிர்ப்பு உதைகளைத் தொடர்ந்து ஹென்றியரசர் கல்லூரி 3:2 என்ற கோல் கணக்கில் மானிப்பாய் இந்துக் கல்லூரியை வெற்றிபெற்று கோட்டச் சம்பியனாகத் தெரிவு செய்யப் பட்டது. (ஐ-86)

## மெலிஞ்சிமுனை உதைபந்தாட்டத்தில் அண்ணா வி.க. கிண்ணம் சுவீகரித்தது

ஊர்காவற்றுறை, ஒக். 30

ஊர்காவற்றுறை மெலிஞ்சிமுனை இருதயராஜா விளையாட்டுக் கழகம் தனது மைதானத்தில் நடத்திய உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் ஊர்காவற்றுறை அண்ணா முன்னேற்ற விளையாட்டுக் கழகம் சம்பியனானது.

இறுதியாட்டத்தில் ஊர்காவற்றுறை அண்ணா முன்னேற்ற விளையாட்டுக்கழகமும், மெலிஞ்சிமுனை இருதயராஜா விளையாட்டுக் கழகமும் மோதிக்கொண்டன.

ஆட்டம் ஆரம்பம் தொடக்கம் இறுதிவரை இரு அணி வீரர்களும் விறுவிறுப்புடனும் உற்சாகத்துடனும் விளையாடி தமது திறமைகளை வெளிப்படுத்தினர்.

முதல் பாதி ஆட்டத்தில் ஊர்காவற்றுறை அண்ணா முன்னேற்ற விளையாட்டுக்கழகம் ஒரு கோல் போட்டு 1:0 என்ற கணக்கில் முன்னிலையில் நின்றது.

இரண்டாவது பாதி ஆட்டம் ஆரம்பமாகியதும் மெலிஞ்சிமுனை இருதயராஜா விளையாட்டுக்கழகம் பல முயற்சிகளையும் பல யுத்திகளையும் மேற்கொண்டும் பலனளிக்கவில்லை. பல சந்தர்ப்பங்களையும் தவறவிட ஊர்காவற்றுறை அண்ணா முன்னேற்ற வி.க. தமக்குக் கிடைத்த வாய்ப்பைப் பயன்படுத்தி மீண்டும் ஒரு கோல் போட 2:0 என்ற கோல் கணக்கில்ஊர்காவற்றுறைஅண்ணா முன்னேற்ற விளையாட்டுக் கழகம் சம்பியனானது . (ஐ-325)

## சைக்கிள் ஓட்டம்

யாழ்ப்பாணம், ஒக். 30

கொக்குவில் மேற்கு ஸ்ரீ வராகி சனசமூக நிலையத்தின் வெள்ளி விழாவையொட்டி உள்ளூர் வீரர்களுக்கு இடையேயான சைக்கிள் ஓட்டப் போட்டி இன்று சனிக்கிழமை காலை 6 மணியளவில் சனசமூக நிலைய முன்றலில் ஆரம்பமாகவுள்ளது.

இதில் 50 இற்கும் மேற்பட்ட வீரர்கள் பங்கு கொள்ளவுள்ளனர் எனப் போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். (த-23)



நல்லூர் கல்விக் கோட்டப்பாடசாலை அணிகளுக்கு இடையே நடைபெற்ற 18 வயதுப் பிரிவினருக்கான இறுதிப் போட்டியில் கொக்குவில் இந்துக் கல்லூரியும் அரியாலை கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயமும் மோதிக் கொள்வதைப் படங்களில் காணலாம். (படங்கள்: நேசன்)

## இன்றைய ஆட்டம்

யாழ்ப்பாணம், ஒக். 30

யாழ். லீக்கின் அனுசரணையுடன் புத்தூர் எவறெஸ்ட் விளையாட்டுக்கழகம் நடத்தும் - 11 பேர் பங்கு கொள்ளும் விலகல் முறையிலான- உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று சனிக் கிழமை மாலை 4 மணிக்கு கழக மைதானத்தில்

ஆட்டத்தில் சக்கோட்டை சென்.சேவியர் வி.கவும் மணற்காடு சென்.அன்ரனீஸ் வி.கவும் மோதுகின்றன. (ஐ-23)

## வேலணையில் வலைப்பந்தாட்டம்; காவலூர் றேஞ்சறஸ் சம்பியனானது

ஊர்காவற்றுறை, ஒக். 30

வேலணை ஐயனார் விளையாட்டுக்கழகம் நடத்திய வலைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் ஊர்காவற்றுறை றேஞ்சறஸ் விளையாட்டுக் கழகம் சம்பியனானது.

வேலணை ஐயனார் வி.கவின் மைதானத்தில் நடந்த இந்த இறுதியாட்டத்தில் ஊர்காவற்றுறை றேஞ்சறஸ் வி.கவும் வேலணை ஐயனார் வி.கவும் மோதிக்கொண்டன.

இரு அணிகளும் மிகவும் திறமையாக விளையாடி தமது அதிரடி ஆட்டத்தை வெளிப்படுத்தினர். முதல் பாதி ஆட்டத்தில் ஊர்காவற்றுறை றேஞ்சறஸ் அணி போட்டியை தன் பக்கம் திருப்பி 3:1 என்ற புள்ளிக்கணக்கில் முன்னிலை வகித்தது.

இடைவேளையின் பின்னர் இரண்டாவது பாதி ஆட்டம் ஆரம்பமாகியதும் வேலணை ஐயனார் விளையாட்டுக்கழகம் பல முயற்சிகளை மேற்கொண்டு 2 தடவைகள் பந்தை வலைக்குள் வீழ்த்தி அசத்தியது.

ஊர்காவற்றுறை றேஞ்சறஸ் அணி அடுத்தடுத்து 5 தடவைகள் பந்தை வலைக்குள் வீழ்த்தியது.

இறுதியில் 5:2 என்ற புள்ளிக் கணக்கில் வேலணை ஐயனார் விளையாட்டுக்கழகத்தை தோற்கடித்து ஊர்காவற்றுறை றேஞ்சறஸ் விளையாட்டுக்கழகம் சம்பியனானது. (ஐ-325)

## கே.ஸி.ஸி.ஸி. கிண்ணத்துடுப்பாட்டம்; ஸ்ரான்லி 5 விக்கெட்டுக்களால் வெற்றி

வலி.வடக்கு, ஒக். 30

கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக்கழகம் கே.ஸி.ஸி.ஸி. வெற்றிக் கிண்ணத்திற்காக நடத்திவரும் 30 ஓவர்களுக்கு மட்டுப்படுத்திய கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் ஆட்டம் ஒன்றில் அரியாலை ஸ்ரான்லி விளையாட்டுக்கழகம் 5 விக்கெட்டுக்களினால் வெற்றிபெற்றது.

கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இந்த ஆட்டத்தில் கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக் கழகமும் ஸ்ரான்லி விளையாட்டுக் கழகமும் மோதிக்கொண்டன.

முதலில் துடுப்பெடுத்தாடிய கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக்கழகம் 27 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 154 ஓட்டங்களைப் பெற்றது.

தாபன் 34, சசிகரன் 29, ஆதித்தன் 19, நிலோஜன் 13, கிருபவன் 12 ஓட்டங்களைப் பெற்றதுடன் உதிரிகளாக 15 ஓட்டங்களும் பெறப்பட்டன.

ஸ்ரான்லி விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த எடின்குமார், நிரோஜன், சுரேஷ் முறையே 14, 19,26 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் ரஜீப், சுதர்சன் முறையே 16,13 ஓட்டங்களைக் கொடுத்து ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார்கள்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய ஸ்ரான்லி விளையாட்டுக் கழகம் 22.5 ஓவர்களில் 5 விக்கெட்டுக்களை இழந்து 155 ஓட்டங்களைப் பெற்று வெற்றி இலக்கை அடைந்தது.

சுதர்சன் ஆட்டமிழக்காது 5 நான்குகளுடன் 50, கிருபா 5 நான்குகளுடன் 42, இனோஜன் 33 ஓட்டங்களைப் பெற்றதுடன் உதிரிகளாக 20 ஓட்டங்களும் பெறப்பட்டன.

கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த சுஜி 30 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும் றெபேசன் 35 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினார்கள். (ஐ-86)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிறிஸ்டனை பயிற்சியாளராக்க தென்னாபிரிக்கா முயற்சி; இந்தியாவிற்கான பணியை அவர் தொடர சச்சின் விருப்பம்

ஜோகனஸ்பேர்க், ஒக். 30

இந்தியக் கிரிக்கெட் அணியின் பயிற்சியாளராக இருந்துவரும் தென்னாபிரிக்க அணியின் முன்னாள் துடுப்பாட்ட வீரரான கேரி கிறிஸ்டனை தமது அணியின் பயிற்சியாளராக்க தென்னாபிரிக்கக் கிரிக்கெட் சபை முயன்றுவருகிறது.

எனினும், இந்தியாவுக்கான அவரது பணி தொடரவேண்டும் என்று சச்சின் விருப்பம் தெரிவித்துள்ளார்.

கிறிஸ்டனின் பதவிக் காலம் அடுத்த ஆண்டு உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடருடன் முடிவடைகிறது. அதன் பிறகு அவரைத் தங்கள் அணியின் பயிற்சியாளராக்க தென்னாபிரிக்கக் கிரிக்கெட் சபை விரும்புகிறது.

தென்னாபிரிக்க அணியின் தற்போதைய பயிற்சியாளராக இருக்கும் காரி வான் ஸில், உலகக் கிண்ணத் தொடருடன் ஓய்வு பெறவுள்ளார்.

இந்நிலையில், உலகக் கிண்ணத் தொடர் முடிந்த பிறகு பயிற்சியாளருக்கான போட்டியில், தென்னாபிரிக்கக் கிரிக்கெட் சபையின் பார்வையில் கிர்ஸ்டன்தான் முதலிடத்தில் உள்ளார்.

இருப்பினும், டெண்டுல்கர், டோனி, கம்பீர் போன்ற இந்திய அணியின் முன்னணி வீரர்கள், கிர்ஸ்டனே இந்திய அணியின் பயிற்சியாளராகத் தொடர்ந்து இருக்க வேண்டும் என்று விரும்புகிறார்கள்.



இதன்காரணமாக கிரிஸ்டனின் ஒப்பந்தத்தை நீடிக்கும்படி இந்திய கிரிக்கெட் சபையை அவர்கள் வலியுறுத்துவார்கள் என்று எதிர்பார்க்கப் படுகிறது.

# ஒக்டோபஸின் மறைவு மரடோனாவுக்கு மகிழ்ச்சி

பெர்லின், ஒக் 30

கடந்த உலகக் கிண்ணத் தொடரின்போது போட்டிகளின் முடிவுகளைத் துல்லியமாகக் கணிப்பிட்டு உலகம் முழுவதும் பிரபலமடைந்த ஒக்டோபஸ் போலின் இறப்பு உலகம் முழுவதும் சோக அலையை ஏற்படுத்திச் செல்ல, உதைபந்தாட்ட ஜாம்பவானான மரடோனா மகிழ்ச்சி தெரிவித்துள்ளார்.





'டுவிட்டர்' இணையத் தளத்தில் அவரது பெயரில் பதிவாகியுள்ள தகவலில், 'ஒக்டோபஸ் போல் மறைந்து விட்டது என்ற செய்தி மகிழ்ச்சியளிக்கிறது. உங்களது (ஜேர்மனி) தவறால் உலகக் கிண்ணத்தில் நாங்கள் தோற்றோம்.'' என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

உலகக் கிண்ண உதைபந்தாட்டத் தொடரின் காலிறுதியில் ஒக்டோபஸின் கணிப்புப் போலவே, ஜேர்மனியிடம் ஆர்ஜென்டீனா 0-4 என்ற கோல் கணக்கில் படுதோல்வியடைந்தது. இந்த மோசமான தோல்வியின் காரணமாக மரடோனா பயிற்சியாளர் பதவியை இழந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## சமநிலைக்குப் போராடுவோம்

இந்தியா டெஸ்ட்போட்டிகளில் அண்மைக் காலமாக சிறப்பான வெற்றிகளைப்பெற்றுள்ளது. ஆனால் நியூ சிலாந்து அணியோ அனுபவமற்ற வீரர்களுடன் தொடர்ச்சியான தோல்விகளுடன் இந்திய அணியுடன் மோதவுள்ளது. எனவே நவம்பரில் நடைபெறவுள்ள இந்திய அணிக்கெதிரான டெஸ்ட் தொடரை சமன் செய்தாலே போதும். அதற்காகப் போராடுவோம் என்று நியூசிலாந்து கிரிக்கெட் அணியின் பயிற்சியாளர் மார்க் கிரேட்பாட்ச் தெரிவித்துள்ளார்.

# ஐ.பி.எல். தொடர் போலவே ஆஸியிலும் 'இருபது-20'

இந்தியாவில் நடத்தப்பட்டுவரும் ஐ.பி.எல். கிரிக்கெட் தொடர்போல, ஆஸ்திரேலியாவிலும் 'இருபது-20' கிரிக்கெட் போட்டிகளை நடத்தவுள்ளனர். 2012ஆம் ஆண்டு ஜனவரியில் இந்தப் போட்டிகள் முதல் முதலில் நடக்கவிருக்கின்றன. இதற்காக அங்குள்ள அணிகளை ஏலத்தில் விற்றுள்ளனர். அந்த அணிகளை இந்திய தொழிலதிபர்கள் பலர் வாங்க முன் வந்துள்ளனர்.

ஆனால், வெளிநாட்டவர்கள் அணிகளை வாங்க அனுமதிக்கலாமா என்பது குறித்து ஆஸ்திரேலிய கிரிக்கெட் சபை இன்னும் முடிவு செய்யவில்லை.

எனினும், வெளிநாட்டவரையும் வாங்க அனுமதித்தால்தான் அதிக விலை போகும் என எதிர்பார்க்கின்றனர். எனவே, வெளி நாட்டவருக்கும் அனுமதி கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஆஸ்திரேலிய அணிகளின் விலை மிகக் குறைவாகக் காணப்படுகின்றன. 60 கோடி ரூபாவிலிருந்து 400 கோடி ரூபா வரையே விலைகள் நிர்ணயிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதேவேளை, வெளிநாட்டு வீரர்களையும் இந்த அணிகளுக்காகத் தெரிவுசெய்யவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

# முதலிடத்தைத் தக்கவைத்தார் வெஸ்னியாக்கி!

கட்டார் தலைநகர் டோகாவில் நடைபெற்றுவரும் சர்வதேச மகளிர் டென்னிஸ் போட்டித் தொரின் அரையிறுதிக்கு, டென்மார்க் வீராங்கனையான வெஸ்னியாக்கி முன்னேறியதோடு, தமது முதலிடத்தையும் உறுதி செய்துள்ளார்.

8 முன்னணி வீராங்கனைகள் பங்குபற்றும் டோகா டெனிஸ் தொடர் நடைபெற்றுவருகிறது.

8 வீராங்கனைகளும் இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொருவரும் தங்கள் பிரிவில் உள்ள மற்றவர்களுடன் 'லீக்' முறையில் ஒரு முறை மோத வேண்டும். லீக் முடிவில் ஒவ்வொரு பிரிவிலும் முதல் இரண்டு இடங்களைப் பிடிக்கும் வீராங்கனைகள் அரையிறுதிக்கு முன்னேறுவர்.

இதில் நேற்றுமுன்தினம் நடந்த ஆட்டம் ஒன்றில், இத்தாலி வீராங்கனையான பிரான்செஸ்கா சியாவோனை 3-6, 6-1, 6-1 என்ற செற் கணக்கில் வீழ்த்தி அரையிறுதிக்கு முன்னேறினார் வோஸ்னியாக்கி.

மற்றொரு ஆட்டத்தில் எலீனா டெமெண்டீவாவிடம் ஆஸ்திரேலிய வீராங்கனையான சமந்தா ஸ்டோசர் 6-4, 4-6, 6-7 என்ற செற் கணக்கில் தோல்வி தழுவினாலும் அரையிறுதிச் சுற்றுக்கு முன்னேறினார்.




## பாதுகாப்புப் பணியில் 1,500 பொலிஸார்!

இன்று ஆரம்பமாகும் தேசிய விளையாட்டு விழாவுக்கு, 1,500 இற்கும் மேற்பட்ட பொலிஸார் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

நேற்றுமுன்தினம் மாலை கண்டி மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில், விளையாட்டுத்துறைப் பணிப்பாளர் நாயகம் பீ.ஹத்துருசிங்க இதனைத் தெரிவித்தார்.

விளையாட்டு விழாவுக்கு வருகைதரும் விளையாட்டு வீரர்களின் பாதுகாப்பையும், பிரதம அதிதிகளின் பாதுகாப்பையும் உறுதிப்படுத்தும் வகையில் விசேட அதிரடிப் படையினர் கடமையில் ஈடுத்தப்படுவர் எனவும், இராணுவ - கடற்படையினரின் உதவிகள் தேவைப்பட்டால் பெற்றுக் கொள்ளப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# 'பிபா பல்லான் டி ஆர்' விருதுக்காக 23 வீரர்களின் பெயர்கள் பரிந்துரைப்பு

## ஜேர்மனி - ஸ்பெயின் வீரர்கள் ஆதிக்கம்

'பிபா பல்லான் டி ஆர்' விருதுக்கு 23 வீரர்களின் பெயர்கள் பரிந்துரைக்கப்பட்டுள்ளன. இந்த விருதுப் பட்டியலில் ஸ்பெயின் மற்றும் ஜேர்மனி வீரர்கள் ஆதிக்கம் செலுத்தியுள்ளனர்.

2009ஆம் ஆண்டு வரை தலைசிறந்த உதைபந்தாட்ட வீரர்களுக்கு வழங்கப்படும் பிரான்ஸ் உதைபந்தாட்ட இதழின் 'பல்லான் டி ஆர்' (சிறந்த ஐரோப்பிய உதைபந்தாட்ட வீரருக்கான விருது. அதை பத்திரிகையாளர்கள் தெரிவு செய்வார்கள்) மற்றும் 'பிபா' சிறந்த வீரருக்கான விருது ஆகியன தனித்தனியாக வழங்கப்பட்டு வந்தன.

ஆனால், இந்த ஆண்டு முதல் (2010 முதல்) இந்த இரு விருதுகளும் ஒருங்கிணைக்கப்பட்டு 'பிபா பல்லான் டி ஆர்' என்ற பெயரில் ஒரே விருதாக வழங்கப்பட உள்ளது.

இந்த ஆண்டுக்கான விருதுக்காக 23 வீரர்களின் பெயர்களை 'பிபா' பரிந்துரைத்துள்ளது.

இந்த விருதுப் பட்டியலில் ஸ்பெயின் மற்றும் ஜேர்மனி வீரர்களின் ஆதிக்கமே அதிகமாகக் காணப்படுகின்றன.

விருதுக்குப் பரிந்துரைக்கப்பட்ட வீரர்களின் விவரம் வருமாறு-

சேவி அலான்சோ (ஸ்பெயின்), டேனி ஏல்வ்ஸ் (பிரேஸில்), இகெர் கேசிலாஸ் (ஸ்பெயின்), கிறிஸ்டியானோ ரொனால்டோ (போர்த்துக்கல்), (நெதர்லாந்து) பாஸ்டியன் ஸ்வான்ஸ்டைஜிகர் (ஜேர்மனி), டேவிட் வில்லா (ஸ்பெயின்), சேவி (ஸ்பெயின்), கார்லஸ் புயால் (ஸ்பெயின்), ஆன்ட்ரஸ் இனியஸ்டா (ஸ்பெயின்), டீகோ போர்லன் (உருகுவே), (ஸ்பெயின்), அலெக்ஸ் பெர்குசன் (மான்செஸ்டர் யுனைடெட்), பெப் கார்டியாலோ (பார்சிலோனா), ஜக்ஹீம் லோவ் (ஜேர்மனி), ஜோஸ் மோரின்ஹோ (இன்டர்மிலான் மற்றும் ரியல்மாட்ரிட்), ஆஸ்கர் டபராஸ் (உருகுவே), லுயீஸ் வான் கால் (பேயர்ன்மியூனிச்), பெர்ட் வான் மார்வ்ஜிக் (நெதர்லாந்து), ஆர்சானே வெங்கர் (ஆர்சனல்).




திடையர் டிரோக்பா (ஐவரிகோஸ்ட்), சாமுவேல் ஈடோ (கெமரூன்), செஸ்க் பெப்ரிகாஸ் (ஸ்பெயின்), அசமா கியான் (கானா), ஜூலியோ சீசர் (பிரேஸில்), மிரஸ்லாவ் குளோஸ் (ஜேர்மனி), பிலிப் லாம் (ஜேர்மனி), மாய்க்கன் (பிரேஸில்), தோமஸ் முல்லர் (ஜேர்மனி), ஆர்ஜான் ரொபன் லயனல் மேசி (ஆர்ஜென்ரீனா), மெமிட் ஓசில் (ஜேர்மனி) வெஸ்லி ஸ்னேட்ஜிகர் (நெதர்லாந்து).

இது தவிர பயிற்சியாளர்கள் விருதுக்கான பட்டியலில் 10 பேர் இடம்பெற்றுள்ளனர். அவர்கள் விபரம் வருமாறு- கார்லோ அன்செலோட்டி (செல்சி), விசென்டே டெல் பாஸ்க்

மேலும் சிறந்த கோலுக்கான 'பிபா' புஸ்காஸ் விருது, சிறந்த பெண் வீராங்கனைக்கான 'பிபா' பல்லான் டி ஆர் விருதும் வழங்கப்படவுள்ளது.

அடுத்த ஆண்டு ஜனவரி 10ஆம் திகதி சூரிச்சிலுள்ள 'பிபா' தலைமையகத்தில் நடைபெற வுள்ள விழாவில் விருது வழங்கப்படவுள்ளது. 2009ஆம் ஆண்டு 'பல்லான் டி ஆர்' மற்றும் 'பிபா' விருதுகளை பார்சிலோனாவின் ஆர்ஜென்ரீன வீரரான லயனல் மேசி பெற்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

விருதுக்குரிய வீரர்கள் அணிகளின் தலைவர்கள், பயிற்சியாளர்கள், பத்திரிகையாளர்கள் மற்றும் இணைய வாக்கெடுப்பு என்பன மூலம் தெரிவுசெய்யப்படுவர்.

## கைவிடப்பட்ட கோவா போட்டியில் போலி நுழைவுச் சீட்டுகள்

கோவா, ஒக். 30

இந்திய-ஆஸ்திரேலிய அணிகளுக்கிடையே கடந்த 24ஆம் திகதி நடைபெறவிருந்த ஒருநாள் கிரிக்கெட் போட்டி மழை காரணமாகக் கைவிடப்பட்டது.

அதற்கான நுழைவுச்சீட்டுத் தொகையைத் திருப்பியளிக்கும்போது ஏராளமான போலி நுழைவுச்சீட்டுகள் விற்கப்பட்டுள்ளமை தெரிய வந்துள்ளது.

இதுதொடர்பான விசாரணைக்கு, புனேயைச் சேர்ந்த அச்சகம் ஒன்றுக்கு கோவா கிரிக்கெட் சபை அழைப்பாணை விடுத்துள்ளது.

நுழைவுச் சீட்டுக்கான பணத்தைத் திருப்பியளிக்கும்போது ஒரே 'சீரியல்' எண் கொண்ட ஏராளமான நுழைவுச் சீட்டுகள் கையளிக்கப்பட்டமையால் கோவா கிரிக்கெட் சபை அதிகாரிகள் அதிர்ச்சியடைந்துள்ளனர்.

புனேயைச் சேர்ந்த அச்சகம் ஒன்றுக்கு 25,000 நுழைவுச் சீட்டுகளை அச்சிடுவதற்கான ஒப்பந்தம் வழங்கப்பட்டது.

அந்த அச்சக உரிமையாளரை விசாரித்த பிறகே இது குறித்த மேலதிக விவரங்கள் வெளியாகும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## வேலணை பிரதேச சபை மீள் கேள்வி அறிவித்தல் - 2010

| இல. | விபரம் | நாளொன்றுக்கான ஆகக்குறைந்த கேள்வித் தொகை | மீளளிக்கப்படாத கேள்விப் படிவக் கட்டணம் | மீளளிக்கக் கூடிய கேள்விப்பணம் |
|---|---|---|---|---|
| 01 | சாட்டி சிற்றுண்டிச்சாலை | 100.00 | 500.00 | 20,000.00 |

சாட்டி சிற்றுண்டிச்சாலை 15.11.2010 ஆம் திகதி முதல் 31.12.2010 ஆம் திகதி வரை நாள் குத்தகைக்கு வழங்கப்படும்.
கேள்விப் பத்திரம் வழங்குதல் - 01.11.2010 முதல் 04.11.2010 பிற்பகல் 2.30 மணி வரை
கேள்விப் பத்திரம் ஏற்றுக்கொள்ளுதல் - 09.11.2010 நண்பகல் 12 மணி வரை
கேள்வி திறக்கும் காலம் - 09.11.2010 பிற்பகல் ஒரு மணி

- கேள்விப் பத்திரம் பெறுவோர் ஆள் அடையாள அட்டை சமர்ப்பிப்பதுடன் அதன் ஒளிப்படப் பிரதியும் வழங்க வேண்டும்.
- கேள்விப் பத்திரம், கேள்வித் தொகை ஆகியவற்றுக்கு பெறுமதி சேர் வரி 12 % (வற் வரி) மேலதிகமாகச் சேர்க்க வேண்டும்.
- சமர்ப்பிக்கப்பட்ட கேள்வியினை ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் உரிமை வேலணைப் பிரதேச சபை செயலாளருக்கே உரியது.
- குத்தகை தொடர்பான மேலதிக விவரங்களை அலுவலக நேரத்தில் தலைமை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

பிரதேச சபை,வேலணை,
29.10.2010.

திரு. கெ. தவராசா, செயலாளர்,
பிரதேசசபை, வேலணை.


## யப்பான் ரேடர்ஸ்

நம்பிக்கை நாணயம் — உறுதி உத்தரவாதம்

தீபாவளியை முன்னிட்டு விசேட விலைக்குறைப்பு

Moto Lanka வால் கொள்வனவாளருக்கு விசேட அன்பளிப்பு

புதிய அறிமுகம் சிறுவரிலிருந்து பெரியோர் வரை Family Electric Bike

யப்பான் தொழில்நுட்ப மின்சார மோட்டார் சைக்கிள்கள்

★ எரிபொருள் தேவையில்லை
★ சாரதி அனுமதிப்பத்திரம் தேவையில்லை
★ பெற்றோல் மோ.சைக்கிள் ஒருலீற்றர் பெற்றோலிற்கு 40-70Km செலவு- 115ரூபா
★ மின்சார மோ.சைக்கிள்கள் ஒரு தடவை மின்வேற்றத்திற்கு 40-70Km செலவு- 13 ரூபா
சேமிப்பு 102 ரூபா

ஒருவருட உத்தரவாதம்

யாழ்.மாவட்டத்துக்குப் பிராந்திய முகவர்கள் தேவை.

இல.10-14, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
(முட்டாஸ் கடைச் சந்தி)
T.P.No: 0213209637
Hot Line: 0770868079

யாழ்மாவட்ட அங்கீகாரம் பெற்ற ஏக விநியோகஸ்தர்
JAPAN TRADERS
(விவேகானந்தா அச்சகக் கட்டடம்)



## விசேட விலைக் கழிவுகளுடன் !

சகல விதமான கணனித் தேவைகளுக்கும்

DCP Online UPS 1KVA–10KVA 2 Years Warranty With Battery
EPSON EXCEED YOUR VISION
TrustPort Antivirus Internet PC Security
Multimedia Projector
Color Printer
Dot matrix Printers
Multi SIM Dongule

| Assemble Computer | Option I | Option II |
|---|---|---|
| Processor | 2.7GHz | 2.7GHz |
| Mother Board | Asus G31 | Asus G31 |
| Ram | 1GB | 1GB |
| Hard Disk | 500GB | 320GB |
| DVD Writer | Samsung | Samsung |
| Monitor | 19"LCD | 15"LCD |
| Key Board/Mouse | PS/2 | PS/2 |
| UPS | DCP | DCP |
| Casing | Power Logic | Power Logic |
| Amount | 50,400.00 | 47,850.00 |

Others: DDR I Ram, IDE HDD, LCD TV Combo & Cartridges, Ribbon, Toner

With PC Internet Security

D-Link Building Networks for People — ADSL/ Broadband Routers — 03 years warranty & Other Net work items

## திருமுருகன் கொம் ஹெற்

259, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். ⟷ கிளிநொச்சி & வவுனியா



## வாசனா சம்பத

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இலக்கம்: 841 திகதி: 28.10.2010

| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கங்கள் | | | | போனஸ் இல: |
|---|---|---|---|---|---|
| I | 28 | 41 | 42 | 45 | 12 |

| | கூட்டு | பரிசுத் தொகை | வெற்றி பெற்றோர் |
|---|---|---|---|
| சுப்பர் பரிசு | ஆங்கில எழுத்தும் 4 இலக்கங்களும் சரியாயின் | 21,790,753.00 | - |
| 1ம் பரிசு | 4 இலக்கங்கள் சரியாயின் | 1,000,000.00 | 01 |
| 2ம் பரிசு | 3 இலக்கங்களும் போனஸ் இலக்கமும் சரியாயின் | 100,000.00 | 04 |
| 3ம் பரிசு | 3 இலக்கங்கள் மட்டும் சரியாயின் | 2,000.00 | 319 |
| 4ம் பரிசு | 2 இலக்கங்கள் மட்டும் சரியாயின் | 100.00 | 15362 |
| 5ம் பரிசு | 1 இலக்கம் மட்டும் சரியாயின் | 20.00 | 215256 |
| 6ம் பரிசு | ஆங்கில எழுத்து மட்டும் சரியாயின் | 20.00 | 31966 |

இவ்வாரம் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத் தொகை ரூ.
8,518,640.00

சுப்பர் பரிசுத்தொகை அடுத்த வியாழக்கிழமை
22,166,686.50

ஐந்து இலட்சம் அல்லது அதற்குக் கூடிய தொகைக்கான பரிசு அரசாங்க வரிச் சட்டதிட்டங்களுக்கு உட்பட்டது. பரிசைப் பெறுவதற்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

வெற்றி பெறும் டிக்கட்டுகள் சீட்டிழுப்புத் திகதியிலிருந்து 6 மாதங்கள் மட்டுமே செல்லுபடியாகும்.

தேசிய லொத்தர் சபை
234/2, காலி வீதி, கொழும்பு 03.
தொலைபேசி: 2470662, 2470663
அவசர தேவைக்கு: 2473360, 2433631
இணையம்: www.nlb.lk


# 31ஆம் நாள் நினைவஞ்சலி



## அமரர்

## Dr.K.V. துரைராஜா (அகத்தியர்)

**பிறப்பு: 21.01.1949 இறப்பு: 30.09.2010**

*எங்கள் அன்பான அப்பாவே*
*கண்ணிற்குள் கண்ணாய் எமைக் காத்து*
*எங்கள் கண்ணை விட்டு*
*அகன்றதேனோ அப்பா*

*உங்கள் கைவிரல் பிடித்து*
*நாம் நடக்க வழிகாட்டி*
*எங்கள் கைவிரல் பிடித்து*
*நீங்கள் நடக்க மறுத்த தேனோ அப்பா*

ஒருமாதம் மல்ல எத்தனை ஆண்டுகள் ஆனாலும் என்றும் உங்கள் நினைவுகள் எம் நெஞ்சோடு இருக்கும். உங்கள் ஆத்ம சாந்திக்காக என்றும் இறைவனை வேண்டுகின்றோம்.

கடந்த 30.09.2010 இல் இறைவனடி சேர்ந்த எங்கள் அன்புத் தெய்வத்தின் வீட்டுக் கிருத்திய நிகழ்வு இன்று (30.10.2010) சனிக்கிழமை மு.ப. 10.30 மணியளவில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

குறிப்பு -இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாகவும் ஏற்றுக்கொள்ளவும்.

29, முத்த விநாயகர் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

என்றும் உங்கள் நினைவுகளுடன்
மனைவி, பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை, மானிப்பாய் 2011ஆம் ஆண்டுக்கான கேள்வி அறிவித்தல்

வலிகாமம் தென்மேற்குப் பிரதேசசபையின் எல்லைக்குட்பட்ட சந்தைகள், இறைச்சிக் கடைகள், கோழிக்கடைகள், கருவாட்டுக் கடைகள் என்பவற்றை 2011.01.01 தொடக்கம் 2011.12.31ஆம் திகதி வரை குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்விகள் கோரப்படுகின்றன.

கேள்விப்பத்திரம் வழங்கும் இறுதித்திகதி : 2010.11.11 பி.ப 1.00 மணி வரை
கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளும் திகதி : 2010.11.12 ந.ப 12.00 மணி வரை
கேள்வி திறக்கும் திகதி : 2010.11.12 பி.ப 2.00 மணி

| இல | சந்தைகள் (துவிச்சக்கர வண்டிப் பாதுகாப்பு நிலையங்களுடன்), இறைச்சிக்கடைகள், கோழிக்கடைகள், கருவாட்டுக் கடைகள் விவரம் | மீளளிக்கப் படாத கேள்விப் பத்திரப் பணம் (NBT, VAT) தவிர | மீளளிக்கப் படும் கேள்வி வைப்புப் பணம் | ஏற்றுக் கொள்ளக் கூடிய ஆகக் குறைந்த கேள்வித் தொகை (NBT, VAT)தவிர | மாதாந்த வாடகை (NBT, VAT) தவிர்ந்த |
|---|---|---|---|---|---|
| | மானிப்பாய் பட்டின உப அலுவலகம் | | | | |
| 1 | மானிப்பாய் பொதுச் சந்தை | 1,000.00 | 10,000.00 | 1,050,000.00 | - |
| 2 | மானிப்பாய் சந்தை மாட்டிறைச்சிக் கடை | 1,000.00 | 5,000.00 | 242,000.00 | 400.00 |
| 3 | மானிப்பாய் சந்தை ஆட்டிறைச்சிக் கடை | 500.00 | 1,500.00 | 62,000.00 | 300.00 |
| 4 | மானிப்பாய் சந்தை கோழியிறைச்சிக் கடை | 1,000.00 | 5,000.00 | 198,000.00 | - |
| | மானிப்பாய் கிராம உப அலுவலகம் | - | - | - | - |
| 1 | காக்கைதீவு பொதுச்சந்தை | 500.00 | 1,500.00 | 58,000.00 | - |
| 2 | நவாலி பிரசாத் சந்தை | 1,000.00 | 5,000.00 | 253,000.00 | - |
| 3 | சாவற்கட்டு சந்தை | 1,000.00 | 5,000.00 | 199,000.00 | - |
| 4 | சண்டிலிப்பாய் சந்தை | 500.00 | 1,500.00 | 36,000.00 | - |
| 5 | நவாலி பிரசாத் சந்தை மாட்டிறைச்சிக் கடை | 500.00 | 2,000.00 | 90,000.00 | 400.00 |
| 6 | நவாலி பிரசாத் சந்தை ஆட்டிறைச்சிக் கடை | 500.00 | 1,500.00 | 30,000.00 | 300.00 |
| 7 | நவாலி பிரசாத் சந்தை கோழியிறைச்சிக் கடை | 500.00 | 1,500.00 | 15,000.00 | - |
| 8 | ஆனைக்கோட்டைச் சந்தி மாட்டிறைச்சிக்கடை | 1,000.00 | 5,000.00 | 218,000.00 | - |
| 9 | ஆனைக்கோட்டைச் சந்தி ஆட்டிறைச்சிக்கடை | 500.00 | 1,500.00 | 55,000.00 | - |
| | பண்டத்தரிப்பு பட்டின உப அலுவலகம் | - | - | - | - |
| 1 | பண்டத்தரிப்பு பொதுச்சந்தை (மரக்கறி) | 1,000.00 | 10,000.00 | 355,000.00 | - |
| 2 | பண்டத்தரிப்பு பொதுச்சந்தை (மீன்) | 1,000.00 | 15,000.00 | 1,125,000.00 | - |
| 3 | பண்டத்தரிப்பு சாந்தை சந்தை | 500.00 | 1,500.00 | 16,500.00 | - |
| 4 | பண்டத்தரிப்பு சந்தை மாட்டிறைச்சிக்கடை | 500.00 | 1,500.00 | 35,000.00 | 600.00 |
| 5 | பண்டத்தரிப்பு கோழியிறைச்சிக்கடை | 500.00 | 1,500.00 | 30,000.00 | 600.00 |
| 6 | பண்டத்தரிப்பு சந்தை கருவாட்டுக்கடை இல.1 | 500.00 | 1,500.00 | 7,500.00 | 600.00 |
| 7 | பண்டத்தரிப்பு சந்தை கருவாட்டுக்கடை இல.2 | 500.00 | 1,500.00 | 7,500.00 | 600.00 |
| | பண்டத்தரிப்பு கிராம உப அலுவலகம் | - | - | - | - |
| 1 | மாகியப்பிட்டிச் சந்தை | 500.00 | 2,000.00 | 120,000.00 | - |
| 2 | இளவாலை பொதுச்சந்தை | 1,000.00 | 5,000.00 | 272,000.00 | - |
| 3 | மாதகல் பொதுச்சந்தை | 500.00 | 1,500.00 | 95,000.00 | - |
| 4 | மாகியப்பிட்டிச் சந்தை மாட்டிறைச்சிக்கடை | 500.00 | 1,500.00 | 45,000.00 | 250.00 |
| 5 | மாகியப்பிட்டிச் சந்தை ஆட்டிறைச்சிக்கடைட | 500.00 | 1,500.00 | 6,200.00 | 250.00 |
| 6 | மாதகல் சந்தை மாட்டிறைச்சிக்கடை | 500.00 | 1,500.00 | 20,000.00 | 250.00 |
| 7 | மாதகல் சந்தை ஆட்டிறைச்சிக்கடை | 500.00 | 1,500.00 | 5,500.00 | 250.00 |
| 8 | இளவாலை சந்தை மாட்டிறைச்சிக்கடை | 1,000.00 | 2,000.00 | 100,000.00 | - |

01. கேள்விப்பத்திரங்கள் மூன்று பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதி உட்பட இரு பிரதிகளைச் "செயலாளர், வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை, மானிப்பாய்" என்ற முகவரிக்கு அரக்கு முத்திரையிட்டுத் தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக எழுதப்பட்டுப் பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும். அல்லது அதற்கென தலைமையலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் உரிய நேரத்துக்கு முன் இடப்படல் வேண்டும். மூன்றாவது பிரதி "பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், உள்ளூராட்சித் திணைக்களம், யாழ்ப்பாணம்" என்னும் முகவரியிட்டுப் பதிவுத்தபால் மூலம் அனுப்பிவைத்தல் வேண்டும்.

02. கேள்விப்பத்திரம் பெற விரும்புவோர் விண்ணப்பங்களுடன் தேசிய அடையாள அட்டையையும் அதன் நிழற்படப் பிரதியையும் கொண்டுவருவதுடன், தாம் வதியும் இடத்தின் வதிவிடச் சான்றிதழையும் சமர்ப்பித்தல் வேண்டும்.

03. உள்ளூராட்சி மன்றங்களால் தவறுநராகக் கணிக்கப்பட்ட எவருக்கும் கேள்விப்பத்திரம் வழங்கப்படமாட்டாது. படிவம் வழங்கப்பட்டபின் கண்டுபிடிக்கப்பட்டால், அவரின் கேள்விப் பத்திரம் நிராகரிக்கப்படும்.

04. ஆகக்குறைந்த கேள்வித்தொகையிலும் குறைந்த கேள்வி கோருபவர்களின் கேள்வி நிராகரிக்கப்படுவதுடன் கேள்வி வைப்புப் பணமும் மீளளிக்கப்படமாட்டாது.

05. இறைச்சிக்கடைகளுக்கு மாதாந்த வாடகை செலுத்தப்படல் வேண்டும்.

06. கேள்விப் படிவக் கட்டணம், கேள்வித்தொகை, மாத வாடகை என்பவற்றுக்கு அவற்றின் பெறுமதியின் தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி (NBT) 3%, 12%(VAT) பெறுமதிசேர் வரிசெலுத்தப்படல் வேண்டும்.

07. கேள்வி நிபந்தனைகள் அறிவுறுத்தல்களுக்கு அமையாத கேள்விக் கோரிக்கைகளை நிராகரிக்கவும், எந்தவொரு கேள்வியையும் காரணம் காட்டாது ஏற்கவோ நிராகரிக்கவோ செயலாளருக்குப் பூரண அதிகாரம் உண்டு.

08. தெரிவு செய்யப்படும் கேள்விக்காரர்கள் கேள்வித் தொகையில் 1/3 பகுதியை 2010.11.23ஆம் திகதிக்கு முன்னர் செலுத்திச் சபையுடன் ஒப்பந்தம் ஒன்றினைச் செய்து கொள்ள வேண்டும்.

09. கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்வியாளரோ அல்லது அவரது பிரதிநிதியோ சமுகமளிக்கலாம்.

10. மானிப்பாய் பொதுச்சந்தை, பண்டத்தரிப்புப் பொதுச்சந்தை என்பவற்றுக்குரிய விண்ணப்பப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்ள விரும்பின், ஏதாவதொரு வங்கியில் தங்கள் பெயரில் முறையே ரூபா 1,50,000.00 இற்கும், ரூபா 75,000.00 இற்கும் குறையாது வைப்பில் உள்ளமைக்கான ஆதாரங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

11. கேள்வி சம்பந்தமான மேலதிக விவரங்களைத் தலைமை அலுவலகத்திலும் உப அலுவலகங்களிலும் பெற்றுக்கொள்ளலாம்.

*வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை,*
*தலைமையலுவலகம்,*
*மானிப்பாய்.*
*2010.10.29.*

(சி/572246)

**திருமதி ப. சிவலிங்கம்,**
*செயலாளர்,*
*வலிகாமம் தென்மேற்கு*
*பிரதேசசபை,*
*மானிப்பாய்.*

## மீளக் குடியமர்ந்த குரும்பசிட்டி மக்களுக்கு 4ஆம் கட்டக் கொடுப்பனவு

யாழ்ப்பாணம்,ஒக்.30

மீளக் குடியமர்ந்த குரும்பசிட்டிக் கிராம மக்களுக்கான நான்காம் கட்ட உதவுத் தொகை உடுவில் வீதி, மருதனார் மடத்தில் அமைந்துள்ள குரும்பசிட்டி கிராம அபிவிருத்திச் சங்கத்தின் தற்காலிக பணிமனையில் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு வழங்கப்படவுள்ளதாக சங்கத்தின் உப தலைவர் அறிவித்துள்ளார்.

வன்னியிலிருந்து இடம்பெயர்ந்து வந்த சுமார் 93 பயனாளிகளுக்கே 4ஆம் கட்டக் கொடுப்பனவாக மூன்று லட்சத்து ஐம்பதாயிரம் ரூபாவுக்கு மேற்பட்ட தொகை வழங்கப் படவுள்ளது.

குரும்பசிட்டி நலன்புரி சபையின் கனடா நிறுவனம் மற்றும் வெளிநாடுகளில் வதியும் குரும்பசிட்டி கிராமத்தைச் சேர்ந்தவர்களின் நிதி மூலமே இந்தக் கொடுப்பனவுகள் வழங்கப்பட்டு வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ-16)

## நீர்வேலியில் வாழைக்குலை விலை வீழ்ச்சி

கோப்பாய்,ஒக்.30

நீர்வேலி வாழைக்குலைச் சந்தையில் வாழைக்குலைகளின் விலை வீழ்ச்சிகண்டு வருகின்றது. கதலி இனம் கிலோ 20 ரூபா முதல் 40 ரூபா வரையும் இதரை இனம் 25 ரூபா முதல் 40 ரூபா வரை கொள்வனவு செய்யப்படுகின்றன.

தற்போது தென்னிலங்கை வியாபாரிகள் தவிர்த்து கிழக்கிலங்கை மற்றும் வவுனியா வியாபாரிகளே கொள்வனவில் ஈடுபட்டு வருகின்றனர். (ஒ-72)

## ஒருங்கிணைப்பு குழுக் கூட்டம்

தென்மராட்சி,ஒக்.30

தென்மராட்சி பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் எதிர்வரும் 2ஆம்திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும். பிரதேச ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான சில்வெஸ்திரி அலன்ரின் தலைமையில் கூட்டம் நடைபெறும். (201-207)

## கடற்கரை வீதிக்கு மின்விளக்குகள்

கொழும்புத்துறை, ஒக். 30

மணியந்தோட்டம், வசந்தபுரம் பகுதிகளில் மக்கள் மீள் குடியேறிவருவதையடுத்து கொழும்புத்துறை கடற்கரை வீதிக்கு மின் விளக்குகள் பொருத்தப்பட்டு வருகின்றன.

மின்சார சபையினால் வசந்தபுரம் குடியிருப்புகளுக்கு முன்பாக மின்விளக்குகள் பொருத்தப்பட்டு ஒளிர்ந்து கொண்டிருப்பதால் தற்காலிக தறப்பாள் கொட்டிலில் குடியேறியுள்ள மக்கள் இரவில் அச்சமின்றி வசிக்கக் கூடியதாக இருப்பதாகத் தெரிவிக்கின்றது. (204-135)


STUDY IN UK



யாழ்.நகரில் மிகக் குறைந்த செலவில்...

IELTS அவசியமில்லை

லண்டனில் தரம் வாய்ந்த பல்கலைக்கழகங்கள், கல்லூரிகளில் உங்கள் உயர்கல்வியைத் தொடர்வதற்கு

★ கல்விக் காலத்திலேயே குடும்பத்தினரை U.K.க்கு அழைக்கும் வாய்ப்புகள்
★ Admission within 3 days
★ 100% Visa உத்தரவாதம் - ஆவணங்கள் சரியாக இருப்பது முக்கியம்
★ ஆகக் குறைந்த கல்வித் தகைமை G.C.E. (O/L)
★ U.K - B.A - Highly Trusted College
★ அனைத்து நாடுகளுக்குமான விசா பெறுவதற்குரிய ஆலோசனைகள்
★ இலகு தவணைக் கொடுப்பனவு வசதிகள்
★ மிகக் குறைந்த கட்டணத்தில் Sponsor வசதிகள்
★ Interview இன்றி மூன்று நாள்களுக்குள் அனுமதி
★ ஆங்கில அறிவு இல்லாதவர்களுக்கு விசேட ஏற்பாடுகள்

இறுதிச் சந்தர்ப்பத்துக்கு முந்திக்கொள்ளுங்கள்.

★ அலுவலக நேரம்: திங்கள் - சனி வரை காலை 9.00 - 4.00 வரை
★ அலுவலக விலாசம்: 245, பலாலி றோட், கந்தர்மடம்.
★ உத்தரவாதமான பயணத்துக்கு உள்ளூரில் உங்கள் நம்பிக்கையான நண்பன்...

தொடர்புகளுக்கு: 0770871616


# மரண அறிவித்தல்கள்

## முருகன் இராசையா (இராசு)



(முன்னாள் சாரதி, இ.போ.ச.)

சோடாக்கடை ஒழுங்கை, ஊரிக்காட்டை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட முருகன் இராசையா (26.10.2010) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகன் - தெய்வானை தம்பதியரின் அன்பு மகனும் நேசமணியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான சுந்தரம், சின்னக்கிளி, தம்பையா, தங்கன் மற்றும் இராசம்மா, செல்லத்தம்பி (சின்னராசா) ஆகியோரின் அன்புச் சகோதரரும் இராஜகுமாரி (அமெரிக்கா), இராஜேஸ்வரன் (அமெரிக்கா), இராஜலஷ்சுமி (லண்டன்), இராஜரமணன், இராஜகாந்தன், இராஜகமலம் ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஜெயபாலன் (அமெரிக்கா), சிறீஸ் கந்தராசா (லண்டன்), ரஜினாவதி (கனடா), நிமாலினி ஆகியோரின் அன்பு மாமனாரும் பிரகாஷ், நர்மதா, மதுசன் (அமெரிக்கா), டிலக்ஷன், கரிஷனா, பவித்திரன், அஜந்தன் (லண்டன்), விதுஷன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

தவிர்க்க முடியாத காரணத்தால் ஒத்திவைக்கப்பட்ட அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (31.10.2010) ஞாயிற்றுக்கிழமை அவரின் இல்லத்தில் மு.ப.10 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக ஊரிக்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சோடாக் கம்பனி ஒழுங்கை,*
*ஊரிக்காடு, வல்வெட்டித்துறை.*
**T.P. : 0776224038** (சி/572245)

*தகவல் :*
**குடும்பத்தினர்.**

## திருமதி பொன்ராசா நித்தியானந்ததேவி (தேவா)



148, சேர் பொன். இராமநாதன் வீதி, கலட்டியைப் பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட கதிரவேல் சாமியாரின் மகளான பொன்ராசா நித்தியானந்ததேவி 21.10.2010 வியாழக்கிழமை லண்டனில் காலமானார்.

அன்னார் பொன்ராசாவின் அன்பு மனைவியும் கரிராமஜெயம் (ஜேர்மனி), மகேஸ்வரன் (யாழ்ப்பாணம்), ரவீந்திரகுமார் (பிரான்ஸ்), அருள்பிரியா (லண்டன்), கவிதாம்பிகா (லண்டன்), உஷாநந்தினி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயும் செந்தினி (ஜேர்மனி), கனிதா (ஆசிரியர்), கிருஸ்ணராஜ் (லண்டன்), வதனா (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு மாமியும் ஜெகதீஸ்வரன், ஏனஸ், எமிலினி, கீர்த்தி, கிரிஸ்ரினா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.10.2010) சனிக்கிழமை லண்டனில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தகவல் :*
*மகன் - p.மகேஸ்வரன் (ஆசிரியர், மானிப்பாய் இந்துக்கல்லூரி)*
**தொ.பே : 0772887737**
**00442089919060**

*148, சேர் பொன்*
*இராமநாதன் வீதி,*
*யாழ்ப்பாணம்.*

(சி/572247)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மித்ராவின் மாயாஜாலம் நேற்று ஆரம்பம்



பேராசிரியர் மித்ராவின் மெய்சிலிர்க்க வைக்கும் காட்சிகள் சில.
(படங்கள்: ரட்ணம்)

யாழ்ப்பாணம், ஒக்.30

உலகப் புகழ்பெற்ற மாயாஜாலச் சக்கரவர்த்தி பேராசிரியர் பி.எம்.மித்ராவின் மெய்சிலிர்க்க வைக்கும் மாயாஜாலக் காட்சிகள் யாழ். வீரசிங்க மண்டபத்தில் நேற்று வெள்ளிக்கிழமை ஆரம்பமாகின.

வன்னியில் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மாணவர்களின் கல்வி வளர்ச்சி நிதிக்காக லயன்ஸ் கழகத்தால் நடத்தப்படுகின்ற இந்த மாயாஜாலக் காட்சிகள் இன்று சனிக்கிழமையும் நாளை ஞாயிற்றுக்கிழமையும் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

இன்று சனிக்கிழமை பிற்பகல் 2 மணி, மாலை 6 மணி ஆகிய நேரங்களில் இரு காட்சிகள் இடம்பெறும்.

நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணிக்கு முதலாவது காட்சியும் பிற்பகல் 2 மணிக்கு இரண்டாவதுகாட்சியும் இடம் பெறும்.

வாள் ஒன்றை நிமிர்த்தி வைத்து அதில் யுவதி ஒருவரை கிடத்துதல், கூரிய வாளினால் யுவதி ஒருவரை இருதுண்டாக வெட்டுதல் ஆகிய வியக்க வைக்கும் காட்சிகள் உட்பட பார்வையாளர்களை மெய்சிலிர்க்க வைக்கும் பல்வேறு காட்சிகளை நிகழ்த்துகின்றார் பேராசிரியர் மித்ராவும் அவரின் குழுவினரும்.

நேற்றைய காட்சிக்கான வீரசிங்கம் மண்டபத்தில் நூற்றுக்கும் மேற்பட்டோர் திரண்டனர். (த-9)

## ரூபா 90 லட்சம் நஷ்டஈடு

சிங்கப்பூரை அண்டிய கடற்பரப்பில் பயணித்துக் கொண்டிருந்த சிமனேறு என்ற கப்பலில் கடமையாற்றியபோது காணாமற்போன கப்பல் பணியாளர் எஸ்.ஏ.பெரேரா என்பவரின் தந்தைக்கு 90 லட்ச ரூபா நட்டஈடு வழங்கப்பட வுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

குறித்த கப்பல் பணியாளர் தற்கொலை செய்து கொண்டதாக கப்பல் நிறுவனம் முன் னர் அறிவித்திருந்தது.

கப்பலில் பணியாற்றிய ஏனையவர்களிடம் நடத்திய விசாரணைகளின் போது இது தற்கொலைச் சம்பவமல்ல என்பது புலனாகியதாக இலங்கை வர்த்தகக் கப்பல் பணியாளர் சங்கம் சுட்டிக் காட்டியுள்ளது.

நட்டஈட்டுத் தொகை வழங்கும் நிகழ்வு இன்று சனிக்கிழமை தொழில் அமைச்சர் காமினி லொக்குகே தலைமையில் நடைபெறும். (ஒ)

அன்பொளி கல்வியகம்
யாழ். இந்துக்கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்.
தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை - 2010
சித்தியடைந்த மாணவர்களுக்கான
பரிசளிப்பு நிகழ்வு
எமது கல்வியகத்தில் கற்றுச் சித்தியடைந்த மாணவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வு 31.10.2010 ஞாயிற்றுக்கிழமை (நாளை) பிற்பகல் 2.00 மணிக்கு சைவபரிபாலன சபை மண்டபத்தில் நடைபெறும். மாணவர்களைத் தவறாது கலந்து சிறப்பித்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.
இயக்குநர்

THE COLLEGE OF CHEMISTRY
Specific Centre for Chemistry
A/L - 2011 DAY CLASSES
Sat, sun 7.30 - 9.30 Tu, Th 3.00 - 4.30
★ அலகு ரீதியான நுணுகிய கற்பித்தல்
★ அச்சடிக்கப்பட்ட பாடக்குறிப்புகள்
★ மாதிரி வினாக்கள்
★ கடந்தகால தேர்வு வினாக்கள்
★ தொடர் பயிற்சிப் பரீட்சைகள்
DIAS B.sc (Hons) Spl in Chem
32, பழம் றோட், கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

சாரங்கன் பூஞ்சோலை
* நல்ல இன குறோட்டன்கள்.
* ஒட்டு றோசாக்கள் மற்றும் பூங்கன்றுகள்.
* ஒட்டுமா, ஒட்டுத்தேசி, ஒட்டுப்பலா மற்றும் பல பயன்தரு மரக்கன்றுகள்.
* சிமெந்திலான, பிளாஸ்டிக்கிலான சாடிகள்.
* பூங்கன்றுகளை நோய்த்தாக்கத்துக்குள்ளாகாமல் தடுக்கும் மருந்துவகைகள்.
போன்றவற்றை ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள நாட வேண்டிய ஒரே இடம்.
சாரங்கன் பூஞ்சோலை
295, பலாலி வீதி, ஆலடிச்சந்தி, திருநெல்வேலி.

யாழ்ப்பாணத்தில் முதல் முறையாக!
25க்கும் அதிகமான தொழில்வாய்ப்புக்களுக்கு உத்தரவாதமான ஊடகக் கற்கைநெறிகள்
➤ கணனியுடன் ஊடகவியல்
➤ வானொலி ஊடகவியல்
➤ தொலைக்காட்சி ஊடகவியல்
➤ பத்திரிகை பக்க வடிவமைப்பு
➤ கிராஃபிக் டிசைனிங் ➤ ஃபோட்டோகிராஃபி
3 மாத கற்கைநெறி - 2 மாத பயிற்சி
விளக்கக் கருத்தரங்கு
நாளை ஞாயிறு காலை 10 மணிக்கு
சிகரம் ஊடக இல்லம்
221, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்
தொ.பே: 021 300 80 60, நேரடி: 077 77 33 931

தற்போது தரம் 4 கற்கும் மாணவர்களுக்கான
புலமைப் பரிசில் வகுப்பும் மாதிரிப் பரீட்சையும்-2011
(நாவலர் வெளியீடு)
ஆரம்பம் : 30.10.2010 சனி பி.ப. 3 மணி
பிரபல புலமைப் பரிசில் ஆசான்
S.கோவர்த்தன் B.A. (Dip. in. Edu)
★ அனுமதிகள் இன்றுமுதல் பெறலாம்.
★ ஒரு பிரிவில் 30 மாணவர்கள் மட்டும்.
★ வாரத்தில் 5 நாள்கள் வகுப்புகள்.
நாவலர் கல்வி நிலையம், ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

வட பிராந்தியத்திற்கான DHL சேவையினை
தீபாவளிப் பண்டிகை விசேட விலைக் கழிவுடன் கொண்டாடுங்கள்
ஆகாய கடல்வழி மார்க்கமாக 220க்கும் மேற்பட்ட நாடுகளுக்கான துரித தபால்கள் பொதிகள் சேவை
கடிதங்கள், ஆவணங்கள், அன்பளிப்புப்பொருட்கள் உணவுப் பொருட்கள், உடுபுடவைகள், CD,DVD மற்றும் சகல விதமான பொருட்களையும் மிக விரைவாக அனுப்பிடலாம்
DHL WORLDWIDE EXPRESS
➤ TCN Express
No-28,Nelson Place, Colombo-6
திருமுருகன் கொம் ஹெற்
இல-259, கே. கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.

புத்தம் புதிய அழகிய
திருமண அழைப்பிதழ்கள்
தற்போது மலிவு விலையில்



ADORNA CARDS
www.andradesigns.com
மங்களகரமான அழகிய திருமண அழைப்பிதழ்களை
எமது இணையத்தளத்தினூடாகவோ அல்லது நேரடியாகவோ பார்வையிட்டு பிறிண்ட் வசதியுடன் பெற்றுக்கொள்ள முடியும்
நேரடியாக தொடர்பு கொள்ள வேண்டிய முகவரிகள்
ANDRA DIGITAL IMAGE
# 356A, கஸ்தூரியார் வீதி, நாவலர் சந்தி, யாழ்ப்பாணம்.
# 68, உப்புமடம் சந்தி,கே. கே. எஸ் வீதி, கோண்டாவில்.
T.P :021 2228929, 0776622981,0718561744.
இணையத்தள முகவரி : www.andradesigns.com

# மரண அறிவித்தல்

## சரவணை சுப்பிரமணியம்

(இளைப்பாறிய கணக்காளர்)



அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும், முடக்காடு நெல்லியடியை வசிப்பிடமாகவும் கொண்ட இளைப்பாறிய கணக்காளர் (TEA Company) சரவணை சுப்பிரமணியம் 28.10.2010 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஆழ்வார் சரவணை- அன்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற குமாரு- மீனாட்சி தம்பதியரின் அன்பு மருமகனும் ராஜேஸ்வரியின் அன்புக் கணவரும் ஜெயவதன் (அவுஸ்திரேலியா), சபிதா (லண்டன்), ஆகியோரின் அன்புத் தந்தையும் தேவகுமார், ஜெயதீஸ்வரன் ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்றவர்களான சுந்தரம், செல்வம், பொன்னையா ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை மற்றும் வாலாம்பிகை, ஞானம்பிகை, கிருஷ்ணமூர்த்தி (கனடா), யோகமூர்த்தி (கனடா), சறோஜினி, யோகேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனரும் செ.ஸ்ரீநிவாசன் (மேலதிக அரசாங்கஅதிபர், கிளிநொச்சி மாவட்டம்), த.நித்தியானந்தன் ஆகியோரின் அன்புச் சகலனும், நிகேஷ், தனுஷ், பானுஜன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.10.2010) சனிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக சோனப்பு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லபடும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
முடக்காடு, நெல்லியடி. (104471) மனைவி, பிள்ளைகள்.

Barnabas பர்ணபாஸ் இன் தீபாவளியை முன்னிட்டு மாபெரும் மலிவு விற்பனை
★ 29" Sony Flat TV, 21" FlatTv, 14" TV மிக மிகக் குறைந்த விலையில்
★ தற்போது 21" TV 12,490 ரூபா மட்டுமே....
★ எங்கும் பெறமுடியாத உத்தரவாதமும் விற்பனைக்குப் பிந்திய அதி வேகமான சேவையும் எம்மிடம் மட்டுமே. உடனே அழையுங்கள் 0777448668
★ எம்மிடம் கணினி மற்றும் கணினி உதிரிப்பாகங்களைக்குறைவான விலையில் பெற்றுக்கொள்ளலாம்.
Life Time Free Service
5வருட உத்தரவாதம்
உடன் விரையுங்கள் உங்கள் தெரிவுக்கு...
247, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (ஸ்ரீதர் தியேட்டர் அருகில்)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 30.10.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org